# கட்டுரைச் செல்வம்

ஆசிரியர் :

டாக்டர். மா. இராசமாணிக்கனார்

M. A., L. T., M. O. L., PH. D.

(Paper used. 24 lbs. white printing)

வெளியிடுபவர் :

**விக்டோரியா பப்ளிஷிங் ஹவுஸ்**

மாயூரம். (மயிலாடுதுறை)

*1959*

உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 1-25

முதற்பதிப்பு: 1960

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT - BOOK COMMITTEE
(for Non-detailed Study)
(Vide page 18, Supplement to part I-B of the
Fort St. George Gazette No. 19 C, dated 18, May, 1960)

சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடப் படத்தை இந்நூலுள் சேர்த்துக்கொள்ள இசைவளித்த பல்கலைக் கழகப் பதிவாளர் அவர்கட்கு எங்கள் நன்றி உரியது.

— நூல் வெளியிட்டாளர்.

விக்டோரியா (பவர்) பிரிண்டிங் ஒர்க்ஸ், மாயூரம்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சமய தத்துவப் பேராசிரியர் | ... | 1 |
| 2. | பண்டை இந்தியப் பல்கலைக் கழகம் | ... | 15 |
| 3. | சேரன் செங்குட்டுவன் | ... | 30 |
| 4. | பிரான்ஸிஸ்கோ பிஸாரோ | ... | 44 |
| 5. | புறநானூறு | ... | 59 |
| 6. | மோட்டார் மன்னர் (ஹென்றி போர்டு) | ... | 72 |
| 7. | சிற்பக்கலை | ... | 87 |
| 8. | டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் | ... | 99 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

# தேசீய கீதம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது
அவை நின் ஆசியை வேண்டுகின்றன:
நின் புகழைப் பாடுகின்றன,

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# 1. சமய தத்துவப் பேராசிரியர்

[ டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் ]

## இந்தியாவின் சிறப்பு

பண்டைக் கால முதலே நாகரிகம் பெற்று விளங்கும் நாடுகள் சிலவற்றுள் இந்தியா ஒன்று. பண்டைக் காலத்தில் அது சிறந்து விளங்கியது போலவே இன்றும் உலக அரங்கில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பழமைக்குரிய பழம்பொருளாய், புதுமைக்குரிய புதுப் பொருளாய் இந்தியா விளங்குவது கண்டு உலக நாடுகள் வியந்து போற்றுகின்றன. திருக்குறள், சாகுந்தலம், இராமாயணம், மாபாரதம் முதலிய சிறந்த பயனுடைய நூல்களை அளித்து இந்தியா தன்னுடைய கலைப் புலமையை யாவரும் உணருமாறு செய்துள்ளது.

உலகப் பெரு நாடுகள் யாவும் விஞ்ஞானக் கலையை அழிவு வேலைக்குப் பயன்படுத்துவதில் முனைந்து நின்றபோதெல்லாம் அமைதிபற்றிப் பேசி, கொல்லாமை பற்றி விளக்கம் கூறி, விஞ்ஞானக் கலையை ஆக்கத்துறைக்குப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்த பெருமை இந்திய நாட்டுக்குத்தான் உண்டு. பீரங்கிகளும், வெடி குண்டுகளும், துப்பாக்கிகளும் மிகுந்துள்ள இந்த நூற்றுண்டில், புரட்சி செய்து குழப்பம் விளைவித்து எண்ணற்ற மக்களைக் கொன்று குவித்து இரத்த

வெறியாட்டம் ஆடியவர்கள் வாழ்ந்த பகுதியில், துப்பாக்கியோ, பீரங்கியோ, வெடிகுண்டோ வேண்டா என்று கூறிவிட்டு மனச்சான்றை நம்பி, அன்புணர்ச்சியைப் போற்றித் துணை யாரும் வேண்டா எனக் கூறி, நடந்துசென்று, அமைதியை நிலைநாட்டிய சிறப்பு இந்திய நாடு ஈன்றெடுத்த தவப் புதல்வர் *காந்தியடிகளுக்கே* உரியதாகும். சொல்லால் ஒன்றனைப் பெறுவதைவிடச் செயலால்-ஆரவாரம் இல்லாமல் அமைதியாகப் பெற வேண்டும் என்று காந்தியடிகள் கூறிய அறிவுரையை - உலக நாடுகள் பின்பற்றுவிடினும் பாராட்டுகின்றன. இதனை நோக்கும்போது, இந்தியநாடு தனக்கென ஒரு சிறந்த நெறியை நெடுங்காலத்துக்கு முன்னரே அமைத்துக் கொண்டது என்பதும், அந்தப் பாதையில் இன்று தான் மட்டும் செல்லாமல் உலக நாடுகள் பல வற்றையும் அழைத்துச் செல்ல முயல்கின்றது என்பதும் நன்கு புலனாகும்.

### அரசியல் தலைவர்கள்

காந்தியடிகள் அறநெறியை—கொல்லாமைப் பெருநெறியைப் பின்பற்றி இன்று இந்திய அரசியல் தலைவர்கள் நடக்கின்றனர். பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு ஆசியாக் கண்டத்தின் ஒளிவிளக்காக விளங்குகின்றார். உலக நாடுகள், தங்கள் சிக்கல் களில் அவர் தலையிட வேண்டும் என்றும், நல்ல பாதையைக் காட்ட வேண்டும் என்றும் விரும்புகின்றன. அப் பெரியார் இந்திய நாட்டின் ஒற்றுமைக்காக மிகுதியாகப் பாடுபடுகின்றார்; அத்துடன் நில்லாமல், 'யாதும் ஊரே, யாவரும்

கேளிர்' என்னும் பொன்மொழிக்கேற்ப, உலக நாடுகள் ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்றும் உழைக்கின்றார்.

இன்று இந்தியக் குடியரசுத் தலைவராக இருப்பவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் என்பவர். அவர் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறியவரேயாவர். அவருக்கு அடுத்துத் துணைத்தலைவராக இருப்பவர் டாக்டர் ச. இராதா கிருஷ்ணன் என்பவர். இவர்கள் இருவரும் உலகம் சுற்றிய பெருமை கொண்டவர்கள்; உண்மை அன்புக்கும் முயற்சிக்கும் சிறப்பிடம் தருபவர்கள். இவருள் இராதாகிருஷ்ணன் என்பவர் சமயத்துறையிலும், தத்துவத் துறையிலும் வல்லவர்.

## பிறப்பும் இளமையும்

டாக்டர் இராதாகிருஷ்ணன் உலகெலாம் சுற்றிச் சமயம் பற்றியும், தத்துவம் பற்றியும் சிறந்த சொற்பொழிவுகளாற்றிப் புகழ் கொண்டவர். ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், காசி இந்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும் இருந்து தொண்டாற்றியவர். அவர் வரலாறு நாம் படித்தறியத் தகும் சிறப்பு வாய்ந்தது.

இராதாகிருஷ்ணன் கி. பி. 1888-ஆம் ஆண்டில் முருகன் திருக்கோவில் கொண்டுள்ள திருத்தணிகையில் பிறந்தார். அவருடைய தந்தையார் வேதங்களை நன்கு கற்றவர். தாயார் இறையன்பு மிக்கவர். பெற்றோர் குடும்ப வாழ்வில் எல்லா வகையான சடங்குகளையும் மேற் கொண்டவர். அதனால் அவர் இளமை முதலே

இறையன்பு கொண்டவராய் விளங்க வாய்ப்பு ஏற்பட்டது. இராதாகிருஷ்ணன் தமது பதின் மூன்றும் வயது வரையில் திருத்தணிகையிலும்; திருப்பதியிலும் படித்தார்; பின்னர்ச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பயின்றார்; 1905-ஆம் ஆண்டில் எப்.ஏ பட்டம் பெற்றார். பின்னர் அவர் மிகுந்த ஊக்கத்துடன் கற்று, பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேறினார். அதனால் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவரைப் பாராட்டி அக மகிழ்ந்தனர்.

அவர், ஓய்வு கிடைத்தபோதெல்லாம் தாம் கல்லூரியில் விருப்ப பாடமாக எடுத்துக் கொண்ட **தத்துவக்கலைத்** துறையில் உள்ள நூல்களை யெல்லாம் படித்தார்; அவற்றை ஐயம் திரிபறக் கற்றார். விவேகாநந்தர் எழுதியுள்ள கடிதங்களையும் கட்டுரைகளையும் கருத்தூன்றிக் கற்றார்; இராம தீர்த்தருடைய நூல்களைப் படித்தறிந்தார்; இங்ஙனம் சமயத் துறையிலும் தத்துவத் துறை யிலும் தமக்கிருந்த அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அவர் இந்துசமயம் பற்றிக் கற்றதுடன் நில்லாமல் பிற சமயங்களைப் பற்றியும் கற்கலானார்; எல்லாச் சமயங்களிலும் உண்மை உண்டு என்றும்; அவையாவும் இறைவன் புகழையே இயம்பு கின்றன என்றும், உலக நிலையை உள்ளவாறு உரைக்கின்றன என்றும், மக்களது வாழ்வின் அமைப்பு முறையைத் தெளிவுபடக் கூறுகின்றன என்றும் தம் சொற்பொழிவுகளில் கூறலானார்;

சமயக்கல்வி என்பது மனிதன் விரும்பிக் கற்க வேண்டும் கல்வித்துறைகளுள் ஒன்ருகும் என்ருர்; மனிதன் மன நிறைவு - ஆன்ம அமைதி பெறுவதையே விரும்புகின்ருன் என்றும், அவன் பணம் ஒன்றையே கொண்டு அமைதி பெறுவதில்லை என்றும் எடுத்துரைத்தார்; அதனுல்தான் மக்கள் பெரும்பொருளைச் செலவழித்துக் காசிக்கும் பிற இடங்கட்கும் செல்கின்றனர் என்றும் கூறினுர். இராதாகிருஷ்ணனுடைய இத்தகைய கருத்துரைகளைக் கேட்ட மக்கள் அவரைச் சமய அறிஞர் என்று பாராட்டினர். அவர் சமயத் துறையில் தாம் கண்டறிந்த உண்மைகளை யெல்லாம் ஆராய்ச்சிக் கட்டுரை வடிவில் தேர்வுக்கு எழுதினுர். அத்துறையில் வல்லவர்கள் அதனைப் பாராட்டி அவருக்கு எம். ஏ., பட்டம் வழங்கினர்.

கல்லூரியிற் படிக்கும்போதே அவருக்குத் திருமணம் நடந்தேறியது. அவருடைய மனைவியார் அவரைப் போன்று கற்று வல்லவர் அல்லர் என்ருலும், கணவர்க்கேற்ப நடக்கும் பண்பினராக இருந்தார்.

## தத்துவப் பேராசிரியர்

எம். ஏ. பட்டம் பெற்ற இராதாகிருஷ்ணன், சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவத் துணைப் பேராசிரியராகப் பணி புரியலானுர். அவர் மாணவர் பாராட்டும் நிலையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்; மிகவும் கடினமான பாடம் என்று மாணவர்கள் வெறுத்துப் புறக்கணிக்கும் தத்துவக் கலையை அவர்களாகவே விரும்பிக் கற்கும் நிலையில்

சொற்பொழிவுகளாற்றி வெற்றி கண்டார். அவர் தம் சமயக் கருத்துக்களைச் செய்தித்தாள்களிலும் எழுதி வந்தார்.

"இந்து சமயம் துறவு நெறியைத்தான் போற்றுகின்றது என்பது தவருன கருத்தாகும். அஃது இல்லறக் கடமைகளையும் வற்புறுத்துகின்றது; எல்லாச் சமயக் கொள்கைகளிலும் ஒருமைப் பாடுடையவற்றை ஏற்றுக்கொண்டு அச் சமயச் சார்பாளருடன் இணைந்து நிற்க இசைகின்றது. மனிதன் கடமையையே பெரிதாக எண்ணிப் போற்ற வேண்டும் என்றும், பல உயிர்கட்கும் பயன்படும் வண்ணம் வாழ வேண்டும் என்றும் இந்து சமயம் எல்லார்க்கும் அறிவுரை கூறுகின்றது. உலக மக்கள் அனைவரும் ஒரு தாய் ஈன்ற மக்கள் என்ற அடிப்படையில் நோக்குவதே இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும்", என்பன போன்ற பயனுடைய பல செய்திகளை அவர் அடிக்கடி செய்தித்தாள்களில் எழுதி வந்தார். அதனுல் உலக மக்களுக்கு அவர் அறிமுகமானுர்.

அவர் தாகூர் எழுதி வெளியிட்ட பல நூல்களைத் தொடர்ந்து படித்தார். தம்முடைய கருத்துக்கும் அவருடைய் கருத்துக்கும் உள்ள ஒற்றுமைகளையும் கருத்து மாறுபாடுகளையும் குறித்துக் கட்டுரைகள் எழுதினுர். அதற்குத் "தாகூருடைய சமயக் கருத்துக்கள்" என்று பெயர் கொடுத்தார். தாகூர் அந் நூல் முழுதும் படித்தார்; பெரு வியப்புற்ருர்; இராதாகிருஷ்ணனை உளமாரப் பாராட்டினுர்.

இந்நிலையில், மைசூர் சமஸ்தானத்தில் புதிய தொரு பல்கலைக் கழகம் தோன்றியது. அப் பல்கலைக் கழகத்துக்குத் துணைவேந்தராக சர் அசுடோஷ் முக்கர்ஜி என்பவர் விளங்கினார். கல்வி யறிவிலும் அனுபவத்திலும் சிறந்த அப் பெருமகனார், இராதாகிருஷ்ணனைத் தம் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பணி யாற்றுமாறு வேண்டினார். முக்கர்ஜியின் வேண்டு கோளையேற்று அவர் அங்குப் பேராசிரியரானார்; மூன்றாண்டுகள் பணி புரிந்தார். அக்காலத்தில் சமயத்துறையில் வல்ல உலக அறிஞருடைய கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து ஆராய்ச்சி நூலொன்றை எழுதினார். அப்போது அவர் வங்காளத்தில் சமயத்துறை பற்றிய தம்முடைய முதிர்ந்த கருத்துக்களையெல்லாம் தெளிவாகப் பல சொற்பொழிவுகளின் மூலம் விளக்கினார். அவற்றைச் செய்தித்தாள்களின் வாயிலாகப் படித்த இங்கிலாந் திலிருந்த புத்தகவெளியீட்டாளர் ஒருவர் அவற்றை யெல்லாம் தொகுத்தும் புதுப்பித்தும் தருமாறு வேண்டினார். இராதாகிருஷ்ணன் அவ்வேண்டு கோளை ஏற்றுக்கொண்டு '**இந்துசமயம்**' பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதி அனுப்பினார். அந்நூல் இங்கிலாந்துப் பதிப்பாக வெளிவந்தது. அதுமுதல் அவருடைய புகழ் மேலை நாடுகளில் விரைந்து பரவலாயிற்று. இராதாகிருஷ்ண னுடைய கருத்துக்களால் மேலை நாட்டினர் இந்தியாவுக்கே சிறந்த மதிப்பளித்தனர்; அறிவுக்கும் உள்ள அமைதிக்கும் உரிய இடம் இந்தியாதான் என்ற எண்ணத்தை அவர்கள்

உள்ளத்தே பதியும்வண்ணம் அவர் கருத்துக்கள் செய்தன.

## உலகம் பாராட்டுதல்

1926-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழகப் பிரதிநிதிகளின் மாநாடு இங்கிலாந்தில் நடைபெற்றது. கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் சார்பில் இராதாகிருஷ்ணன் சென்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவரைச் சொற்பொழிவுகள் ஆற்றுமாறு மாணவர்களும் பேராசிரியர்களும் வேண்டினர். அவர், அவர்கள் வேண்டுகோட்கிணங்கிப் 'பிராட்லியும் சங்கரரும்' என்னும் பொருள் பற்றிய திறனாய்வுச் சொற்பொழிவு ஒன்றனை நிகழ்த்தினர். பிராட்லி என்பவர் ஷேக்ஷ்பியர் எழுதிய நாடகங்களுக்கு ஏற்ற ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். சங்கரர் என்பவர் இந்து சமயக்கலையில் வல்லவர். பிராட்லி, சங்கரர் ஆகிய இருவருடைய கல்வியைப் பற்றியும் அறிவு நிலைகளைப்பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் இராதாகிருஷ்ணன் தெளிவுபடக் கூறினர். அப் பல்கலைக் கழகத்தார் அவருடைய சொற்பொழிவுகளையும் உரையாடல்களையும் கேட்டு மகிழ்ந்தனர்; கல்கத்தாப் பல்கலைக் கழகம் சிறந்த ஒரு பேராசிரியரைக் கொண்டுள்ளது என்று பாராட்டிப்பேசினர். செய்தித்தாள்கள் அவருடைய சொற்பொழிவுகட்கு முதலிடம் தந்து வெளியிட்டன.

"இந்து சமயத்தின் சிறந்த ஆசிரியர் என்று பாராட்டத்தகும் சிறப்புடன், கடினமான செய்திகளையெல்லாம் எவர்க்கும் புரியும்

நிலைமையில் பேசும் ஆற்றலுடன் நம் நாடு வந்து சொற்பொழிவாற்றும் பேரறிஞர் உள்ளார். தம்முடைய தாய்மொழியாக இல்லையெனினும் ஆங்கிலமொழியில் சரளமாகவும் எளிமையாகவும் பேசிய அவரது திறன் போற்றுதற்குரியது'', என்று மேலை நாட்டுமக்கள் பாராட்டினர். பின்னர் அவர், சிக்காகோ, ஹார்வார்ட், ஏல் முதலிய பல்கலைக் கழகங்களின் விருந்தினராகச் சென்றார். அமெரிக்க மக்கள் அவருடைய சொற்பொழிவுகளை ஆர்வத்துடன் கேட்டனர். 'இந்த நூற்றாண்டின் இடையில் மேலைநாடுகளில் இந்து சமயம் பற்றித் தொடர்ந்து பேசிப் பாராட்டுதல் பெற்ற இந்தியப் பெருமகனார் இராதாகிருஷ்ணனே யாவார்', என்று மக்கள் கூறினர். இராதாகிருஷ்ணன் *நாகரிகத்தின் எதிர்காலம்'* என்னும் ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அதில் விஞ்ஞானத்தின் தோற்றம், வளர்ச்சி, நன்மைகள் பற்றிப் பல விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. விஞ்ஞான வளர்ச்சியும் ஆன்ம வளர்ச்சியும் ஒன்றிப் போகும் நிலையே 'முதிர்ந்த நாகரிக' நிலையாகும் என்பது இராதாகிருஷ்ணனது கருத்தாகும்.

1927-ஆம் ஆண்டில் ஆந்திரப் பல்கலைக் கழகத்தினர் அவரை வரவேற்றுப் போற்றி *டாக்டர்* (டி. லிட்) பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர். அப்போது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் காலியான ஓரிடத்தை நிரப்புவான் வேண்டிப் பல்கலைக்கழகத் துணையாளர்கள் முனைந்தனர். இராதாகிருஷ்ணனே அப்பதவிக்கு உரியவர் என்றெண்ணிக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தினர்

அவரை அனுப்பினர். அவர் லண்டனிலும், மான்செஸ்டரிலும் 'ஹிப்பர்ட் சொற்பொழிவுகள்' என்னும் தலைப்பில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அச் சொற்பொழிவுகள் தனி நூலாக வெளிவந்தன. மக்கள் அவரைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்; தம் கோவிற் கூட்டங்களில் பேசுமாறு வேண்டினர். அவர் அவர்தம் வேண்டுகோளை நிறைவேற்றினர். அதனல், 'இந்தியா கீழான நாடு' என்று எண்ணம் கொண்டிருந்த வெள்ளையர், தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, 'இந்தியா சிறந்த சமயக் கொள்கைகட்குத் தாயகம்' என்று எண்ணலாயினர்.

மூன்ருண்டுகட்குப் பின்னர், 1930 - ஆம் ஆண்டில், இராதாகிருஷ்ணன் இந்தியா மீண்டார். கல்கத்தாப் பல்கலைக்கழகம் அவருடைய தொண்டுகளைப் போற்றியது; அவரைத் தங்கள் பல்கலைக் கழகத்துக்குறிய ஆயுட் காலப் பேராசிரியராகக் கொள்ளவும் முடிவுசெய்தது. ஆனல் அவர் அங்குத் தொடர்ந்து இருக்கமுடியவில்லை. 1926 - ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆந்திரப் பல்கலைக்கழகம் நல்ல வளர்ச்சியினைப் பெறவேண்டும் என்று ஆந்திர அறிஞர் நினைத்தனர். அதனல் தகுந்த துணைவேந்தரை நாடி அலைந்தனர். அப்போது அவர்கட்கு இராதாகிருஷ்ணன் நினைவு வந்தது. மாணவர்கள் விரும்புபவராகவும், நாட்டு மக்களால் மதிக்கத் தக்கவராகவும், அரசாங்கம் மதிக்கும் தகுதியுடையவராகவும் ஒருவர் இருக்க வேண்டுமானல் இராதாகிருஷ்ணன் ஒருவர்க்கே இத்

துணைச் சிறப்புக்களும் உண்டு என்று அவர்கள் நன்குணர்ந்து, தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுமாறு அவரை அன்புடன் வேண்டினர். இராதாகிருஷ்ணன் தாம் பிறந்த நாட்டு மக்கள் கேட்கும் வேண்டுகோளை நிறைவேற்றுவது தமது கடமை என எண்ணி 1931-ஆம் ஆண்டில் ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப் பேற்ருர்; 1931-ஆம் ஆண்டு முதல் 1936-ஆம் ஆண்டு வரை அப்பணியைத் திறம்படச் செய்தார்.

இராதாகிருஷ்ணனது அருஞ் செயல்களைப் பாராட்டி அரசாங்கத்தார் சர் என்னும் பட்டத்தை அவருக்கு அளித்தனர். 1936-ஆம் ஆண்டில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அங்குக் கீழ்நாட்டுச் சமயப் பேராசிரியர் பதவி காலியாயிற்று என்றும், அப் பதவியினை ஏற்குமாறு வேண்டியும் வந்த அழைப் பினை ஏற்றுக்கொண்டு, அவர் அங்குச் சென்ருர். முதன் முதலாக அப்பொறுப்பேற்ற இந்தியர் என்னும் பெருமை இராதாகிருஷ்ணனுக்கே உரிய தாகும். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முன் போலவே தொடர்ந்து பல சமயச் சொற் பொழிவுகளை அவர் செய்தார். அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட்டார். மேலை நாட்டார் அந்நூலை ஆர்வத்தோடு படித்துப் போற்றினர்.

அவர் 1938-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அறிஞர் சங்க ஆண்டுவிழாவில் 'கௌதம புத்தர்' என்பதுபற்றிப் பேசினுர்; புத்தர்க்கு முன்னர் இருந்த

இந்தியா, புத்தர்கால இந்தியா, சமுதாய நிலை, புத்தர்வரலாறு, துறவினை அவர் கொண்ட காரணம், அவருடைய அறிவுரைகள், அவர் உண்டாக்கிய அமைப்புக்கள் என்பனபற்றியெல்லாம் தெளிவாகப் பேசினார்.

கீழ்நாடுகட்கும் மேல்நாடுகட்கும் நல்லதொரு பிணைப்பை உண்டாக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்; மேலைநாட்டு விஞ்ஞான அறிவும், கீழைநாட்டுச் சமய அறிவும் இணைந்தால்தான் மக்கள் நல்வாழ்வு வாழமுடியும் என்று எண்ணினார்; இந்திய நாட்டுச் சமயச் சிறப்புக்களை மேலைநாட்டார் உணர வேண்டும் என்றும், அவற்றைப் பின்பற்றிச் சிறந்து வாழ வேண்டும் என்றும் வேண்டினார். ஜினிவாவில் கூடிய உலக நாட்டு அறிஞர் கழகத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாக அவர் சென்றார்; ஒன்பதாண்டுகள் அச்சங்க உறுப்பினராக இருந்தார்.

## சிறந்த சொற்பொழிவாளர்

இராதாகிருஷ்ணனைச் சிறந்த சொற்பொழிவாளர் என்று கூறலாம். அவருடைய சொற்பொழிவுகளையெல்லாம் இரண்டு பெரும் பிரிவுகளாகத் தொகுத்து, இந்திய அரசாங்க விளம்பரக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். 1930-ஆம் ஆண்டில் மைசூர்ப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அவர் ஆற்றிய நீண்டவொரு சொற்பொழிவின் சில பகுதிகளை இங்குக் காணலாம்.

“பட்டம்பெறும் மாணவர்களே, இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்குவதில் உங்கட்குப்

பெரும் பங்கு உண்டு என்பதை உணர்த்தத்தான் இந்தப் பட்டமளிப்பு விழா நடைபெறுகின்றது. தாய்நாட்டுப்பற்றும், தாய்மொழிப்பற்றும் உங்கட்கு இருக்கவேண்டும். தாய்நாட்டுப் பற்று இருந்தால் தான் நாம் மக்களாக வாழ முடியும். எனவே, நீங்கள் நம் தாயகத்தின் சிறப்புக்களை எண்ணிப் பார்க்க வேண்டும்; அவற்றை உள்ளத்தில் இருத்திப் பொதுநலத் தொண்டுகள் செய்ய வேண்டும். மேடையிலே நின்று கொண்டு தொண்டு பற்றியும், பண்பு பற்றியும், ஒழுக்கம் பற்றி யும் பேசுவதால் என்ன பயன்? நடை முறையில் காட்டுதல் வேண்டாவா? பயனற்ற இனப்பாகு பாடுகள் நம்மிடையே புகுந்துகொண்டு நம்மைப் பிளவு படுத்திவிடுகின்றன. சாதிப் பாகுபாட்டி லிருந்து விடுபட்டால்தான் இந்தியா வாழும். நாம் உலகில் நெடுங்காலம் வாழப் போவதில்லை. வாழும் நாட்களிலும் இன்பமாகவும், அமைதியாகவும் வாழ முடியாது. பிணியும் பிணக்கும் நேரும் நாட்களே பலவாகும். எனவே, வாய்ப்புள்ளபோதே நல்ல தொண்டுகளைச் செய்துவிட வேண்டும்.

"பெண்கள் நமது சமுதாயத்தில் அரைப் பங்கினராக உள்ளனர். அவர்களைப் படிப்பிக்க வேண்டுவது நம் கடமையாகும். கல்வியினைக் கற்பிக்கும்போது ஒழுங்கும் ஒழுக்கமும் கற்பிக் கப்பட வேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்னும் முதுமொழி நம் மனத்தை விட்டு அகன்றுவிடக் கூடாது. கற்றவர்கள் கிராமப் புறங்கட்குச் சென்று அங்கு 'வாழும் மக்கட்குத்

தொண்டு செய்ய வேண்டும். அங்குள்ள நிலங்களைப் பயன்படுத்தித் தோட்டக்கலையை அவர்கட்குக் கற்பித்து அதில் அவர்களை வல்லவராக்கலாம். இதுபோன்று நீங்கள் செய்ய வேண்டும் கடமைகள் பல உள்ளன. ஒருவன் எந்த ஒரு செயலைச் செய்ய மேற்கொண்டாலும் அதனையே தன் முதற் கடமையாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் தன் கடமையில் வெற்றி பெற முடியும் பொழுது போக்குகளும் அவற்றுக்குப் பயன்படும் நண்பர்களும் வாழ்விற்குப் பயன்பட மாட்டார்கள் என்பதை இளைஞர்கள் உணர வேண்டும்.

"இளைஞர்கள் மனம் வைத்தால் இந்திய நாட்டைப் பொன்னுடாக்கலாம். அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்".

# 2. பண்டை இந்தியப் பல்கலைக் கழகம்

## நாளந்தா பல்கலைக் கழகம்

இந்திய நாட்டில் பண்டைக் காலத்தில் பல்கலைக் கழகங்கள் பல இருந்துதொண்டாற்றின. அவை யாவும் சமயத்துறைக்கும், அறிவியல் துறைக்கும் சிறப்பிடம் தந்தன. தட்சசீலம், நாளந்தா, விக்கிரமசீலம், ஜகத்தாலம், ஜேதவனம், வல்லபி, ஸ்ரீதான்யகடகம், ஓதண்டபுரி, காசி, காஞ்சி முதலிய பல இடங்களில் பல்கலைக் கழகங்கள் அமைந்து தொண்டாற்றின. அவற்றுள் ஒன்முன நாளந்தா பல்கலைக் கழகம் பற்றி இங்கு அறிவோம்.

இப்பல்கலைக் கழகத்திற்கு '*நாளந்தா*' என்னும் பெயர் வந்ததற்குரிய காரணத்தைப் பலர் பலவாறு கூறுகின்றனர். நாக மரபினர்க்கு மன்னனுக விளங்கிய நந்தன் என்பவன் ஆட்சியில் அப் பல்கலைக் கழகம் இருந்ததால் அது *நாளந்தா* என்னும் பெயர் பெற்றது என்பர் சிலர். முதலாம் குமாரகுப்தன் என்பவன் பல்கலைக் கழகக் கட்டடத்தை அமைக்க நிலத்தைத் தோண்டிய போது நாகப் பாம்பு ஒன்று வெட்டுண்டு இறந்தது என்றும், அதனல் அப்பெயர் வந்தது என்றும் கூறுவர் சிலர். நாதகட்டர் என்பவர் இடையருது அறம் செய்து வந்தமையால் அப்பல்கலைக் கழகம் அப்பெயர் பெற்றது என்றும், தாதகட்டர் அப் பகுதியினை ஆண்டவர் என்றும் சிலர் கூறுவர்.

கால் வேறுபாடின்றி எப்போதும் நல்லறிவை நல்கி வரும் நிலையமாக அது இருந்தது என்பதைச் சுட்ட நினைத்தோர் நாளந்தா என்னும் பெயர் தந்து மகிழ்ந்தனர் என்றும் சிலர் கூறுவர்.

## தோற்றமும் பழமையும்

கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் அசோகர் புத்த விகாரம் ஒன்றை நாளந்தாவில் அமைத்தார். அது நாளந்தா விகாரம் எனப்பட்டது. அசோகருக்குப் பின்னுல் ஆறு மன்னர்கள் நாளந்தாவின் வளர்ச்சிக்குத் துணையாயிருந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. முதலாம் குமாரகுப்தன் என்பவன் அவர்களுள் முதல்வனுகக் கருதப்படுகின்ருன். பௌத்தசமயத் துறவிகள் தங்குவதற்கு என்று அவன் கட்டிவைத்த மடமே பல்கலைக் கழகமாக மாறியது. அவன் மகன் புத்தகுப்தன் என்பவன் அங்கு மற்ெருரு மடத்தை அமைத்தான். அவன் மகன் தாதகட்டன் என்பவனும், தாதகட்டனுடைய மகன் பாலாதித்யன் என்பவனும் தங்கள் தங்கள் காலங்களில் அங்கு மடங்கள் கட்டினர். பாலாதித்யன் மூன்னூறு அடி உயரமுள்ள கோபுரம் கொண்ட கோவில் ஒன்றையும் அங்கு அமைத்தான் என்று வரலாறு கூறுகின்றது. அவனுடைய காலம் கி. மு. 2-ஆம் நூற்றுண்டு என்று அறிஞர் கூறுவர். வச்சிரன் என்பவன் பாலாதித்யன் மகன் ஆவான். அவன் தன் தந்தை கட்டிய கோவிலின் அருகிலேயே மடம் ஒன்றை அமைத்தான். மற்ெருரு மன்னன்

அங்கு ஒரு மடத்தை அமைத்தான். இவ் ஆறு மன்னருள் முதல் ஐவரும் குப்தர் மரபினைச் சேர்ந்தவர்கள்.

தட்சசீலப் பல்கலைக் கழகத்திற்குச் சில நூற்றுண்டுகட்குப் பின்னர்த் தோன்றியதே நாளந்தா பல்கலைக்கழகமாகும். ஆயினும் அது தோன்றிய காலத்தை உறுதியாகக் கூற முடியவில்லை. வரலாற்று அறிஞர்கள் அப் பல்கலைக் கழகம் தோன்றிய காலம் குறித்து தம்முள் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டுள்ளனர். கி. மு. 6-ஆம் நூற்றுண்டில் - புத்தர் காலத்தில் இப்பல்கலைக் கழகம் இருந்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். புத்தர் ஆனந்தர் என்னும் தம்முடைய சீடருடன் சென்ற பல இடங்களுள் நாளந்தாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தகுவதாகும். சாரிபுத்தர் என்பவர் புத்தருடைய சீடர்களுள் சிறந்தவர். அவர் காலத்தில் நாளந்தா சிறப்புடன் விளங்கியது. சாரிபுத்தர் நாளந்தாவில் தம்முடைய எண்பதாயிரம் சீடருடன் வீடுபேற்றை அடைந்தார் என்று சிலர் கூறுவர். மேலை நாட்டு ஆசிரியர்கள் சிலர் நாளந்தாவிற்கு வந்து தங்கி, அதன் நடைமுறைகளையெல்லாம் ஆராய்ந்து பல குறிப்புக்கள் எழுதி வைத்துள்ளனர். அவர்கள் காலம் கி. பி. 4-ஆம் நூற்றுண்டு முதல் கி. பி. 12-ஆம் நூற்றுண்டு வரை அமைந்ததாகும்.

பீகார் மாகாணத்தில் கங்கையாற்றங்கரையில் பார்கான் என்னும் கிராமத்தில்தான் நாளந்தா பல்கலைக் கழகம் இருந்தது என்பர். அது மகத

நாட்டின் தலைநகரான இராஜகிருகத்திற்கு எட்டுக் கல் தொலைவில் இருந்தது. பாடலிபுத்திரத்தி லிருந்து நாற்பது கல் தொலைவில் உள்ள அவ்விடம், இன்று மண் மேடிட்டுக் கிடக்கின்றது. நிலத்தை அகழ்ந்தால் எண்ணற்ற உண்மைகள் புலப்படும் என்று நம்பிய மேலை நாட்டார் நாளந்தா இருந்த தாகக் கூறப்படும் இடத்தை அகழ்ந்தனர். அங்கு ஒருவர் தங்கியிருக்கக் கூடிய சிறிய அறைகளும், இருவர் தங்கி இருக்கக்கூடிய அளவு பெரிய அறை களும் காணப்பட்டன. அவற்றுள் உறங்கக் கற்பலகைகளும், விளக்கு வைக்கப் பிறைகளும் காணப்பட்டன. இவை தவிர வேறு எந்தச் சான்று களும் கிடைக்கவில்லை. 1861-ஆம் ஆண்டில் ஜெனரல் கன்னிங்ஹாம் என்பவர் நாளந்தாவை அகழ்ந்தார்; புதைபட்ட பல்கலைக் கழகத்தைக் காணலாம் என்றார். பின்னர் 1915-ஆம் ஆண்டில் அம்மேடுகள் தோண்டி யெடுக்கப்படடன. சுமார் 1600 அடி நீளத்துக்கும் 800 அடி அகலத்திற்கும் உட்பட்ட இடமாக அது காட்சியளித்தது. அங்கு ஒன்றின் கீழ் ஒன்றாக ஐந்து அடுக்குக் கட்டடங்கள் காணப்பட்டன. அவை 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாக இருக்கலாம் என்று அறிஞர் கருது கின்றனர்.

## நிலையும் மாண்பும்

புத்தர் ஞானம் பெற்ற இடத்தில் உள்ள புத்தகயா, சாரநாத் என்னும் இடங்களின் அமைப்பை நாளந்தா பல்கலைக்கழகம் ஒத்திருந்தது என்பர். விகாரங்களும், மடங்களும் பெரிய செங்கல் மதிலால் சூழப்பட்டிருந்தன. கோபுரங்கள்

வானளாவி நின்றன. கட்டடங்கள் எழில் மிகுந்து காட்சியளித்தன. இரத்தின சாகரம், இரத்தினததி, இரத்தின ரஞ்சகம் என்னும் மூன்றும் அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. அவை பௌத்த சமயத்தின் உயிர்நாடிகளாகிய **புத்தர் தருமம்,** சங்கம் என்னும் மூன்றையும் குறிப்பதாகக் கூறுவர். இரத்தினததி என்பது ஒன்பது நிலைகளை உடைய மிக உயர்ந்த கட்டடமாகும். அது புத்தர் கூறிய நல்லுரைகளை ஏட்டுச் சுவடிகள் வடிவில் வைக்கப்பட்டிருந்த இடமாகும். அம்மூன்று கட்டடங்களும் நாளந்தாவின் நூல் நிலையங்களாக விளங்கின. அத்தகைய நூல் நிலையம் அக்காலத்தில் நாளந்தாவைத் தவிர வேறு எங்கும் இருந்ததில்லை என்னலாம். அங்குப் பெரிய கூடங்கள் எட்டும், முன்னூறு அறைகளும் இருந்தன. நடுவில் பெரிய கல்லூரி இருந்தது. அங்குதான் விவாதக் கூட்டங்களும், வகுப்புக்களும் நடைபெற்றன.

## பேராசிரியர்கள்

இங்ஙனம் பலவகையானும் சிறந்த இப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களாக இருந்தவர்கள் ஆசியாக் கண்டத்தின் பல பகுதிகளிலிருந்து வந்தவராவர். நாகார்ச்சுனசித்தர், ஆரியதேவர், தருமபாலர், சீலபத்திரர், சாந்தரட்சிதர், சந்திரகோமின், பத்மசம்பவர், பிராபாமித்திரர், புத்தகீர்த்தி, ஜனமித்திரர், கமலசீலர், ஸ்திரமதி, குணமதி என்போர் புகழ் பெற்ற பேராசிரியர்கள் ஆவர்.

நாகார்ச்சுன சித்தரும், ஆரிய தேவரும் இப் பல்கலைக் கழகத்தைப் பல துறைகளிலும் சிறப் புடையதாக ஆக்கினர். *ஆரியதேவர்* என்பவர் நாளந்தாவிற்கு வந்து நாகார்ச்சுனருடன் சமயத் துறையைப் பற்றி வாதம்செய்து தோற்ருர். பின்னர் அவர், அவருடைய சீடராக இருந்து கற்று, வல்லவராகி அப்பல்கலைக் கழகத்தின் பேராசிரிய ராஞர். காஞ்சிமா நகரிலிருந்து வந்த அமைச்சர் ஒருவரின் மகனே *தருமபாலர்* என்பவர். இவர் காலம் கி. பி. 528-560 என்பர். இவர் திருமண விலங்கிலிருந்து விடுபட வேண்டிக் காஞ்சிமா நகரத்தை விட்டுப் புறப்பட்டார்; நாளந்தாவை அடைந்தார். இவர் பௌத்த சமயப் பொருள் நூல்களில் வல்லவரான திக்நாகர் என்பவரை ஆசிரியராகக்கொண்டு பலதுறைக்கல்வி பயின்ருர்; கௌசாம்பி என்னுமிடத்தில் பிற மதத்தாருடன் வாதிட்டு, பௌத்தசமயக் கொள்கைகளே உயர்ந்தன என்று நிலைநிறுத்திப் பெருமை கொண்டார். அதனுல் கௌசாம்பி மன்னன் பௌத்த சமயத்தைத் தழுவினுன். பௌத்த சமயத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. அவை ஹீனயானம், மகாயானம் என்பனவாகும். இவ விரண்டினுள் மகாயானப் பகுதியின் கொள்கை களைத் தருமபாலர் கொண்டவர்; ஒரு முறை நூறு ஹீனயான பௌத்தர்களைச் சமயப்போரில் வென்று மகாயானக் கொள்கைகளை நிலைநிறுத்திஞர். அச் சொற்போர் ஏழுநாட்கள் நடைபெற்றது. நாளந்தா பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகப் பணியாற்றிய தருமபாலர், பின்னர் அதன் குலபதியாகவும் (தலைமை ஆசிரியராகவும்) பணியாற்றிஞர்.

*கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த சீலபத்திரர்* என்பவர் தருமபாலருடைய மாணவருள் சிறந்தவர் இவர் தென்னிந்தியாவிலிருந்து வந்த ஒருவரோடு உரையாடல் நிகழ்த்தி வெற்றி பெற்ருர்; அதற்குப் பரிசாகச் சிற்றூர் ஒன்றினை மன்னனிடமிருந்து பெற்ருர். இவரும் தம்முடைய பேராசிரியரைப் போன்றே, தொடக்கத்தில் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பின்னர் அதன் குலபதியாகவும் விளங்கினுர்.

இங்ஙனம் பலவகைகளில் ஆற்றல் மிக்க பேராசிரியர்களைக் கொண்டிருந்த நாளாந்தாவின் புகழ் உலகெங்கும் பரவியது. கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் இந்தியாவுக்கு வந்த யுவாங்சுவாங்கு என்வரும் இப்பல்கலைக் கழகத்தின் மாணவரே யாவர். இப்பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் என்னும் தகுதியைப்பெற வேண்டுமாயின், கல்வி யுடன் ஒழுக்கம், முதுமை என்னும் தகுதிகளையும் ஒருவர் பெறவேண்டும்.

## நாளந்தாவின் மாணவர்கள்

சீனு, மங்கோலியா, கொரியா, பொகாரா, நடு ஆசியா போன்ற பலநாடுகளிலிருந்தும் இந்தியா வின் பல்வேறு பகுதிகளில்ருந்தும் மாணவர்கள் திரளாக அங்கு வந்து கல்வி பயின்ருர்கள். கி. பி. 4-ஆம் நூற்ருண்டில் சீனநாட்டைச் சேர்ந்த ***பாகியான்*** என்பவர் இப்பல்கலைக் கழகத்தின் மாணவராக விளங்கினுர். அவர் எழுதிய குறிப் பினுல், அவர் வந்தபோது பல்கலைக் கழகத்தின் கட்டட வேலைகள் முடிவு பெருமல் இருந்தன

என்பதை அறிய முடிகின்றது. பொருள் நூலில் வல்லவரான திக்நாகர் கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் காஞ்சியிலிருந்து வந்து நாளந்தாவில் பயின்றார். அவருடைய சீடரான தருமபாலரும், தருமபாலருடைய மாணவரான சீலபத்திரரும் இங்குப் பயின்றவர்களேயாவர். யுவாங்சுவாங்கு, இத்சிங் என்னும் இருவரும் சீனநாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் நாளந்தாவிற்கு வந்தனர். யுவாங்சுவாங்கு ஐந்து ஆண்டுகள் அங்குப் படித்தார்; புத்த தருமத்தில் வல்லவர் என்னும் பட்டம் பெற்றார். இத்சிங் பத்து ஆண்டுகளாக அங்கு மாணவராய் இருந்தார். அப்போது அவர் வடமொழியையும், பௌத்த நூல்களையும் நன்கு கற்றார். கொரியாவிலிருந்து ஹ்விலுன் என்னும் மாணவர் ஒருவரும் நாளந்தாவில் பயின்றார்.

யுவாங்சுவாங்கு நாளந்தாவைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதிவைத்துள்ளார். அவை நாளந்தாவைப்பற்றி அறிய மிக்கதுணை புரிகின்றன.

“நாளந்தாவில் மாணவர்க்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகின்றது. உணவும், உடையும், உறையுளும், மருந்தும் மக்கட்குத் தரப்படுகின்றன. எண்ணற்ற மக்கள் ஒரே வேளையில் நீராடுவதற்கு ஏற்ற நிலையில் மூன்று பெரிய குளங்கள் அங்குள்ளன. நீராடுவதற்காக மணி அடிக்கப்படும். மணியோசை கேட்டதும் மாணவர்களும், ஆசிரியர்களும் தங்கள் அறைகளை விட்டு வெளி வருவர்; பல பகுதிகளில் சென்று நீராடுவர். ஒவ்வொரு குளத்தையும் சுற்றியுள்ள செடிகளும்

கொடிகளும், மரங்களும் நாளந்தாவின் அழகை மிகுதியாக்குகின்றன. நேரத்தைக் காட்டவல்ல நீர்க்கடிகை ஒன்றும் அங்குள்ளது. நீர்க்கடிகை என்பது நாளந்தாவைத் தவிர உலகில் வேறு எங்கும் இல்லை. கட்டடங்கள் யாவும் செங்கற்களால் உறுதியாகக் கட்டப்பட்டுள்ளன. ஏறத்தாழ பத்தாயிரம் மாணவர்களும் ஆயிரத்து நூற்றைம்பது ஆசிரியர்களும் அங்கு இருந்தனர். நாளொன்றுக்கு நூறு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மாணவர்கள் அவற்றைக் கேட்டுப் பயனுற்றனர். நாளந்தாவின் வாயில்களில் கற்று வல்ல புலமையாளர்களைக் காணலாம். அவர்கள் அங்குக் கற்க வேண்டும் என்னும் விருப்பத்துடன் வரும் மாணவர்கள் ஆற்றலை அளந்தறியத் தொடங்குவார்கள். அவர்கள் மனம் நிறைவு கொள்ளும் வகையில் மாணவர்கள் விடை கூறுதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் பல்கலைக் கழகத்தின் மாணவராக விளங்கமுடியும். பேராசிரியர்கள் கேட்கும் வினக்கள் அத்துணையும் கடினமானவையாகவே இருக்கும். பத்துப்பேர் மாணவராகச் சேரும்விருப்புடன் வந்தால், அவருள் மூவரே தேர்ந்தெடுக்கப்படுவர். அதனுல்தான் அங்குப் படித்த மாணவர்கள் வல்லவராக விளங்குகின்றனர்; பல்கலைக் கழகத்தின் புகழ் பாரெங்கும் பரவியுள்ளது''.

## சிறந்த பல்கலைக் கழகம்

இப்பல்கலைக் கழகத்தில் பதினறு வயதுக்கு மேற்பட்ட மாணவர்களே சேர்க்கப்பட்டனர்.

மாணவர்கள் நான்காண்டுகள் முதல் பத்தாண்டு கள் வரையிலும் தங்கள் விருப்பம் போலக் கற்கலாம். மாணவர்களும் ஆசிரியர்களும் மிக்க நட்புடையவர்களாக விளங்கினர். அதனால்தான் மாணவர்கள் மனம் அறிந்து சிறந்த கல்வியைக் கற்பித்து அவர்களை வல்லவராக்க ஆசிரியர்களால் முடிந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும் சுவடி களில் நூல்களுக்குப் படி எடுத்துவந்தனர். அவற்றுள் சில இன்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இத்சிங் என்னும் மாணவர் தாம் நாளந்தாவில் மாணவராக இருந்து கற்ற காலத்தில் 400 வடமொழி நூல்களுக்குப் படி எடுத்தாகக் குறித்துள்ளார்.

அரசியலாரின் துணையும் ஆதரவும் இப் பல்கலைக் கழகத்துக்கு மிகுதியாக இருந்தன. பௌத்தசமயக் கருத்துக்களைக் கற்பிக்கும் நிலைய மாக நாளந்தா இருந்தாலும், இந்துசமயத்தைச் சேர்ந்த மன்னர்கள் பலர் அதற்கு மிகுதியாக நிலங் களை எழுதிவைத்தனர். ஒரே சமயத்தில் நூறு கிராமங்களை நாளந்தாவுக்கு நன்கொடையாகக் கொடுத்து அரசனொருவன் அகமகிழ்ந்தான் என்று வரலாறு கூறுகின்றது. பல்கலைக் கழக ஆட்சியை மேற்கொண்டவர்கள் மூவராவர். அவருள் வேந்தர் (அத்தியட்சர்) என்பவர் ஒருவர். அவரே பல்கலைக் கழகத்தின் தலைமைச் செயலாளர் ஆவார். அவரை அடுத்திருந்தவர்க்குத் துணைச் செயலாளர் என்றும், மூன்றுமவர்க்கு மடாதிபதி அல்லது புரோகிதர் என்றும் பெயருண்டு. இப் பகுதிகளே

அல்லாமல் அந்தந்தப் பகுதிகளைக் கவனித்துக் கொள்ளத் தனித்தனிப் பேராசிரியர்கள் இருந்தனர்.

பௌத்தசமயக் கல்வியே நாளந்தாவில் கற்பிக்கப்பட்டது. அதிலும் மகாயானம் என்னும் பிரிவுக்கே சிறப்பிடம் தரப்பட்டது. புத்தருடைய அறவுரைகளைப் பின்பற்றி எழுந்த பகுதியே ஹீனயானம் என்பதாகும். ஆனால் அது காலப் போக்கில் மறைந்தது. பின்னரே மகாயானக் கொள்கைகள் வலுப் பெறலாயின. புத்தமதத்தின் கொள்கைகள் அடங்கிய மதங்களும், பல்வேறு இந்தியச் சமயங்களும் அங்குக் கற்பிக்கப்பட்டன. எண்ணற்ற கலைகள் கற்பிக்கும் கலைக்கூடமாக நாளந்தா திகழ்ந்தது. சமயத்துறைபற்றியும், கலைத்துறைபற்றியும் விவாதங்கள் நடத்தத் தனித் தனியே விவாதக் குழுக்களும் விவாத அரங்கு களும் அங்கிருந்தன. எப்பொழுதும் ஆராய்ச்சி யிலும், உரையாடல்களிலும் காலத்தைக் கழித்த தால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொழுதுபோவதே தெரியாதாம்.

பாணினி வீயாகரணம் என்னும் இலக்கணம், மருத்துவம், தத்துவம், மொழிநூல், வானநூல் முதலியவையும், இந்து சாத்திரக் கலைகளாகிய சாங்கியம், நியாயம், யோகம் முதலிய நூல்களும் நாளந்தாவில் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. யுவான்சுவாங்கின் குறிப்பால் இதனை நன்குணரலாம். அவர் பௌத்த சமயநூல்களையும், இந்து சமய நூல்களையும், நாளந்தாவில் கற்றுத் தேர்ந்ததாகக் குறித்துள்ளார்.

## யுவான்சுவாங்கின் சிறப்புக்கள்

எல்லாக்கலைகளும் கற்பித்து, எல்லாத் துறைகளிலும் வாதம் புரியலாம் என்னும் உரிமை வழங்கி மாணவர்க்கு அறிவுப் பசியை உண்டாக்கிய நாளந்தாப் பல்கலைக் கழகம், தம் மாணவருள் ஒருவரும் சிறந்தவருமான யுவான்சுவாங்கை உலகறியச் செய்தது, யுவான்சுவாங்கு நன்கு கற்ருர்; கற்க வேண்டுவனவற்றை முறைப்படுத்திக் கற்ருர்; ஐயம் திரிபறக் கற்ருர்; கற்ற நெறியில் நின்ருர். அதனுல் அவர் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவரானுர்.

வேதக் கல்வியிலும் நூல்களிலும் வல்ல அந்தணன் ஒருவன் நாளந்தாவின் வாயிலில் இருந்து, தன் கொள்கைகளை மறுத்துக் கூறுவோர் உளரா என்று அறைகூவினுன்; எவரேனும் ஒருவர் தம் கொள்கைகளை மறுத்து வெற்றி கொண்டால், அவர்க்குப் பரிசுப் பொருளாகத் தம் தலையையே தருவதாகக் கூறினுன். யுவான்சுவாங்கு அவனுடைய அறைகூவலையேற்ருர்; அவனேடு வாதிட்டார்; வெற்றி பெற்ருர். ஆனுல், அவன் கூறியது போல அவனுடைய தலையைப் பரிசாகப் பெருமல் அவனைத் தம் சீடனுகக் கொண்டார். அவன் காமரூபம் என்னும் நாட்டு மன்னனிடம் சென்றுயுவான்சுவாங்கின் பேராற்றலைக் கூறினுன். குமாரன் என்னும் பெயருடைய அம்மன்னவன் யுவான்சுவாங்கைக் காணவேண்டும் என்னும் ஆவல் கொண்டு அவரைத் தம்மிடம் வருமாறு வேண்டினுன். அவன் வேண்டுகோளை யேற்று அவர் அங்கு சென்று தங்கி அவனை மகிழ்வித்தார்.

பின்னர் ஹர்ஷன் என்னும் பேரரசன் தம்மிடம் வந்து சில நாட்கள் தங்குமாறு யுவான் சுவாங்கை வேண்டினன். அவன் வேண்டுகோளை யேற்று யுவான் சுவாங்கு குமாரனிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்.

யுவான் சுவாங்கின் அறவுரையாலும் அறிவுரையாலும் ஹர்ஷன் மகாயானப் பிரிவினையைத் தழுவினன். முதலில் வைதிக மதத்தைத் தழுவிய அம்மன்னன், மகாயானப் பிரிவைத் தழுவிய பின்பு, தம் தலைநகராகிய கன்னோசியில் மாநாடு ஒன்றனைக் கூட்டினன். அம்மாநாட்டில் யுவான் சுவாங்கு தொடர்ந்து பல நாட்கள் சொற்பொழிவாற்றுவது என்று ஏற்பாடாயிற்று. பல நாட்டு மன்னர்க்கும், சமயத் தலைவர்கட்கும் ஹர்ஷன் அழைப்பு விடுத்தான். மாநாட்டிற்குப் பதினெட்டு மன்னர்களும், மூவாயிரம் பௌத்த சமயத் துறவிகளும், மூவாயிரம் வைதிக அந்தணர்களும், ஆயிரம் பண்டிதர்களும் வந்து கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசத் தொடங்குவதற்கு முன்னர் யுவான் சுவாங்கு, தம்முடைய கருத்துக்களில் யாரேனும் பிழைகண்டு வென்றால், அவர்கட்குத் தம்முடைய தலையைப் பரிசிலாகக் கொடுப்பதாகக் கூறினர். ஆனல், யாரும் அவருடைய சொற்பொழிவில் கருத்துப் பிழை காணவில்லை. ஹர்ஷன் யுவான் சுவாங்கைப் பாராட்டினன்; நாளந்தாப் பல்கலைக் கழகத்துக்கு நூறு அடி உயரமுள்ள வெண்கலத்தால் செய்யப்பட்ட கோயில் ஒன்றைப் பரிசாக அளித்தான்.

நாளந்தாவில் படித்த மாணவர்கள் உலகு எங்கும் பாராட்டப்பட்டனர். அவருள் சிலரைச் சீனுவிலிருந்தும், திபேத்திலிருந்தும் அவ்வப்பகுதி மக்கள் அழைத்தனர். திபேத் மன்னன் பத்மசம்பவர், சாந்தரிட்சர், சந்திரகோமின் என்னும் பேராசிரியர்களைத் தன் நாட்டிற்கு வருமாறு அழைத்தான். மன்னன் வேண்டுகோளையேற்று அங்கு சென்ற அவர்கள், அங்குத் தங்கள் சமயத்தைப் பரப்ப முயன்றனர். ஜாவா, சுமத்திரா என்னும் தீவுகளை ஆண்ட பலபுத்திரதேவன் என்பவன் நாளாந்தாவிலிருந்துசிலரை வரவழைத்து, அங்கிருந்தது போன்ற மடமொன்றைத் தன் நாட்டில் கட்டுமாறு செய்தான். அதற்கு மானிய மாக ஐந்து கிராமங்களைத் தமது நண்பனுகிய தேவபாலன் என்னும் வங்காள மன்னனிடமிருந்து பெற்றான். நாளந்தாவை யொட்டி விக்கிரமசீலம், ஒதண்டபுரி, ஜகத்தாலம் முதலிய பல்கலைக்கழகங் களும், திபேத்தில் சாக்கியமடமும், டியுபாக் மடமும் தோன்றின. இம்முறையில் அமைந்தன வாக ஆந்திராவில் உள்ள ஸ்ரீதான்ய கடகத்தை யும், தென்னுட்டில் உள்ள திருஞானசம்பந்தர் மடத்தையும், காஞ்சிக் கல்லூரியையும் குறிப் பிடலாம்.

கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் முகமதியர் படை யெடுப்பு நிகழ்ந்தது. அவர்கள் நாளாந்தாவைத் தாக்கி, அதன் கட்டடங்களைத் தகர்த்தெறிந்தனர் என்பது சொல்லப்படுகின்றது. நாளந்தா மாணவர் ஒருவருடன் வாதிட்டுத் தோற்ற இரண்டு வைதிக

அந்தணர்கள், வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வகையில் நாளந்தாவைத் தீக்கிரையாக்கிவிட்டனர் என்றும் சிலர் கூறுவர். மற்றும் சிலர், நாளந்தாவின் அமைப்பை ஒட்டி வளர்ந்த விக்கிரமசீலப் பல்கலைக் கழகத்தின் மிகுந்த இடையீடும் செல்வாக்குமே நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் அழிவுக்குக் காரணமாகும் என்றும் கூறுவர்.

# 3. சேரன் செங்குட்டுவன்

## பதிற்றுப் பத்து

பதிற்றுப்பத்து என்பது சேர மன்னர்களின் வரலாற்றை விளக்கும் நூலாகும். இது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. இதனுள் பத்துப் பாடல்கள் இருந்தன. ஆயின், அவற்றுள் முதற் பத்தும் இறுதிப்பத்தும் அழிந்துபோயின. எஞ்சியுள்ள பாடல்கள் சேரமன்னர்களைப் பற்றித் தெளிவுறக் கூறுகின்றன. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலவரால் பாடப்பட்டது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகங்களும், வாக்கியங்களும் காணப்படுகின்றன. அவை நூலினைத் தொகுத்த புலவரால் பாடப்பட்டவை. அவற்றால் அவ்வப் பத்துக்குரிய சேரனைப் பற்றிய பல செய்திகளை அறியலாம். பதிற்றுப் பத்தால் பின்வரும் சேரமன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை நாம் அறியலாம்:

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
2. பல்யானைச் செல்கெழுகுட்டுவன்
3. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்
4. கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்
5. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
6. செல்வக்கடுங்கோ வாழியாதன்
7. பெருஞ்சேரலிரும் பொறை
8. இளஞ்சேரலிரும் பொறை

## சேரன்-செங்குட்டுவன்

செங்குட்டுவன் தன்னுடைய இருபதாம் வயதில் சேர நாட்டையாளும் பொறுப்பேற்ருன்; முதுமைப் பருவம் வரையில் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான். பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்து, சிலப்பதிகாரமும் இவனைப் பற்றிப் பேசுகின்றன.

***இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்*** என்பவனே செங்குட்டுவனின் தந்தை; தாய் *நற்சோணை* என்பவள். அவள் சோழன் மணக்கிள்ளியின் மகள்.

## போர்ச் செயல்கள்

பதிற்றுப் பத்தும், சிலப்பதிகாரமும் செங்குட்டுவன் செய்த போர்களைக் குறிப்பிடுகின்றன. அவன் செய்த போர்களாவன:—

1. தன்னுடைய தாய் நற்சோணையின் படிமத்தைக் கங்கையில் நீராட்டச் சென்றபோது, அங்கு எதிர்த்த ஆரிய மன்னர்களை எதிர்த்து நடத்திய போர்.
2. கொங்கர் செங்களத்து நடத்திய போர்.
3. கடல்வழியே சென்று நடத்திய போர்.
4. பழையன் மாறனுடன் நடத்திய போர்.
5. ஒன்பது சோழருடன் நடத்திய போர்.

இனி இவைபற்றித் தெளிவாக அறிவோம்:

செங்குட்டுவன் தன் தாய் நற்சோணை இறந்த பின்பு அவள் பொருட்டு அமைத்த பத்தினிக் கல்லை நீராட்டிக் கொணரக் கங்கை நோக்கிச் சென்றான். அப்போது அங்கு ஆரிய மன்னர் பலர் திரண்டு வந்து அவனை எதிர்த்தனர். அவன் அவர்களை யெல்லாம் தனியனாக இருந்து பொருது வென்றான். இதுவே அவனது முதற் போராகும். இதனைச் சிலப்பதிகாரம்,

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை யாட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் நூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலங்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்"

என்று சிறப்பிக்கின்றது.

சோழ பாண்டியர் இணைந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். அப்போர் கொங்கர் செங்களத்து நடைபெற்றது. செங்குட்டுவன் அவர்களுடைய கொடி, படை முதலியவற்றைக் கொண்டு பெரு வெற்றி அடைந்தான்.

செங்குட்டுவன் கடலில் படைகளைச் செலுத்தியதையும், பழையன் என்பவனை அழித்ததையும் பரணர் என்னும் வரலாற்றுக் கவிஞர் சிறப்பித்துக் கூறியுள்ளார். கடலை அரணாக அமைத்துக்கொண்டு துன்பம் விளைத்துக்கொண்டிருந்த பகையரசரை எண்ணற்ற மரக்கலங்களுடன் சென்று அழித்தமை செங்குட்டுவன் போர்ச் செயல்களுள் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதுபற்றியே இவன், 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்று சிறப்பிக்கப்

பட்டான். 'சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்' என்று இவனைப் புறநானூறும் புகழ்கின்றது.

செங்குட்டுவன் பழையனுடன் நடத்தியபோர் அவனுக்குப் புகழளித்த போர்களில் ஒன்றாகும். பழையன் என்பவன் பாண்டியனுடைய படைத் தலைவன். இவன் மோகூர் என்னும் ஊருக்கு உரியவன். அறுகை என்பவன் செங்குட்டுவனின் நண்பன்; அவன் பழையனின் பகைவன். நண்பனுக்குத் துணை நிற்க எண்ணியே செங்குட்டுவன் அவ்விருவர்க்கும் நடந்த போரில் பங்கு கொண்டான். அப்போரில் பழையனது காவல் மரம் அழிந்தது. செங்குட்டுவன். பழையனுடைய யானைகளைக் கடாவாகவும், அவன் மகளிரது கூந்தலைக் கயிருகவும் திரித்து வண்டியில் இழுத்தான் என்று பதிற்றுப்பத்துக் கூறுகின்றது.

வியலூர் என்னும் பெயருடைய ஊர் ஒன்று கடற்கரையை அடுத்திருந்தது. அதனைச் செங்குட்டுவன் வென்ருன்; நேரிவாயில் என்னும் இடத்தில் சோழ மன்னர் ஒன்பதின்மரோடு போர் புரிந்து வெற்றி பெற்ருன்; இடும்பாவனம் என்னும் ஊரையும் வென்ருன். செங்குட்டுவன் அம்மான் இறந்ததும், அவன் மகளுகிய இளஞ்சோழன் பட்டம் பெற்ருன். அவன் செங்குட்டுவனின் மைத்துனன். இளஞ்சோழன் பட்டம் பெற்றதைப் பொருத சோழ மரபினர் ஒன்பதின்மர் குழப்பம் விளைவித்தனர். செங்குட்டுவன் அவர்களை வென்று குழப்பத்தை அடக்கினுன்.

## சிலப்பதிகாரம்

செங்குட்டுவன் காலத்தில் சிறப்புடைய வரலாற்று நிகழ்ச்சிகள் இரண்டு நடைபெற்றன. அவை கண்ணகி வரலாறும், மணிமேகலை வரலாறுமாகும். கண்ணகி வரலாற்றைக் கூறும் சிலப்பதிகாரத்தை **இளங்கோவடிகள்** இயற்றினர். **மணிமேகலை** வரலாற்றைக் கூறும் மணிமேகலையை மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் இயற்றினர்.

சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் கொண்டது. கண்ணகியின் திருமணம், மாதவியின் நடன அரங்கேற்றம், கோவலன் மாதவியுடன் வாழ்ந்த வாழ்வு, கண்ணகியின் அவலநிலை, கோவலன் மாதவியை விட்டு நீங்குதல், கோவலனும் கண்ணகியும் புகாரை விட்டு நீங்குதல், மதுரை நோக்கிப் புறப்படுதல் முதலியன **புகார்க் காண்டத்தில்** கூறப்படுகின்றன.

கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கி இருவரும் வழி நடத்தல், ஆயர்குல மகள் மாதரியின் மனையில் காதலர் இருவரும் இருத்தல், கோவலன் கல்லாக் களிமகனல் கொல்லப்பட்டது, கண்ணகி வழக்குரைத்தல், பாண்டியனும் அவன் மனைவியும் இறத்தல், கண்ணகியின் சினத்தால் மதுரை அழிதல், மதுராபதி தெய்வம் கண்ணகிக்குப் பழைய வரலாறு கூறுதல் முதலியன **மதுரைக் காண்டத்தில்** கூறப்படுகின்றன.

வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவனைப் பற்றியே பேசப்படுகின்றது. செங்குட்டுவன் கண்ணகியின் படிமம் சமைக்கக் கல் கொணர இமயம் சென்றது, அங்குக் கனகன் - விசயன் என்னும் ஆரிய மன்னர் இருவர் அவனை எதிர்த்துத் தோற்றமை, அவர்கள் தலையில் கண்ணகி படிமத்திற்குரிய கல்லை ஏற்றிக் கொணர்ந்தது, வஞ்சிமா நகரில் கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்பித்தது, அவ்விழாவுக்குப் பல நாட்டு மன்னர்கள் வந்திருந்தது, கண்ணகி வாழ்த்தும் வரமும் தந்தது ஆகிய செய்திகள் எல்லாம் இக்காண்டத்திலேயே பேசப்படுகின்றன.

குன்றக்குரவை, காட்சிக்காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை, வரந்தருகாதை என்னும் காதைகள் வஞ்சிக் காண்டத்துக்கு உரியன.

## மலைவளம் காணல்

சேரநாட்டு மலையில் அருவிகள் முழங்கும்; அம்மலை மேகங்கள் சூழ்ந்த சோலைவளம் பெற்றது; திருமால் மார்பின் ஆரம் போன்ற பேரியாற்றைக் கொண்டது; இத்தகைய வளமுடைய மலையைக் காணச் செங்குட்டுவன் தன்மனைவி இளங்கோவேண்மாளுடன் புறப்பட்டுச் சென்றான். அவனுடன் வீரர் பலர் சென்றனர்; இளங்கோவடிகளும் சென்றார். அவர்கள் அனைவரும் பேரியாற்றங்கரை மணற்குன்றில் தங்கினர்.

மலையில், மலைவாழ் மக்கள் குரவையாடினர்; தினையிடிப்போர் வள்ளைப்பாட்டுப் பாடினர்; தினைப்புனங்களில் கிளி முதலியவற்றைக் கடிந்து ஓட்டினர்; அருவிபோர்ப்பறைபோலப் பயங்கரமாக முழங்கியது; புலியும் யானையும் பொருதன; அதனுல் அவற்றின் உறுமல் ஒலி எங்கும் கேட்டது. தினைப்புனம் காப்போர் ஆலோலம் பாடினர்; குழிகளில் விழுந்த யானைகளை வெளியேற்றி ஒலி செய்தனர். அந்நிலையில் அவர்கள் மன்னன் வந்ததை அறிந்தனர்; மன்னனைக் காண மலைபடு பொருள்களுடன் சென்றனர்; மன்னனைக் கண்டு வணங்கி வாழ்த்தினர்; தாம் மலைப்பகுதியில் கண்டவொரு வியத்தகு நிகழ்ச்சியைக் கூறலாயினர்.

மலைவாணர் செங்குட்டுவன் வியப்புறும் வண்ணம் கூறியது யாது? "மன்னவ, நீ வாழ்க! ஏழ் பிறப்புக்கும் யாம் உன் அடியவர்கள். உன் கொற்றம் வாழ்க! எங்கள் மலையில் நாங்கள் நினைப்பிலும் அறியாத நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இம்மலைமேலுள்ள வேங்கை மர நிழலில் ஒரு பெண் நின்ருள்; கணவனை இழந்து துயருற்றதாகக் கூறிளுள். அவள் கணவனுடன் விண்ணவர் போற்ற விண்ணகம் அடைந்தாள். அவள் எந்நாட்டைச்சேர்ந்தவள், யாருடையமகள் என்பதையெல்லாம் நாங்கள் அறியோம். இதற்கு முன்னர் அவளை நின் நாட்டில் நாங்கள் கண்டதில்லை. அவள் பலகாலம் வாழ்க"!

## செங்குட்டுவன் திகைப்பும் தெளிவும்

மலைவாழ் மக்கள் கூறிய வரலாற்றைக் கேட்ட செங்குட்டுவன் ஒன்றும் விளங்காமல் திகைத்தான். விண்ணவர் போற்ற விண்ணகம் அடைந்தவள் யார் என்பது அவனால் அறியமுடியவில்லை. அவ்வேளையில் சாத்தனார் அங்கு வந்தார். அவர் செங்குட்டுவனது திகைப்பைப் போக்க முனைந்தார்; கண்ணகியின் வரலாற்றைத் தெளிவுபடக் கூறினார். மன்னன் அதுகேட்டு மகிழ்ந்தான். அவன் தன் மனைவியை நோக்கி, "கணவனை இழந்து வஞ்சி நாடு அடைந்து விண்ணகம் சென்ற கண்ணகி, கணவன் இறந்தவுடன் உயிர்நீத்த கோப்பெருந்தேவி ஆகிய இவ்விருவருள் சிறந்தவர் யார்?" என்று கேட்டான். அம்மாதேவி, "கணவனுக்குற்ற துன்பம் பொறுமல் உயிர்விட்ட பாண்டியன் மனைவி விண்ணுலகில் சிறப்புறட்டும், நம் அகல் நாடு வந்தடைந்த பத்தினிக் கடவுளைத்தான் நாம் வழிபடவேண்டும்", என்றாள். செங்குட்டுவன் அதுகேட்டு மிகவும் மகிழ்ந்தான்; கண்ணகி வழிபாட்டுக்கு மேற்கொள்ள வேண்டும் முறைகள் யாவை என்பது அறிய அமைச்சரை நோக்கினான்.

## சிறந்த இருவர் கூற்று

வில்லவன்கோதை, அழும்பில்வேள் என்னும் இருவரும் செங்குட்டுவனது சிறந்த அமைச்சர்களாவர். மன்னனது குறிப்புணர்ந்த அமைச்சர் பத்தினிச் சிலைக்குரிய கல்லைப் பொதியமலையில் எடுத்துக் காவிரியில் நீராட்டலாம் என்றும், அல்லது இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில்

நீராட்டலாம் என்றும் கூறினர். பொதிய மலையில் கல்லெடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்யச் செங்குட்டுவன் விரும்பவில்லை. இமயத்தில் கல் லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்யவே அவன் விரும்பினுன்.

வில்லவன் கோதை என்னும் அமைச்சன், "மன்னவ, நினது கொற்றம் வாழ்க! முன்னர், கொங்கர் செங்களத்தில் நின்ளேடு எதிர்த்துப் பொரமுடியாத பாண்டியரும், சோழரும் தங்கட் குரிய கயற்கொடியையும், புலிக்கொடியையும் உனக்கு அளித்து அஞ்சி ஓடினர். உன்னுடைய அந்த வெற்றி திசையானைகளின் செவிகளுக்கு எட்டுமளவில் சிறப்புடையது, கொங்கர், கலிங்கர், கருநாடார், வங்கநாட்டார், சிற்றரசர் பலர் ஆகியவருடன் தமிழ்ப்படை கலந்தபொழுது, நீ நினது யானையை விட்டுப் பகைவரை வென்ற சிறப்பை என்ஞல் மறக்கமுடியவில்லை. நின் தாயும் எம் அரசியுமாகிய நற்சோணையை நீ கங்கையில் நீராட்டியபொழுது, நின்னை எதிர்த்த ஆரியமன்னர் ஆயிரவரை நீ ஒருவனுக நின்று எதிர்த்த காட்சியைக் கூற்றுவன் கண் விழித்துக் கண்டான். எனவே, இப்போது நீ கொண்ட எண்ணம் சிறப்புடையது. கண்ணகிக்கு இமயத்தி லிருந்து கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்ய எண்ணும் நினது எண்ணத்தைத் தடை செய்யும் வலிமை எவர்க்கும் இல்லை. ஆகவே, வடதிசை மன்னர்கெல்லாம் உன்னுடைய இந்த முடிவை நினது இலச்சினை பொறிந்த ஓலைகளில் அமைத்து அனுப்பலாம்" என்ருன்.

அழும்பில்வேள் என்பவன், "மன்னவ, வட திசை மன்னர்க்கெல்லாம் உன்னுடைய வட நாட்டுச் செலவுபற்றிய செய்தியை நின் இலச்சினை பொறித்த ஓலைகளின் வழித் தெரிவிக்க வேண்டுவ தில்லை. அவர்களுடைய ஒற்றர்கள் நம் பேரூரில் பலராக உள்ளனர். ஆதலால் நாம் பறையறைந்து அதனைத் தெரிவித்தலே சாலும்'', என்றான். அழும்பில்வேள் கூறிய கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டது. எனவே, செங்குட்டுவனது வடநாட்டுச் செலவு வஞ்சிமாநகரில் பறையறைந்து தெரிவிக்கப் பட்டது.

## மன்னன் வஞ்சினம்

இமயத்திலிருந்து நீராட முனிவர் சிலர் வஞ்சிமாநகர் வந்தனர். அவர்கள் கனகன்-விசயன் என்னும் ஆரிய மன்னர்தம் செருக்குப்பற்றிச் சேரனிடம் கூறினர். அவ்வளவில் செங்குட்டுவன் சினந்தான்; தன் ஆற்றலைப் பிறர் உணரும் வகையில் வஞ்சினம் கூறினான்.

"இமயத்திலிருந்து வந்த முனிவர்கள், கனகன்-விசயன் என்னும் ஆரிய மன்னர் இருவர் நம்மை யெல்லாம் இகழ்ந்துரைத்ததாகச் சொல்லினர். அவ்வரசர் தமிழர் ஆற்றலை அறியார் போலும்! அவர்கள் கூற்றுச் சோழ பாண்டியர்க்கும் இகழ்ச்சியைத் தரும். ஆதலால் அவர்களை வென்று, பத்தினிக்கல்லை அவர்கள் தலையில் வைத்துக்கொண்டு வரும்படி செய்யாவிடின், குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் மன்ன னாகக் கடவேன்", என்று செங்குட்டுவன்

அமைச்சர், சான்றோர் முதலானோர் முன்னிலையில் வஞ்சினம் கூறினான்.*

## சோதிடன் கூற்று

சோதிடன் எழுந்து மன்னனைப் பணிந்தான். "மன்னவ, நின் கொற்றம் வாழ்க! நின் பகை மன்னரெல்லாம் நின்னை வணங்கிச் சிறப்புப்பெறும் காலம் இதுவேயாகும். நீ வடதிசை நோக்கி இப்போதே புறப்படுவாயாக", என்றான். அது கேட்டு மகிழ்ந்த செங்குட்டுவன், 'என் வாளும் குடையும் வடதிசை நோக்கிப் பெயர்க' என ஆணையிட்டான். அவ்வளவில் முரசு ஒலித்தது.. வீரர் ஆர்த்தனர். மாகதப்புலவரும் வைதாளிகரும் தேர்ப்பாகரும் அரசனுக்கு வெற்றியுண்டாக வாழ்த்தினர். சேரன் வடதிசை நோக்கிப் புறப்பட்டான்.

## நூற்றுவர் கன்னர் துணை

பாடி வீடுகள் நீலகிரியில் அமைக்கப்பட்டன. மன்னன் தனக்கென அமைக்கப்பட்ட அமளியில்

---

* "இமையத் தாபதர் எமக்கீங் குணர்த்திய
அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி
நம்பால் ஒழுகுவ தாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்;
வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
செறிகழல் புனைந்த, செருவெங் கோலத்தும்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலே னாக"

அமர்ந்தான். மன்னர் பலர் அவனைக் கண்டு வணங்கினர்; முனிவர் வாழ்த்தினர். அப்போது சஞ்சயன் வந்திருப்பதாக வாயிற்காப்போர் கூறினர். சஞ்சயன் மன்னனைப் பலபடப் பாராட்டிப் பின் வருமாறு கூறலானான்.

நூற்றுவர் கன்னர் உன்னுடைய நண்பர். சேரன் கண்ணகிக்குக் கல்லெடுக்க இமயம் செல்லவேண்டா. நாங்களே சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொணர்வோம்', என்கின்றனர். அருள்புரிக''.

செங்குட்டுவன், தோணிகள் தயார் செய்து கங்கையைக் கடக்கத் துணைபுரியுமாறு உதவ நூற்றுவர் கன்னரை வேண்டிச் சஞ்சயனைத் தூதனுப்பினான். நூற்றுவர் கன்னர் துணையைக் கொண்டு செங்குட்டுவனும், அவன் படை வீரரும் கங்கையைக் கடந்தனர். உத்தரன், விசித்திரன், உருத்திரன், பயிரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் முதலிய மன்னர்களோடு கனகனும், விசயனும் கலந்து செங்குட்டுவனோடு போர் புரியத் தயாராயிருந்தனர். போர் நடைபெற்றது. கனக - விசயரும் அவர்க்குத் துணையாக வந்தோரும் தோற்றனர். இப்போர் பதினெட்டு நாழிகையில் முற்றுப்பெற்றது என்பர். கண்ணகிக்கு எடுக்கப்பட்ட' கல் கங்கையில் நீராட்டப்பட்டது; கனக - விசயர் தலைமேல் ஏற்றி வஞ்சிக்குக் கொணரப்பட்டது.

கண்ணகிக்குப் படிமம் சமைக்கப்பட்டது. கண்ணகிச் சிலையைக் கோயிலில் எழுந்தருளச் செய்யுமாறும், திருவிழா நடத்துமாறும், நாளும்

வழிபாடுகள் நிகழ்த்துமாறும் செங்குட்டுவன் அமைச்சரை ஏவினன். பல நாட்டு மன்னர்களும் கூடினர். கயவாகு என்னும் இலங்கை நாட்டு மன்னன் கண்ணகியைத் தன் நாட்டிலும் எழுந்தருளுமாறு வேண்டி, வரம் பெற்றான்.

## செங்குட்டுவன் பண்பு நலன்

செங்குட்டுவன் இறையன்பு மிக்கவன். இவன் சிவபெருமான் அருளால் பிறந்தவன். ஆயினும் திருமால் முதலிய தெய்வங்களிடத்தும், முனிவர்கள், சான்றோர்கள் முதலியோரிடத்தும் அன்பு கொண்டவன். இவனே தமிழகத்திலும், இலங்கை முதலிய நாடுகளிலும் கண்ணகித் தெய்வ வணக்கம் பரவியமைக்குக் காரணமாவான்.

போர்த்துறையில் பெருவிருப்பம் கொண்ட செங்குட்டுவன், தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் போர் புரிவதிலேயே செலவிட்டான். இதனை,

> "வையங் காவல் பூண்டநின் னல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

இவன் நாட்டு மக்கள் நலன்கருதி நன்மைகள் பல செய்தான். நல்லியல்புகள் பலகொண்ட இம்மன்னவன் மிக்க முன்கோபம் உடையவனாக இருந்தான். தனக்கு அடிமைப்பட்ட கனக-விசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு

பணித்தான். அவர்கள் இருவரிடமும் கனக-விசயரைக் காட்டி மீண்ட காவலன், அவர்கள் நகைத்துக் கூறிய நகைமொழிகளைக் கூறினர். செங்குட்டுவன் அது கேட்டுச் சினந்தான், அப்போது மாடலமறையவன் கூறிய நல்லுரைகளைக் கேட்டுச் சோழ பாண்டியருடன் போர் செய்வதை விடுத்தான். சேர அரசருள் செங்குட்டுவனே நெடுங்காலம் அமைதியுடன் ஆண்டான் என்னலாம்.

இப்பெருமகனது வரலாற்றை மிகவும் தெளிவாகவும் விரிவாகவும் இவன் தம்பியான இளங்கோவடிகள் தாம் இயற்றிய நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில்' பாடியுள்ளார். நீங்கள் அக்காவியத்தைப் படித்துப் பயன் பெறுதல் நல்லது.

# 4. பிரான்ஸிஸ்கோ பிஸாரோ*

## ஐரோப்பியர் ஆர்வம்

கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டுபிடித்தார். பின்னர் அந்நாட்டினைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள ஐரோப்பியர் விரும்பினர். அமெரிக்கா பற்றிய முழு விவரங்களை அறிய நாடு காணும் வேட்கை கொண்டோரைப் பலநாட்டு அரசியலார் அமெரிக்காவின் பல பிரிவுகளுக்கும் அனுப்பினர். அமெரிக்கா சென்று மீண்டவருள் கல்வியறி வற்றோர் பலராவர். அவர்கள் அமெரிக்க நாட்டில் உள்ள மலைகள் யாவும் பொன்னுலானவை என்றும், ஆறுகளின் இருபுறங்களிலும் 'பலவகை மணிகள் பரவிக் கிடந்தன என்றும், ஆற்றுப் படுகைகளில் முத்துக்கள் காணப்பட்டன என்றும் கூறினர். அந்நாட்டைப் பற்றிய முழு விவரங்களையும் அறிய வேண்டும் என்று விரும்பிய ஐரோப்பியர்தம் ஆர்வத்தை இச்செய்திகளெல்லாம் மிகுதிப் படுத்தின.

## ஸ்பெயின் நாட்டறிஞர்

ஸ்பெயின் நாட்டினர் சிலர் அமெரிக்காவுக்குச் செல்ல முனைந்தனர். அவருள் *பிரான்ஸிஸ்கோ பிஸாரோ* என்பவர் ஒருவர். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர்; செல்வர் ஒருவருடைய பன்றிகளை மேய்த்து வாழ்ந்தார். ஏழ்மையில்

---

* Francisco Pizarro.

பிறந்த அவர் செல்வர் சிலருடைய வாழ்க்கை முறைகளைக் கண்டார்; அவர்களைப்போல் வாழ முடியாவிட்டாலும், தமது துன்ப நிலையிலிருந்து விடுதலை பெற்று வாழ்வது சிறந்தது என்று எண்ணினார்; தன் எண்ணம் நிறைவேற வேண்டுமாயின் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பினார்; அந்த விருப்பத்துக்குக் கப்பற்றலைவர்கள் தான் துணை செய்ய முடியும் என்பதை அறிந்த அவர், கப்பற்றலைவர்களை நாடினார்; அவர்களிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார்; தமக்குத் துணையாக அவர்கள் இருக்கவேண்டுவது இன்றியமையாதது என்று கூறித் துணைபுரியுமாறு வேண்டினார். பல்போவா* என்னும் கப்பற்றலைவர் பிஸாரோவிடம் இரக்கம்கொண்டு துணை புரிய முன்வந்தார்.

## பல்போவா

'சான்டொமிங்கோ' என்னும் தீவு அமெரிக்காவை அடுத்திருப்பது. அங்குப் பயிர் இடுவோராக பல்போவா முதலில் தொழில் புரிந்தார். வளமான வாழ்வு வாழவேண்டும் என்று எண்ணிய அவரால் அத்தொழிலில் வளம் காண முடியவில்லை. போதுமான அளவுக்கே அவரால் வருவாய் பெறமுடியவில்லை. அதனால் பலரிடம் கடன்பட்டு வாழவேண்டும் நிலைமை அவர்க்கு நேர்ந்தது. அந்நிலையிலிருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ எண்ணிய அவர், சிறந்தவொரு தொழிலை மேற்கொள்ள எண்ணினார்; அமெரிக்கா செல்வது தான் சிறப்பு என்றும், அங்குத்தான் பெரும்பொருள்

* Balboa.

தேடி வளமாக இருக்கமுடியும் என்றும் நம்பினுர். அதனுல் தமக்கு அறிமுகமான நண்பர் பலரிடம் தம்முடைய ஆர்வத்தைக் கூறினுர்.

நண்பர்கள் அவருக்குத் துணைபுரிய முன்வர வில்லை. சிலர் பொருள் தருவதாகக் கூறியும் உரிய காலத்தில் தராமல் காலம் கடத்தி வந்தனர்; சிலர் அவரை நம்பிப் பொருளுதவி செய்ய முடியாது என்றும் கூறினர். நண்பர்களுடைய செயல்கள் பல்போவாவின் முயற்சியைத் தடைபடுத்திவிட வில்லை. தம்முடைய எண்ணத்தை உணர்ந்து பொருளுதவி நல்ல வாழ்வில் தன்னை ஈடுபடுத்தும் மனநிலை தன் நண்பர்களுக்கு இல்லாமை குறித்து அவர் வருந்தினுர்.

பல்போவா அமெரிக்கா செல்வதற்குச் சூழ்ச்சியான முறையைப் பின்பற்றலானுர். எவரும் அறியாதபடி ஒருநாளிரவில் கப்பற்றுறையை அடைந்தார்; கப்பலில் ஏற்றுவதற் கென்று வைக்கப் பட்டிருந்த வெற்றுப் பெட்டியில் ஏறிக்கொண்டார். கப்பல் புறப்பட்டதும் பெட்டியை விட்டு வெளி வந்தார்; மேல்தளம் சென்றுர்; உறங்கிக்கொண் டிருந்த கப்பற்றலைவர்களுடன் உறங்கினுர்; பின்னர் அவர்களோடு பழகி நண்பரானுர். அவர்களுடைய நட்பு அவர்க்குப் பெரிதும் துணையாயிருந்தது. அவர்களுடைய துணையைக் கொண்டு நாளடைவில் அவர் சிறந்த கப்பல் தலைவரானுர்.

## முதற் கடற் செலவு

பல்போவா பிஸாரோவைக் கண்டதும் தம்முடைய இளமைக்கால நினைவுகளை எண்ணிப்


தென் அமெரிக்க
நாடுகள்
மைல்
0 400 800
வ. அ.
மே. இ.
தீவுகள்
ஜமெய்கா
பனமா
கொலம்பியா
ஈக்வடார்
அமெஸான். நதி
பிரேஸில்
பெரு
பொலிவியா
பராகுவே
உருகுவே

பார்த்தார்; அவரை முன்னேற்றுவிக்க வேண்டும் என்று நினைத்தார்; அதனால் தாம் மேற்கொண்ட கடற் செலவுகளிலெல்லாம் பிஸாரோவையும் உடனழைத்துச் சென்றார். அந்த வகையில் அவர் பெற்ற அநுபவங்கள் அவருக்குத் தகுந்த வகைகளில் பயன்பட்டன.

பிஸாரோ பனாமாவிலிருந்து தென்னமெரிக்கா செல்ல விரும்பினார்; அல்மக்ரோ என்பவரையும் கிறிஸ்தவ சமயப் பெரியார் ஒருவரையும் அணுகிப் பொருள் உதவி பெற்றார். அல்மக்ரோ என்பவர் ஸ்பெயின் நாட்டுப் போர்வீரராவார். அவர் பிஸாரோவுடன் செல்ல விரும்பினார்; தாம் போர் வீரராதலால் அவர்க்குத் தகுந்த துணையாக இருக்க முடியும் என்று எண்ணினார். பயணத்திற் காகப் புதிய கலம் கட்டப்பட்டது; நூற்றுக்கு மேற்பட்ட பொறியியல் வல்லுநர்கள் சேர்க்கப் பட்டனர். அவர்கள் 1524-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 24-ஆம் நாளன்று பனாமாவை விட்டுப் புறப்பட்டனர். சில நாட்கள் கழிந்த பின்னர்த் தனியாக கலம் ஒன்றை அமைத்துக் கொண்டு அல்மக்ரோ அவர்களைப் பின் தொடர்ந்தார்.

## முத்துத் தீவு

பனாமாவை விட்டுப் புறப்பட்ட பிஸாரோவின் குழுவினர் முத்துத் தீவு என்னுமிடத்தை அடைந்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் கலத்தைக் கரையோரமாகவே செலுத்தினர்; மக்கள் வாழும் இல்லங்கள்

இடையில் காணப்படுகின்றனவா என்று ஆராய்ந்த வாறு சென்றனர். இந்நிலையில் சில வாரங்கள் கழிந்தன. புயல் வீசியது. அதனால் கப்பல் தத்தளித்தது. மிகுந்த கவலையுடனும், கருத்துடனும் கப்பலைச் செலுத்தினர். புயல் தணிந்தது. ஆனால் அவர்கள் மனத்தில் கொண்ட கலக்கம் தணியவில்லை. குடிநீர் குறைந்து விட்டதால் அவர்களுக்குக் கவலை மிகுந்தது. அவர்கள் கரையோரப்பகுதி ஒன்றில் கலத்தை நிறுத்தி உணவுப் பொருள்களையும் குடி நீரையும் சேமித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினர்; அதனால் கலத்தை ஓரிடத்தில் நிறுத்தினர்; அனைவரும் கரைக்குச் சென்றனர். கரையோரங்களில் காட்டு அத்தி மரங்கள் நிறைந்திருந்தன. அவற்றிலிருந்த அத்திக் காய்களை அவர்கள் பறித்து உண்டனர். உணவுப் பொருள்களைச் சேகரிப்பதற்காகத் தொடர்ந்து நடந்து சென்றனர். சிறிது தொலைவு செல்வதற்குள் அத்திக்காய் உண்ட அனைவரும் மயக்கமுற்று விழுந்தனர். பிஸாரோ முதலுதவி செய்து அவர்கள் மயக்கத்தைத் தெளிவித்தார்; ஓய்வெடுத்துக் கொண்டு, தங்கியிருந்த இடத்துக்குச் செல்லுமாறு பணித்துவிட்டு உள்நாட்டினுள் சென்றார்.

உள் நாட்டில் அடர்ந்த காட்டுக்குள்ளிருந்த சிற்றூரைப் பிஸாரோவும் அவர்தம் நண்பர்களும் கண்டனர். அங்கு மக்கள் இருந்தனர். அவர்கள் பிஸாரோவையும் அவர்தம் குழுவினரையும் கண்டதும் அஞ்சி ஓடினர். பிஸாரோ தகுந்த விழிப்புணர்வுடன் தொடர்ந்து நடந்தார். அப்

பகுதி வளமுடையதாக இருப்பதைக் கண்டார்; திரளாக மறைந்து நின்றுவந்த அவ்வூரார் அப்புதியவர்களைக் கண்டனர். பிஸாரோ அவர்களைத் தங்கள் அருகில் வருமாறு சைகை செய்து அழைத்தார். அவர்கள் அச்சமும் பணிவும் கலந்த நிலையில் வந்து நின்றனர். பிஸாரோ அவர்களுடைய கைகளிலும் கால்களிலுமிருந்த கனத்த பொன்னாலான காப்புகளைக் கண்டார். அவர் உள்ளம் மகிழ்ந்தது; உடன் வந்தவர் மகிழ்ந்தனர். அதனால் அனைவரும் ஊக்கம் கொண்டனர். எந்தவிதப் பயனும் இல்லாமல் நீர்ப் பரப்பையே எங்கும் காணும் நிலையில் தொடர்ந்து மேற்கொள்ளவிருக்கும் கடற் செலவைத் தடுத்துவிட வேண்டும். தாய்நாடு திரும்பிவிடவேண்டும் என்று நினைத்த கப்பற் றலைவர்களும் தங்கள் நினைப்பை மறந்தனர்; கரைக்குச் சென்று கப்பலேறித் தொடர்ந்து செல்ல விரும்பினர்.

## பனுமாவுக்கு மீளல்

முத்துத் தீவிலிருந்து கலம் புறப்பட்டுவிட்டது. வழக்கம் போலப் பிஸாரோ கடற்கரை ஊர்கள் எவையேனும் காணப்படுகின்றனவா என்று எண்ணிக் கரையை நோக்கிச் சென்றார். ஆங் காங்குத் திட்டுத்திட்டாகக் குடில்கள் சில காணப் பட்டன. பல குடில்களைக் கொண்ட சிற்றூர் ஒன்றனை அவர் கண்டார்; அங்குசென்று அதனை ஆராய்வதால் ஏதேனும் நன்மைகள் விளையக்கூடும் என்று எண்ணினர். அதனால் தம்முடைய வீரர் சிலரை அவ்வூரினுள் சென்று மக்கள் நிலைமை

அறிந்து வருமாறு கூறினர். கப்பல் நிற்பதையும், கப்பலில் இருந்தோருள் சிலர் மட்டும் இறங்கித் தங்கள் வாழ்விடம் நோக்கி வருவதையும் எஞ்சியோர் கப்பலிலேயே இருப்பதையும் அங்கு உள்ள மக்கள் கண்டனர். அவர்கள் முரட்டியல்பு கொண்டவர்களாக விளங்கினர். அவருட்சிலர் தங்கள் வாழ்விடம் நோக்கி வந்தோரை எதிர்த்துத் தாக்கினர். வேறு சிலர் கப்பலை நாடிச்சென்று அங்கிருந்தோரைத் தாக்கினர். இதனுல் பிஸாரோ குழுவினர் அஞ்சினர்; தொடர்ந்து செல்லச் செல்ல அப்பகுதிகளில் உள்ள மக்கள் முரட்டியல்பு உடையவர்களாகவே இருப்பரோ என்று ஐயம் கொண்டனர்; தங்கள் ஐயம் உண்மையாயின், அவர்களுடைய எதிர்ப்பையெல்லாம் சமாளிக்கும் வகையில் தங்களிடம் வலுவில்லை என்பதை உணர்ந்தனர்; எனவே, பனுமா மீண்டனர். பிஸாரோவைத் தொடர்ந்து சென்ற அல்மக்ரோ சான்ஜுவன் ஆறு வரையில் சென்று நண்பரைக் காணுமையால் சோர்வுடன் திரும்பினர்.

## இரண்டாம் கடற்செலவு

பனுமா மீண்ட பிஸரரோ இரண்டாம் கடற் செலவுக்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலானுர்; இரு கலங்கள் இம்முறை தேவையென்று எண்ணி அமைத்துக்கொண்டார். ரூயிஸ் என்னும் பெயருடைய மாலுமி கலம் செலுத்த ஒப்பினுர். உடன் வருவோர் தொகை முன்னைக்காட்டிலும் பெருகியது. அல்மக்ரோவும் உடன் செல்ல ஒருப்பட்டார். அனைவரும் பனுமாவை விட்டுப் புறப்பட்டனர். பிஸாரோ சான்ஜுவன் ஆற்றின்

வடபகுதி மக்களைப் பற்றி நன்கு அறிந்தவர் ஆதலால், அப்பகுதியினை விரைவில் அடைந்தார். அங்குக் கலத்தை விட்டுத் தம் நண்பருடன் கடற் கரையை அடுத்த உள் நாட்டினுள் நுழைந்தனர்.

அங்கிருந்த மக்கள் அவர்களை அன்புடன் அழைத்தனர்; தங்களன்பிற்கு அறிகுறியாகத் தாங்கள் அணிந்திருந்த பொன் வளையல்களுள் சிலவற்றைக் கொடுத்தனர்; பொன்வளையல்களைப் பெற்றுக்கொண்ட பிஸாரோ பெரிதும் மகிழ்ந்தார். அல்மக்ரோ அதுபோன்ற பொன்வளையல்கள் பல வற்றை அவர்களிடமிருந்து பெறவேண்டுமென்று விரும்பினர். பொன்விளையும் நாட்டைக் காண வேண்டும் என்று நெடுங்காலமாக விரும்பிய ஸ்பெயின் நாட்டினர், அம்மக்களிடமிருந்து எவ்வா றேனும் பெரும் பொருளைப் பெறுதல் வேண்டும் என்று எண்ணினர். தொடர்ந்து மேற்கொள்ள இருக்கும் கடல்வழிச் செலவில், பொன்னும்மணியும் வளம்தரும் பிற பொருள்களும் மிகுந்த நாட்டினைக் காணக்கூடும் என்று நம்பினர். அல்மக்ரோ எண்ணுவதுபோல அம்மக்களிடமிருந்து போர் செய்து பொன்னைப் பெற வேண்டுமானல், அதற் கேற்ற வலிமை யுடைய மக்கள் தங்களிடையே இல்லை என்பதைத் தம்முடன் இருந்தவர்க்குப் பிஸாரோ சுட்டிக் காட்டினர். உடனே அல்மக்ரோ பனுமாவுக்கு மீண்டும் சென்று வலுவுடைய ஆட்கள் பலரை அழைத்து வருவதாக உரைத்தார். தம்மிடமுள்ள பொன்னைக் கொடுத் தால் அதனைக் காணும் மக்கள் எளிதாகப் புறப் பட்டு வருவர் என்று பிஸாரோவும் எண்ணினர்;

ஆட்களை அழைத்து வருவதுடன் மிகுந்த உணவுப் பொருள்களையும் கொண்டு வருமாறு கூறி அல்மக்ரோவை பனுமாவுக்கு வழியனுப்பி வைத்தார். அல்மக்ரோ புறப்பட்ட பின்பு, பிஸாரோ, தம் நண்பர்களுடன் சான்ஜுவென் ஆற்றை அடுத்த இடங்களை ஆராயச் சென்றனர். அவர்களுடன் வந்த ரூயிஸ் என்பவர் தெற்கே சென்று கடற்கரை அமைப்பை ஆராயலானுர்.

## கவலையும் களிப்பும்

பிஸாரோவும் அவர்தம் குழுவினரும் நாளும் பல துன்ப நிலைகளைக் கடந்து குறிக்கோளை அடைவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்த வண்ணம் இருந்தனர். அக்குழுவினருள் பதினுன்குபேர் ஆற்றின் வழியே சென்று ஆராயலாயினர். குறித்த காலத்தில் அவர்கள் வரத் தவறியதால் பிஸாரோ கவலை கொண்டார்; அவர்களைத் தேடிச் சென்றுர்; குழுவினர் பயணம் செய்தகலம் ஓரிடத்தில் கவிழ்ந்து கிடப்பதைக் கண்டார்; நண்பர்களைப் பற்றி ஒரு செய்தியும் அறியமுடியவில்லையே என்று வருந்தினுர். வழிநெடுக அமைந்த இயற்கைக் காட்சிகள் அவருடைய உள்ளக் கவலையைச் சிறிது தணித்தன.

ரூயிஸ் தம்முடைய கப்பலில் திரும்பி வருவதைக் கண்டு பிஸாரோ மிகவும் களிப்படைந்தார். ரூயிஸ் கண்ட புதுமைகளை அறிய அவர் விரும்பினுர். ரூயிஸ் பின்வருமாறு கூறினுர்:

"கரையோரப் பக்கத்தில் பெரியதொரு கலம் கண்டேன். அதனை அப்பகுதி மக்களே செலுத்தி

வந்தனர். அவர்கள் சுமக்கமுடியாத அளவுக்குப் பொன் நகைகளை அணிந்திருந்தனர். எங்கிருந்து வருகிறீர்கள் என்று நான் கேட்ட கேள்விக்கு அவர்கள் தும்பெஸ் * என்னுமிடத்திலிருந்து வருவதாக கூறினர். அவர்கள் பண்புடைய மக்களாகத் தோற்ற மளித்தனர். நான் அவர் களுடன் நெருங்கிப் பழகலானேன்; பின்னர்த் தொடர்ந்து என் பயணத்தை மேற்கொண்டேன்; தென்பகுதி நோக்கியே சென்றேன்; உலக நடுக்கோட்டைத் தாண்டிச் சென்றேன்; பாசாடோ முனை § யைக் கண்டு மீண்டேன். எனவே, என்னை நான் உலக நடுக்கோட்டைக் கடந்த முதல்வன் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் ''.

## தொடர்ந்து செல்லல்

குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அல்மக்ரோவும் பனமாவிலிருந்து பலருடன் திரும்பி வந்தார். பயணம் தொடர்ந்து நடைபெற்றது. அவர் தெற்கு நோக்கிச் செல்லச் செல்லச் சோளக் கொல்லை களையும் உருளைப்பயிர்களையும் கண்டார். அவற்றை அப்பகுதிவாழ் மக்களுடைய பண்பாட்டை விளக்குவனவாகக் கொண்டார்; அவர்கள் அயல் நாட்டு மக்களைப் பகைக்கும் பண்பினராயின், அவர்களோடு பொருது வெல்லத் தம்மிடம் போதிய அளவு படையில்லையே என்று எண்ணிக் கலக்கம் கொண்டார்.

---

* Tumbez. § Cape Passado.

பிஸாரோவும் அவர்தம் குழுவினரும் சிற்றூர் ஒன்றில் தங்கினர். அல்மக்ரோவுடன் வந்த குதிரை வீரர்களில் சிலர் கரையோரமாக நின்றுகொண்டிருந்தனர். சிற்றூர் மக்கள் அவ்வழிச் சென்றனர்; குதிரைமீது வீரன் ஒருவன் இவர்ந்து வருவதைக் கண்டனர்; வியப்புக் கொண்டனர். குதிரை இரண்டு பகுதிகளாக இருக்கின்றது என்றும், குதிரைக்குக் கால்கள் ஆறு என்றும், அவற்றுள் இரண்டு முதுகில் உள்ளன என்றும் தம்முள் கூறிக் கொண்டனர். கால்கள் ஆறனுள் நான்கினுக்கு விரல்களே இல்லை என்று கூறி வியப்புற்றனர். அவ்வேளையில் குதிரை துள்ளியது. அதனால் வீரன் சிறிது தொலைவில் தூக்கி எறியப்பட்டான். குதிரை மீண்டும் பழைய நிலை பெற்றது. வீரனும் ஏறிக் கொண்டான். இதனைக்கண்ட அச்சிற்றூர் மக்கள், குதிரை தான் விரும்பினால் இரண்டாகப் பிரிந்து மீண்டும் இணைந்து நிற்க வல்லது போலும் என்று எண்ணினர். தாங்கள் கண்ட குதிரைக்குப் பேசவும் தெரிகின்றதே என்றும், பேசத் தெரிந்த அக்குதிரையுடன் மக்கள் அன்புடன் பழகுகின்றார்களே என்றும் கூறிக்கொண்டனர். அம்மக்களைக் கண்டதும், அவர்களிடமிருந்து தப்புவதற்குரிய காலம் அதுவே என்று எண்ணிப் பிஸாரோவும் அவர் குழுவினரும், கலத்தில் ஏறி விரைந்து சென்றனர்.

## கண்டிப்பும் ஊக்கமும்

இங்ஙனம் வழிநெடுக அமைந்த பலவகை இன்னல்களினால் பிஸாரோ குறித்தபடி எதனையும்

செய்யமுடியாமற் போயிற்று. மக்களுடைய தொல்லைகளிலிருந்து விடுபட்டு வாழ வேண்டும் என்று எண்ணிய அவர்கள் தனித்த பகுதி ஒன்றினை அடைந்தனர். அப்பொழுது அல்மக்ரோ தாம் பனமாவுக்குத் திரும்பிச் சென்று நிரம்ப உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்றார். ஆனால் பனமா நாட்டினை ஆள்வோர் அல்மக்ரோவின் வேண்டுகோளைக் கேட்டதும் கோபம் கொண்டனர். உடனே கலமொன்றில் விரைந்து சென்று பிஸாரோவையும் அவர்தம் குழுவினரையும் அழைத்து வருமாறு ஏவினர். அரசாங்க அலுவலர் ஒருவர் உடனே புறப்பட்டார்.

பிஸாரோ ஆளுவோரின் கண்டிப்பைக் கேட்டு வருந்தினார்; ஆயினும் அதனைத் தாம் வெற்றி காணுதற்குரிய ஊக்கவுரையாகக் கொண்டார். கொண்ட கொள்கையில் வெற்றி காணுவதுதான் ஆண்மை என்பது அவர் கருத்து. அவர் தம் குழுவினருள் உண்மையான ஆர்வம் உடையோரை மட்டும் கொண்டு தம் பயணத்தைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்தார்; தம்மோடு வர விரும்புவோர் வரலாமென்றும், எஞ்சியோர் ஆட்சியாளரின் அலுவலருடன் செல்லலாம் என்றும் கூறினார்; நிறைந்த செல்வம் பெறவும், நல்வாழ்வு வாழவும், புதிய நாட்டைக் கண்டாக வேண்டும் என்பதையும் தெளிவுறக் கூறினார். பதின்மூன்று ஸ்பானியர்கள் பிஸாரோவுடன் வருவதாக ஒப்பினர். எஞ்சியோர் பனமா சென்றனர். அவருள் ரூயிஸும், அல்மக்ரோவும் இருந்தனர்.

## முயற்சியில் வெற்றி

பனாமா நாட்டு அரசாங்க அலுவலர் தங்கட்கு உணவுப் பொருட்களைத் தராததுடன் தங்கட்கு இருந்த இரண்டு கப்பல்களையும் கொண்டு சென்றமை குறித்துப் பிஸாரோ பெரிதும் வருந்தினார். முயற்சியில் வெற்றிகாணப் பொறுமையும், முயற்சியும் தேவை என்பதைப் பனாமா அரசினர் உணரத் தவறிவிட்டது பிஸாரோவின் மனத்தைக் கலக்கிவிட்டது. ஆயினும் அவர் அதுபற்றியே தொடர்ந்து எண்ணிக் கலங்கவில்லை; சிறு மிதவை ஒன்றைப் பெரிதும் முயன்று அமைத்தார்; அதில் அவரும் அவர் குழுவினரும் ஏறி உணவு கிடைக்கும் இடத்தை அடையப் புறப்பட்டனர்; அவ்விடத்திலேயே அல்மக்ரோவும் ரூயுஸும் திரும்பும் வரையில் தங்குவது எனத் தீர்மானித்தனர். அவர்கள் கார்கோனா என்னும் தீவை அடைந்து தங்கினர். அங்கு அவர்கட்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிடைத்தன. எனவே, அவர்கள் அங்கு ஆறு திங்கள் கழித்தனர்.

அல்மக்ரோவும் ரூயிஸும் சில துணைவர்களும் ஏழாவது திங்களின் தொடக்கத்தில் கார்கோனாவை அடைந்தனர். பிஸாரோ அவர்களை மகிழ்வுடன் வரவேற்றார். "ஆளுநரிடம் காரணமெல்லாம் விளக்கிச் சொன்னோம்; நாடு கண்டால் கிடைக்கவிருக்கும் சிறப்புப் பற்றிக் கூறினோம்; அவர்கள் மனத்தை மாற்றி இசைவும் ஆதரவும் பெற்று வர இத்துணை நாட்களாயின", என்று அல்மக்ரோ கூறினார். பிஸாரோ, வெற்றியை நோக்கிச்

செல்லும் தமது பயணம் தடைப்பட்டு விடவில்லை என்பதை எண்ணி மகிழ்ந்தார். எல்லோரும் 'பெரு' என்னும் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

அவர்கள் இடையில் எங்கும் தங்காமல் தொடர்ந்து பயணம் செய்தனர்; தும்பெஸ் என்னும் பகுதியில் உணவுப் பொருள்களைச் சேகரித்துக் கொள்ளத் தங்கினர்; பின்னர் அதனையடுத்த தீவு ஒன்றிற்குச் சென்றனர். அங்கிருந்த மக்கள் அவர் கட்கு வேண்டும் உதவிகளைச் செய்தனர். அயலவரை அன்புடன் போற்றும் அவர்களுடைய பண்புள்ளம் கண்டு பிஸாரோ மகிழ்ந்தார்; தம் மிடத்திற்கு அவர்களை வரவழைத்தார்; இனிய முகத்துடன் இன்சொல் பேசி அவர்களை மகிழ் வித்தார்; அவர்கள் தந்த கனிவகைகளையும், மாவகைகளையும் அன்புடன் ஏற்று உண்டார்; அம்மக்களின் வாழ்க்கை பற்றி அறிய அவாக் கொண்டார்; அப்பகுதிகளிலெல்லாம் வாழை, அன்னாசி, உருளை, மக்காச்சோளம் முதலிய எல்லாம் பயிராவதைக் கண்டார்; மக்கள் பயிர்த் தொழிலில் மிகுந்த கவலை செலுத்துவதை அறிந்தார். அவர்கள் ஆடுகளின் உரோமத்தால் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தனர்; நூல் நூற்கவும் ஆடைகள் நெய்யவும் அறிந்திருந்தனர். அவர் களுடைய வீடுகள் பெரியனவாயும், எழில் உடையனவாயும் இருந்தன. சுருங்கக்கூறின், கள்ளமில்லா உள்ளமுடைய அம்மக்கள் இயற்கை யோடியைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தனர் என்ன லாம். அவர்கள் தங்களைக் கதிரவன்வழித் தோன்றல்கள் எனக் கூறிக்கொண்டனர்.

தாங்கள் பல காலமாகக் காணுதல் வேண்டும் என்று எண்ணிய 'பெரு நாடு' அல்லது 'பொன் விளையும் நாடு' அதுதான் என்பதைப் பிஸாரோ கண்டுகொண்டார்; அவர்களை வென்று அவர்கள் பொருளைக் கவர்ந்து செல்லவேண்டும் என்று எண்ணினார்; ஆனால், அதற்கேற்பத் தம்மிடம் படைபலம் இல்லையே எனக் கவன்றார்; பெருநாட்டு மக்களிடம் பிரியாவிடை பெற்றுத் தம்குழுவினருடன் பனுமா மீண்டார்.

பிஸாரோ பனுமா அரசினரிடம் தாம் பெரு நாட்டைக் கண்ட வரலாற்றையும், மக்கள் வாழ்வையும், செல்வப் பெருக்கையும் விளக்கிக் கூறினார். ஆட்கள் பலரைத் துணையாக அனுப்பினால், கள்ளமில்லா அம் மக்களை எளிதில் வென்று பொன் பெறலாம் என்றும் கூறினார். அவருடைய கூற்றை ஏற்று, படை வீரர்கள் துணையாக அனுப்பப்பட்டனர். பெருநாட்டு மக்கள் அடிமையாக்கப்பட்டனர்.

அந்நாட்டின் செல்வம் ஸ்பெயினுக்கு உரியதாயிற்று. பிஸாரோ புதியநாடு காணவேண்டும் என்று விரும்பினார்; முயன்றார்; பல இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றார்; முயற்சியைக்கைவிடாமல் முயன்றார்; இறுதியில் வெற்றி பெற்றார்; உலக வரலாற்றில் அழியா இடம் பெற்றார்.

# 5. புறநானூறு

## சங்க இலக்கியங்கள்

பண்டைத் தமிழகம் வேங்கட மலையை வடக்கிலும் கன்னியாகுமரியைத் தெற்கிலும் வங்கக் கடலைக் கிழக்கிலும் அரபிக்கடலை மேற்கிலும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. அதனை ஏறத்தாழ ஆயிரத்தெழுநூறு ஆண்டு கட்கு முன்னர்ச் சேர, சோழ, பாண்டிய மரபினர் ஆண்டு வந்தனர். பாண்டியர்கள் தமது தலை நகரமான மதுரையில் தமிழ்சங்கம் ஒன்றை நடத்தி வந்தனர். அச்சங்கத்தில் தமிழகத்துப் பெரும் புலவர் பலர் இருந்தனர். அப்புலவர்கள் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் தொகுக்கப் பட்டன. அவையே எட்டுத்தொகை, பத்துப் பாட்டு என்பன.

நற்றிணை. குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்க ளாகும். இந்நூல்களில் உள்ள பாடல்களைப் பாடியவர் பல்வேறு காலத்தவர்; பல நாட்டினர்; பல இனத்தவர். அவருள் ஆடவரும் உளர்; பெண்டிரும் உளர். இந்நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியன. அவை அறம், பொருள், வீடு பற்றிப் பேசுகின்றன. பரிபாடல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பற்றியும் பேசுகின்றது. எஞ்சிய

நூல்கள் இன்பம் ஒன்றையே கூறுகின்றன. அவை 'அகப்பொருள் நூல்கள்' எனப் பெயர் பெறும்.

## புறநானூறு

புறநானூறு என்னும் பெயருடைய இந்நூல், புறப்பொருள் பற்றிய நானூறு பாக்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் முடியுடை மூவேந்தர், சிற்றரசர், அமைச்சர், படைத் தலைவர், வீரர், வள்ளல்கள், ஆண்பாற் புலவர், பெண்பாற் புலவர் முதலியோர் வரலாறுகளை ஓரளவு அறியத் துணை செய்கின்றன. ஆகவே, இந்நூலினை 'வரலாற்று நூல்' என்றும் கூறலாம். இந்நூலின் காலம் கி. மு. 1000 — கி. பி. 300 என்பர் அறிஞர். இப் பாடல்களால் அக்கால மக்களுடைய பழக்க வழக்கங்கள், எண்ணங்கள் நாகரிகக் கருத்துக்கள், சமய வாழ்க்கை, கலைவளர்ச்சி முதலியவற்றை நன்கறியலாம். இங்கு, இந்நூலின் சிறப்பை வலியுறுத்த இந்நூற்பாக்கள் தரும் சில காட்சிகளைக் காணுவோம்:

## பாரி மகளிர்

*பாரி* சங்க கால வள்ளல்களுள் சிறந்தவன். அவன் பாண்டிய நாட்டின் வட பகுதியில் உள்ள பறம்பு மலையைத் தன்னகத்தே கொண்ட முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்பு நாட்டுத் தலைவன். பறம்பு மலை இன்று ''பிரான்மலை' என்று வழங்கப் படுகின்றது. முல்லைக்கொடி காற்றால் அசைவதைக் கண்டு மனம் பொறாத பாரி, தன்னுடைய தேரை அது படர்தற் கேற்றவாறு வைத்து மீண்டான். கபிலர் என்னும் தமிழ்ப்புலவர் பாரியின் உயிர்த் துணைவராய் விளங்கினார்.

முடியுடை மூவேந்தர் பாரியினிடம் பகைமை கொண்டனர்; அவன் மலையரணை முற்றுகை யிட்டனர். பறம்புமலைக் கோட்டையுள் பாரி, அவன் மகளிர், கபிலர், போர்வீரர் ஆகியோர் இருந்து போர் புரிந்தனர். போரில் மூவேந்தரால் மலையைக் கைக்கொள்ள இயலவில்லை. அதனால் அவர்கள் இரப்பவரைப் போல வேடம் புனைந்து பாரியை அடைந்து,அவனை வஞ்சனையாற்கொன்று மலையைக் கைக்கொண்டனர் என்பர்.

கபிலர் மனம் வருந்தினர்; பாரியுடன் இறக்கத் துணிந்தார்; ஆயின். துணையற்ற பாரி மகளிரைக் காப்பது தம் கடமை என்பதை எண்ணியவுடன், அவர்களைத் தக்கார்க்கு மணமுடித்த பின்னரே இறப்பது எனத் துணிந்தார். பின்னர் அவர் அம் மகளிர் இருவரையும் அழைத்துக்கொண்டு வழி நடக்கலானர்.

கபிலரும் பாரி மகளிரும் வழிநடந்துசென்றனர். அவர்கள் பல ஊர்களைக் கடந்தனர். ஒரு நாள் ஓர் ஊரில் தங்கினர். அன்று முழுநிலவு. முழு நிலவின் தண்கதிர் இரவினை அழகு செய்தது; பாரி மகளிர்க்குப் பண்டை நினைவை ஊட்டியது. அவர்கள் உள்ளம் வருந்தியது. கண்கள் நீரை ஆருய்ப் பெருக்கின.

“சென்ற முழுநிலவில் நாங்கள் எங்கள் தந்தை யுடன் இருந்தோம்; எங்கள் பறம்பு மலையும் எங்கட்கு உரியதாக இருந்தது. இந்த முழுநிலவில் முடியுடை மூவேந்தர் எம் குன்றைக் கொண்டனர்;

நாங்கள் எங்கள் தந்தை இல்லாமல் துன்புறுகின்றோம்,'' என்று வாய்விட்டு அரற்றினர். பாரி மகளிர் நன்கு கற்றவர். எனவே, அம்மகளிர் அரற்றல் ஒரு பாட்டாக உருக்கொண்டது.*

**வீரத்தாய்மார்**

வீர உள்ளம் கொண்ட ஆண்களையும் பெண்களையும் கொண்ட குடும்பம் '*மறக்குடி*' என்னும் பெயரால் வழங்கப்பட்டது. அம்மரபினர் தமிழ் நாட்டில் 'மறவர்' எனப்பட்டனர். மறவர் மாண்பை அறியச் சங்க காலத்து மறவர் குடும்பங்களுள் ஒன்று பற்றிய விவரத்தை இங்குக் காண்போம்:

மறக்குடி ஒன்றில் மறமகள் ஒருத்தி இருந்தாள். தந்தை தக்க வீரன் ஒருவனுக்கு அவளை மணம் செய்வித்தான். அவர்கட்கு ஆண்மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தை மறக்குடி இயல்புக்கேற்ப வளர்ந்தது. சிறுவன் பன்னிரண்டு வயதை அடைந்தான்.

நாட்டில் போர் ஏற்பட்டது. மாற்றுனது படையெடுப்பால் நாடு துன்புற்றது. மறவர் களம் நோக்கி அணியணியாகச் சென்றனர். அவர்களுள் சிறுவனது பாட்டன் ஒருவன். அம்முதியவன் மகிழ்ச்சியோடு போர்க்களம் புகுந்தான்; இயன்ற அளவு வீரமுடன் போர் புரிந்தான்; இறுதியில் புண்பட்டு இறந்தான்.

---

* ''*அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்*
*எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர்கொள்ளார்;*
*இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்*
*வென்றெறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே''*

மீண்டும் ஒருமுறை போர் தொடங்கியது. அப்போரில் மறத்தியின் கணவன் பங்கு கொண்டான். அவன் இளைஞன்; சிறந்த வீரன். அச்சம் என்பதை அறியாத அவன் வீர வுணர்வோடு போர் புரிந்தான்; இறுதியில் புண் பட்டுப் புகழ் நிறுத்தி மாண்டான்.

மறுநாள் போர்ப்பறை கேட்டது. மறக்குடி மகள் செருப்பறை கேட்டு மகிழ்ந்தாள். முதற் போரில் தந்தையையும், அடுத்த போரில் கணவனை யும் இழந்து மகிழ்ந்த அவள், தன் ஒரே மகனை அழைத்தாள்; பரந்து கிடந்த அவன் தலைமயிரை எண்ணெய் இட்டுச் சீவி முடித்தாள்; வெள்ளை ஆடையை அவனது இடையில் உடுத்தினாள்; வேலைக் கையில் கொடுத்தாள்; தனக்கு அவன் ஒரே மகன் என்பதையும் எண்ணிப் பாராமல், மலர் முகத்துடன், 'போர்க்குச் செல்க' என்று கூறி விடுத்தாள்.

ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவர் இம்மறக்குடி மகளது வீரத்தை வியந்து பாடிய பாடல் புறநானூற்றில் அமைந்துள்ளது.*

*"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் வுற்ற செருவிற் (கு)இவள் தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் வுற்ற செருவிற்(கு) இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமகன் அல்ல தில்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே".

*காவற்பெண்டு* என்னும் பெண்பாற் புலவர் மறக்குடியிற் பிறந்து வளர்ந்தவர். இவருக்கு மறம் மிக்க மகனொருவன் இருந்தான். ஒருநாள் அவனைத் தேடிவந்த ஒருவன், காவற்பெண்டை நோக்கி, "நின் மகன் எங்குள்ளான்?" என்று கேட்டான். அதற்கு அவ்வம்மையார், "அவன் போர்க்களத்தில் விளங்கித் தோன்றுவான். அவனுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு, புலிக்கும் அதன் குகைக்கும் உள்ள தொடர்பு போலாகும். அவனை ஈன்ற வயிறு இது", என்று கூறி மகிழ்ந்தார். அவருடைய மகிழ்ச்சி அவர் பாடிய பாடலால் புலனாகும்.*

மற்றொரு வீரத்தாயின் செயலினைக் காண்போம்:

நரம்புகள் எழுந்து தசையுலர்ந்த உடம்பினை யுடைய முதுமகள் ஒருத்தி, தன் மகன் போர்க்களத்தில் முதுகிற் புண்பட்டுத் தோன்றான் என்று சிலர் தவறாகக் கூறியதனைக் கேட்டு வருந்தினாள். "என் மகன் முதுகில் காயம் பட்டிருக்குமாயின், அவனுக்குப் பாலூட்டி வளர்த்த என் மார்பினை அறுத்திடுவேன்" எனச் சினங்கொண்டு கூறினாள்; போர்க்களம் சென்றாள்; அங்குப் பிணக்குவியலிடையே தன் மகன் உடம்பைத் தேடினாள்; மார்பில் புண்பட்டுச் சிதைந்த மகன் உடம்பைக்

---

*"*சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்*
*யாண்டுள னோவென வினவுதி யென்மகன்*
*யாண்டுள னாயினு மறியே னோரும்*
*புலிசேர்ந்து போகிய கல்லளை போல*
*ஈன்ற வயிறோ இதுவே*
*தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே".*

கண்டாள்; அவனுடைய வீரத்தை எண்ணி மகிழ்ந்தாள்; அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் பெருமகிழ்ச்சி அடைந்தாள். காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் இம்மறக்குடி மகளது செயலினைப் புகழ்ந்து பாராட்டினர்.

## மன்னர் வஞ்சினம்

நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் சங்ககாலத்தைச் சேர்ந்தவன். இவன் இளைஞனாக இருந்தபொழுதே அரசப் பொறுப்பை ஏற்றான்; போர்த் துறைகளில் நல்ல பயிற்சி பெற்று வல்லவனாக விளங்கினான்; மாங்குடி மருதனார் போன்ற சான்றோரிடம் தமிழ் கற்றான்; கவிபாடும் ஆற்றல் பெற்றான்; மாங்குடி மருதனாரைத் தன் அவைப் புலவராகக் கொண்டான்.

நெடுஞ்செழியன் புலமையிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியதைக் கண்ட பிற மன்னர்களும், குறுநில மன்னர்களும், வள்ளல்களும் பொறாமை கொண்டனர். பாண்டிய நாட்டின்மீது படையெடுக்க எண்ணினர். சேர, சோழர்க்குத்

*"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டமர்க்(கு)உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே".

துணையாகத் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற ஐம்பெரு வேளிரும் படைதிரட்டினர்.

இரு பெருமன்னரும், ஐம்பெரு வெளிரும் பெருஞ்சேனையுடன் வருதலை ஒற்றர் வாயிலாகக் கேட்ட பாண்டியன் சீற்றம் கொண்டான்; சினச் சிரிப்புச் சிரித்தான். சிரித்து.

"பாண்டியன் நெடுஞ்செழியன் ஆள்கின்ற நட்டைச் சிறப்பித்துச் சொல்பவர் நம்மால் நகைக்கத் தக்கவர் ஆவர். இவன் அரசியல் அறிவு பெருத இளைஞன். நாம் அரசியல் முதிர்ச்சி உடையோம்; சிறப்புடைய நால்வகைப் படைகளைக் கொண்டுள்ளோம், என்று என்னை எள்ளியும், தம்மைச் சிறப்பித்தும் பேசிக்கொண்ட பகை மன்னரைப் பொருதற்கரிய போரில் சிதற அடிப்பேன்; அவர்தம் முரசத்தோடு அவரைச் சிறைப்படுத்துவேன்; அவ்வாறு நான் செய்ய வில்லையென்ருல், 'எம் மன்னவன் கொடியன்' என்று குறை கூறத்தக்க காடுங்கோல் கொற்றவ ஞக யான் ஆகக் கடவேன். ஆன்ற கல்வியும், அமைந்த புலமையும் உடைய மாங்குடி மருதனர் போன்ற சான்ருேர் எனது நாட்டைப் பாடா தொழிவாராக! யான் பிறர்க்குக் கொடுத்து மகிழ முடியாத வறுமையை அடைவேனக!"

என்று வஞ்சினம் கூறினன். இதனைப் புறநானூற்றின் எழுபத்திரண்டாவது பாடலில் தெளிவுறக் காணலாம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோல் மன்னன்; குடிகள் நலத்தையே மனத்திற்கொண்டு நாடாண்டவன்; மாங்குடி மருதனார் போன்ற புலவர் பெருமக்கள்பால் நீங்காப் பற்றுடையவன்; 'இல்லை' என்று இரப்போர்க்கு 'இல்லை' என்று கூறாமல் கொடுப்பவன். நாம் இவ்வுண்மைகளை அவனுடைய வஞ்சின மொழியால் அறியலாம்.

*சோழன் நலங்கிள்ளி* என்பவன் சோழ மன்னர்களுள் சிறந்தவன். நலங்கிள்ளிக்கும் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்பவனுக்கும் பகைமை உண்டாயிற்று. நெடுங்கிள்ளி நலங்கிள்ளியை இகழ்ந்து கூறினான். நலங்கிள்ளி சினந்தான்; நெடுங்கிள்ளி இகழ்வதற்கும் போர்க்குக் கிளம்புவதற்கும் காரணம் யாதாகும் என ஆராயலானான்; அரசினைக் கவர்வதே அவன் கருத்தாகலாம் என எண்ணினான் அதனால் சினந்த அவன்,

"அரசுக் கட்டிலைக் கவர்வது இந்நெடுங்கிள்ளிக்குக் கருத்தாயின், என் நல்லடி பொருந்தி ஈயென இரந்தால், அரசினையேயன்றி என் உயிரையும் தருவேன். அவ்வாறின்றி உறங்கும் புலியை இடறிய குருடன் போலப் போர் தொடுத்து மடிகின்றான்; இனி, இவன் உய்ந்துபோதல் அரிது. இவனை இப்போரில் வருந்தப் பொரேனாயின், என் மார்பின்மாலை பொதுமகளிின் மார்பில் புரள்வதாக", என்றும் கூறினான். சோழன் நலங்கிள்ளி கூறிய வஞ்சினம் பா வடிவில் இடம் பெற்றுள்ளது. புறநானூற்றின் எழுபத்துமூன்றும் பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.

## பூதப்பாண்டியன் தேவியார்

பாண்டிய மன்னருள் பூதப்பாண்டியன் என்பவன் சிறந்தவன். இவன் ஒழுக்கமும் நிறைந்த புலமையும் உடையவன்; கவிபாடும் ஆற்றல் பெற்றவன். இவன் மனைவியாரும் இவனைப் போன்றவரே என்னலாம். பூதப்பாண்டியனை எதிர்த்துப் பகை மன்னர்கள் போரிட்டனர். போரில் பூதப்பாண்டியன் இறந்தான். பாண்டிமா தேவி, தன் துணைவன் இறந்த பின்பு உயிர் வாழ விரும்பாமல், எரிமூழ்கி இறக்கத் துணிந்தார். அதனை அறிந்த அமைச்சரும் புலவரும் தடுத்தனர். அப்போது அவர் வருத்தத்துடன் பின் வருமாறு கூறினார்.

"அறிவிற் சிறந்த பெருமக்களே, 'நின் தலைவனுடன் நீ இறத்தலே தக்கது' என்று கூறாமல், 'நீ இறத்தலைத் தவிர்க' என்று சொல்லி என்னை விலக்கும் தகாத கருத்துடைய பெரியோர்களே, வெள்ளரிக்காய் விதை போன்ற நல்ல வெண்மையான மணமுள்ள நெய் இல்லாமல், இலை இடையே பயின்ற கையால் பிழிந்து கொள்ளப்பட்ட நீர்ச் சோறு, எள் துவையல், புளியைக் கூட்டிச் சமைக்கப்பட்ட வேளைக்கீரை ஆகிய இவற்றை உணவாகக் கொண்டு பருக்கைகளாற் பரப்பப்பட்ட படுக்கையில் பாயின்றிக் கிடந்து, கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிர் வாழ்க்கை யான் வாழ வல்லேன் அல்லேன். சுடுகாட்டில் உண்டாக்கப்பட்ட பிணப்படுக்கை உங்கட்குக் கடினமானதாகும். காதலனை இழந்த எனக்கு

அது மலர்ந்த தாமரை மலர்களைக் கொண்ட குளிர்ந்த பொய்கை போன்றது'', என்று கூறித் தீப்பாய்ந்து இறந்தார்.

ஔவையார் - அரசியல் தூதர்

சேலம் மாவட்டத்துத் தகடூரைத் தலை நகராகக்கொண்டு அதனைச் சூழ்ந்த நாட்டை ஆண்ட கொங்கு நாட்டு மன்னருள் **அதியமான் நெடுமான் அஞ்சி** என்பவன் ஒருவனாவான். ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் அதியமானுடைய அரசவையில் தங்கி அவனைச் சிறப்பித்தார். அதியமான், நீண்டநாள் உயிர் வாழச்செய்யும் நெல்லிக்கனி ஒன்றைத் தான் உண்ணாமல் ஔவையார்க்கு அளித்தான். இதனால் ஔவையாரிடம் அதியமான் கொண்டிருந்த பேரன்பை நாம் அறியலாம்.

அதியமான் தகடூரை ஆண்ட காலத்தில், காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டைத் தொண்டைமான் என்பவன் ஆண்டு வந்தான். இவன் அதியமானைத் தாக்கத் தக்க வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தான். அதியமான் போரினை விரும்பவில்லை. ஔவையார் தொண்டைமானிடம் **தூது** சென்று போர் நடைபெறா வண்ணம் செய்யத் துணிந்தார்.

ஔவையார் தன் அரண்மனை நோக்கி வருவதைக் கண்ட தொண்டைமான் மகிழ்ந்தான்; அவரை அன்புடன் வரவேற்றுத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினான். ஔவையார் அங்கிருந்த படைகளை நோக்கினார்; பின்னர் அவனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

"இப்படைக்கலக் கொட்டிலில் உள்ள படைக் கருவிகள் எல்லாம் புதியனவாகச் செய்யப் பட்டவை; இவை புதியவை என்பதற்கு அடையாள மாக மாலை சூட்டப்பட்டு இருக்கின்றன; மிக்க காவலையுடைய அகன்ற கோவிலில் வைக்கப்பட் டுள்ளன. இந்நிலையில் இவற்றைக் காண்பது மகிழ்ச்சியைத் தருகின்றது".

"அதியமானுடைய படைக் கருவிகள் போரில் பகைவரைக் குத்தினமையால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லனது சிறிய உலைக்கூடத்திலேயே எப்பொழுதும் விழுந்து கிடக்கின்றன", என்று கூறினார்.

ஔவையாரின் இக்கூற்றில், தொண்டை மானைப் புகழ்ந்தது போலப் பழித்தமையும், அதியமானைப் பழித்தது போலப் புகழ்ந்தமையும் அடங்கியிருத்தலைக் காணலாம். "அதியமான் ஓயாமல் போர் செய்பவன். அதனால்தான் அவனது படைக் கருவிகள் எப்பொழுதும் கொல்லனது உலைக்களத்திலேயே கிடக்கின்றன. நீயோ போரே அறியாதவன். அதனால்தான் நின் போர்க் கருவிகள் செய்யப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் துணையாகக் கொண்டு, போர்ப் பயிற்சி பெறாத நீ, போரில் வல்ல அதியமானைத் தாக்க எண்ணுவது நகைப்பினைத் தருகின்றது", என்று தொண்டைமானிடம் ஔவையார் வெளிப்படை யாகக் கூறாமல், திறமையாக மேற்சொன்னவாறு கூறினார். குறிப்பாகச் செய்தியைக் கூறி மன்னரை

எச்சரித்தலே அரசியல் தூதர் கையாளத் தகுவது என்பது அரசியல் அறிஞர் அறிந்த ஒன்றாகும்.

இக்காட்சியால், ஔவையார் அரசர் மதிக்கத்தக்க - மன்னர்க்கு அறிவுரை கூறத்தக்க - நிலையில் அறிவும் ஒழுக்கமும் பெற்றிருந்தவர் என்பதை நன்கறியலாம். பெண் அறிஞரைத் தூது விடுதல் என்பது இன்றைய நாகரிக உலகிலும் அருமை உடையதாகவே உள்ளது. ஆயினும், ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை நோக்க, அக்காலக் கல்வி முறையையும், பெண் கல்வியையும், கல்வி கற்ற மகளிர் சமுதாயத்தில் பெற்றிருந்த பெருஞ் சிறப்பையும் நாம் அறிய முடிகின்றதன்றோ?

## முடிவுரை

இத்தகைய அரிய பல காட்சிகளைக் கொண்டதே புறநானூறு. அது நம் முன்னோர்களுடைய வீரம், நாட்டுப்பற்று, கல்வி, ஒழுக்கம், கற்பு, அறச் செயல்கள், வாணிகம், அரசியலறிவு முதலிய பலதிறப்பட்ட செய்திகளை நமக்கு அறிவிக்கும் ஆற்றலுடையது. தமிழ் மாணவர்களாகிய நீங்கள் அப்பேரிலக்கியத்தைக் கற்று நம் முன்னவர்களின் பெருமைகொண்ட வாழ்வினை அறிந்து பயன் பெறுதல் வேண்டும்.

# 6. மோட்டார் மன்னர் - ஹென்றி போர்டு

## விழைவும் விளைவும்

"மனிதன் ஆய்ந்தறியும் பண்பு கொண்ட விலங்காவான்" என்று கிரேக்க நாட்டுப் பெரியாரான அரிஸ்டாட்டில் கூறினர். மானும் சிங்கமும், யானையும் திமிங்கிலமும், மயிலும் குயிலும் இவைபோன்ற பிற உயிரினங்களும் ஆய்ந்தறியும் பண்பு கொண்டன அல்ல. அப் பண்பு ஒன்றுதான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்துகின்றது. அதனல், மனிதன் இயற்கையின் படைப்புப் பொருள்கள் பலவற்றுள் காணுதனவற்றைக் கண்டறியும் ஆவல் கொண்டான். அவனுடைய அந்த விழைவின் விளைவாகவே விஞ்ஞானம், கணிதம், தத்துவம், வரலாறு போன்ற பல கலைகள் தோன்றின.

தான் காண விரும்பும், பலவற்றைக் கண்டறிய ஒருவர்க்குத் துணைபுரிவன 'ஏன்?' 'எப்படி?' என்ற வினக்களேயாகும். இந்த இரு வினக்களைப் பயன் படுத்தித்தான் எகிப்திய நாட்டு நல்லறிஞர்கள் புதியன காணுவதில் கருத்தைச் செலுத்தினர். அவர்கள் பொருள்களைக் கண்டு ஆராய்ச்சி செய்ய முற்படும் எண்ணத்தை ஆராய்வதிலும் அறிவி னுடைய இயக்கத்திற்கு அடிப்படையான பொருள்களைப்பற்றி ஆராய்வதிலுமே பெருங்கவலை செலுத்தினர்.

கி. மு. 624- ஆம் ஆண்டில் தேல்ஸ் என்னும் அறிஞர், நடுத்தரைக் கடலையடுத்த ஐயோனியன் தீவுகளில் பிறந்தார். அவர் மின்சாரத் தொடர்பாகவும், காந்தத் தொடர்பாகவும் ஆராய்ச்சிகள் பலவற்றை முதன் முதலாக நிகழ்த்தினர். பிதாகோரஸ், சாக்ரடீஸ், பிளேடோ ஆகியோரும் புதியன காணுவதில் கருத்தைச் செலுத்தினர். அரிஸ்டாட்டில் என்பவர் பிளேட்டோவின் மாணவராவர். இவர், தாம் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளையும், தம் முன்னவர் கண்டனவாகக் கூறப்பட்ட ஆராய்ச்சிகளையும் எழுத்துருப்பெறச் செய்தார். முதன்முதலாக எழுத்து வடிவில் புதுப்புதுக் கருத்துக்களை இடம் பெறச்செய்த அரிஸ்டாட்டிலை மக்கள் 'விஞ்ஞானத்தின் தந்தை' என்று கூறிப் போற்றி மகிழ்ந்தனர்.

## வாழ்க்கையின் அடிப்படை

(நிலையற்ற உலகத்தில் நிலைபேறுடைய வாழ்க்கையை விரும்புவோர் நல்ல பல செயல்களைச் செய்து தம்முடைய புகழை நிலைநாட்டுவர். அவர்கள் அந்நிலையினைப் பெற வேண்டுமாயின், பல நற்பண்புகளை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். வாழ்க்கையின். அடிப்படையாகப் பலபண்புகள் இயற்கையாகவே அமைந்திருந்தால்தான் ஒருவன் காலத்தால் அழிவுறாத நல்வாழ்வைப் பெற முடியும்.)

உலக விஞ்ஞானிகள் பலருடைய வாழ்க்கையை, எளிமை யுணர்வும், பொறுமைப் பண்பும்,

உழைப்பு உள்ளமும், இடைவிடா முயற்சியும் ஆகிய பண்புகள் அமைந்தன என்னலாம். ***சர் ஐசக் நியூட்டன்*** என்னும் விஞ்ஞானி தாம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்திய ஆராய்ச்சி உண்மைகளையெல்லாம் ஒருமுறை திரும்பப் படித்தவாறே சோர்வு கொண்டார்; எனவே, மேசைமீதிருந்த மெழுகு வர்த்தியை அணைக்காமல் உறக்கம் கொண்டார். மறுநாள் காலையில் எழுந்து அவர் கண்டபோது மெழுகு வர்த்தி அணைந்து கிடப்பதையும், பல துண்டு களாக முயன்று கண்ட ஆராய்ச்சி உண்மைகள் அத்துணையும் சாம்பலாகிக் கிடப்பதையும், மேசை யின் அருகில் 'டைமண்ட்' என்னும் பெயருடைய அவருடைய நாய் வீற்றிருப்பதையும் கண்டார். அவர் உள்ளம் அந்தக் காட்சியைக் கண்டு வருந்தியது. தம்முடைய நாயால்தான் அத்தகைய பேரிழப்பு ஏற்பட்டது என்பதை அவர் அறிந்து கொண்டார். ஆயினும் சினம் கொண்டு எதுவும் செய்துவிடாமல், நாயின் அருகில் சென்று, அதனை மெதுவாகத் தட்டிக் கொடுத்தார். நியூட்டனின் பொறுமை கொண்ட நெஞ்சினை விளக்க இச்சான்று போதும் அல்லவா?

தாம் மேற்கொண்ட முயற்சிகளில் பலமுறை தோல்வி ஏற்பட்டாலும் அதுபற்றிக் கவலையுறாமல் சோர்வு கொள்ளாமல் தொடர்ந்து முயன்று வெற்றியைக் காண வேண்டுமென்று முயன்ற விஞ்ஞானிகளுடைய வாழ்க்கை வரலாறு மாண வர்க்கும் பல நல்லறிவுகளைக் கொடுப்பனவாகும்.

## ஹென்றி போர்டின் இளமைப் பருவம்

உலகச் செல்வருள் ஒருவராகவும், அமெரிக்க நாடு தந்த தொழில் மன்னராகவும், உழைப்பால் உயர்ந்த பெரியாராகவும் விளங்கிய ஹென்றி போர்டின் இளமைப் பருவ நிலையினை இனிக் காண்போம்:

ஹென்றிபோர்டு அமெரிக்காவில் உள்ள 'டியர்பார்ன்' என்னும் இடத்தில் கி. பி. 1863-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 30-ஆம் நாளில் பிறந்தார்; இளமையில், தம் தாயாரையே ஆசிரியராகக் கொண்டு கற்றார்; பின்னர்ப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். ஆனால், கல்வியில் அவர் உள்ளம் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை. தெருவில் ஆங்காங்கே கிடக்கும் இரும்புத் துண்டுகளையும், துணிகளையும், பயன்படாது என்று பிறரால் வீசி யெறியப்பட்ட இயந்திரப் பகுதிகளையும் பொறுக்கி எடுத்துச் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவருடைய தந்தையார் பண்ணை ஒன்றை நடத்தி வந்தார். அப்பண்ணை வேலை செம்மையாக நடைபெருததைக் கண்ட போர்டு இயந்திர சக்தியால் பண்ணையைச் சீர்படுத்த எண்ணினர். ஆயின், வயதில் இளையவரான அவரது எண்ணம், எண்ணியவுடன் முடிவு பெறுவதாக இல்லை. தெருக்களில் சிதறிக்கிடந்த பல பொருள்களைப் பொறுக்கி எடுத்துச் சேர்த்துவைத்த ஹென்றி, அவற்றையெல்லாம் இணைத்துப் பல புதிய கருவிகளைச் செய்து முடிப்பதில் ஊக்கம் காட்டி வெற்றி கண்டார். அதனல் பெற்றவருடைய ஆசி அவருக்குக் கிடைத்தது.

குதிரையும் மாடும் இல்லாமல் தானே இயங்கிச் செல்லும் மின் ஆற்றல் கொண்ட இயந்திரம் ஒன்றைப் போர்டு ஒருநாள் கண்டார். அதில் குதிரையும் மாடும் இல்லாது இருத்தலைக் கண்டு வியந்தார்; அதனை ஓட்டியவரிடம் சென்று எண்ணற்ற வினாக்களை விடுத்தார். ஆராய்ச்சி மனம் கொண்ட அவருடைய வினாக் களுக்கு விடையளிக்க அந்த எஞ்சின் ஓட்டி விரும்பிப் பல செய்திகளைத் தெரிவித்தார். அவற்றையெல்லாம் அறிந்த போர்டு, மோட்டார் ஒன்றினைச் செய்து முடிக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். ஆனால், வயதுக் குறையும் அநுபவம் இன்மையும் அவருடைய எண்ணத் திற்குத் தடையாய் அமைந்தன. அவர் தம்முடைய பன்னிரண்டாம் வயதில் கடிகாரங்களைச் செம்மைப் படுத்திச் செயல்படுத்தும் முறையினைக் கண்டார்; அத்துறையில் தொடர்ந்து மூன்றாண்டு காலம் பணியாற்றி அநுபவம் பெற்றார். அவர் பதினேழாம் வயதில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார்; ஓய்வு நேரங்களிலெல்லாம் பலவகை இயந்திரங் களைச் சோதித்து, அவை செயல்படும் வகைகளை அறிந்தார் பள்ளிப் படிப்பை விட்ட அவர், தெருக் களில் கற்களை அழுத்தும் எஞ்சினை ஓட்டும் பணியில் அமர்ந்தார்; நாளடைவில் அவற்றைப் பழுது பார்க்கத் தெரிந்துகொண்டார். அவருடைய தந்தையார்க்கு, போர்டின் செயல்களுள் எதுவுமே பிடிக்கவில்லை. அதனால் அவர் போர்டை அழைத்துப் பண்ணை வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு பணித்தார். தந்தையாரின் கட்டளைக் குப் பணிந்த போர்டு, பண்ணை வேலையைச்

செய்வதில் ஊக்கம் காட்டினர். ஆயினும், அவர் ஓய்வு நேரங்களிலெல்லாம் தாம் மேற்கொண்ட இயந்திர வேலையைச் செய்யவும் தவறவில்லை.

தந்தையாரின் பண்ணையில் வேலைபார்த்துக் கொண்டே, ஓய்வு நேரங்களை வீணாக்காமல் இயந்திரத் தொழிலில் கருத்தைச் செலுத்திவந்த காலத்தில்தான் போர்டிற்குத் திருமணம் நடைபெற்றது. அவருடைய மனைவியார் அவருடைய ஆராய்ச்சிகட்கெல்லாம் உற்ற துணைவராக விளங்கினர். திருமணத்திற்குப் பின்னர், போர்டு பண்ணைத் தொழிலை விட்டார்; மின்சாரக் கம்பெனி ஒன்றில் பணிபுரியும் நிலையை மேற்கொண்டார்; தம் இல்லத்தின் பின்புறத்தில் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொண்டார்; அங்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம் ஆராய்ச்சிகளை நிகழ்த்தி வந்தார்.

போர்டு பலவாறு முயன்று 1892-ஆம் ஆண்டில் மோட்டார் வண்டி ஒன்றைச் செய்து முடித்தார். ஆனல், அந்த வண்டி தொடக்கத்தில் நன்ருக ஓடாமல் காலப்போக்கில்தான் நன்ருக ஓடியது. அமெரிக்கா மக்கள் முதன்முதலாக மோட்டாரைக் கண்டனர் என்ருல், அது போர்டு செய்த மோட்டாரேயாகும் என்னலாம். இரண்டாண்டுகள் அதனைப் பயன்படுத்திய போர்டு, பின்பு அதனை விற்றுவிட்டார்; விற்றுப் பெற்ற பெருந்தொகையைக் கொண்டு புதியனவாக இரண்டு மோட்டார்களைச் செய்தார். அவை மூன்றும் நெடுங்காலம் பயன்பட்டன.

போர்டு, மோட்டார்த் தொழிலில் பேருக்கம் காட்டி வந்ததால் அவர் பணி புரிந்த மின்சாரக் கம்பெனியில் தம் கடமைகளைச் செய்ய அவரால் இயலவில்லை. அதனால் கம்பெனியார் அவரை விலக்கி விட்டனர்.

தொடர்ந்து பணி புரிந்து ஊதியம் பெற்ற ஒரு துறையிலிருந்து விலகிவிட நேர்ந்தது பற்றி, அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. அவர் சிறியதொரு மோட்டார்த் தொழிற்சாலையைக் குறைந்த அளவு முதற் பணத்தோடு தொடங்கினார். சிறிது காலம் சென்றதும் அவரைத் தங்கள் கம்பெனியில் சேர்ந்து மோட்டார்த் தொழிலைத் தொடர்ந்து செய்யுமாறு ஒரு கம்பெனியார் வேண்டினர். போர்டு அவர்களது வேண்டுகோளையேற்று அங்குப் பணி புரியலானார்; ஆனால், அவர்களுடைய செயல் முறைகள் பிடிக்காத காரணத்தால் அங்கிருந்து வெளியேறினார்; கடை ஒன்றினை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு மோட்டார்த் தொழிலில் ஊக்கமாக முனைந்தார்; இருபத்தைந்து வண்டிகளைச் செய்தார். அப்போது அமெரிக்காவில் மற்றொருவரும் மோட்டார் செய்வதில் ஈடுபட்டிருந்தார். அவர், போர்டு செய்த மோட்டார்களின் 'தரத்தைப் பழித்துக் கூறினார். அவருடைய பழிப்புரையைப் பொய்ப்பிக்க வேண்டும் என்று எண்ணிய போர்டு, 'மோட்டார்ப் பந்தயம்' ஒன்றை நடத்தினார். அதில் போர்டே வெற்றி பெற்றார். அதுமுதல் அவருடைய புகழ் எங்கும் பரவலாயிற்று.

தொழில் துறை

'மோட்டார்ப் பந்தயத்தில்' வெற்றி கண்ட போர்டு, தொடர்ந்து பல மோட்டார்களைச் செய்வதில் ஈடுபட்டார்; 1903-ஆம் ஆண்டில் மோட்டார் ஒன்றைச் செய்து முடித்தார். அந்த ஆண்டிலும் 'மோட்டார்ப் பந்தயம்' ஒன்று நடத்தப்பட்டது. அந்தப் பந்தயத்தில் 'மிக்க விரைவாக ஓடிய வண்டி' என்னும் சிறப்பைப் போர்டு செய்த மோட்டார் பெற்றது. இரண்டு முறைகளாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பெருமை ஒன்றே போர்டு மோட்டார்களுக்கு நற்பெயரை அளித்தது.

தம்முடைய மோட்டார்களுக்கு நல்ல பெயர் நிலவுவதைக் கண்ட போர்டு, 'போர்டு மோட்டார்க் கம்பெனி' என்னும் பெயரில் நிலையம் ஒன்றை அமைத்தார். போர்டின் மகனான **எட்சல் போர்டு** என்பவர் தொழிற்சாலையின் பெருக்கத்துக்கும், நிலைத்த வளர்ச்சிக்கும் துணையாய் அமைந்தார். மோட்டாரின் பல பாகங்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் செய்யப்பட்டன. அவற்றையெல்லாம் இணைத்து, டயரையும் உருளையையும் வண்டியில் வைத்துப்பூட்ட வேண்டுவதே போர்டின் பணியாக இருந்தது. கம்பெனி தொடங்கிய ஆண்டில் 'ஏ' ('A) மாதிரி (மாடல்) வண்டிகளைச் செய்யலானார்; 1708 வண்டிகளைச் செய்தார்; ஒவ்வொன்றையும் 850 டாலர் வீதம் விற்றார்.

மக்கள் நலன் கருதியே தொழிற்சாலையை நடத்துவதாகவும் என்றும் அழிவுறுதிருக்கும்

நிலையில் கருவிகள் பலவற்றைச் செய்து காருடன் இணைத்திருப்பதாகவும், உயர் தரமான தம்முடைய வண்டிகளை வாங்கித் தமக்குத் துணைபுரியுமாறும் போர்டு செய்தித் தாள்களில் அறிக்கை விடுத்தார். இரண்டாம் ஆண்டில் அவர், 1700 வண்டிகளைச் செய்தார். அவ்வண்டிகள் 'பி' (*B*), 'சி' (*C*), 'எப்' (*F*) என்னும் மூன்று மாதிரிகளில் இருந்தன. 'பி' மாதிரி வண்டியை இரண்டாயிரம் டாலருக்கும், 'சி' மாதிரி வண்டியைத் தொள்ளாயிரம் டாலருக்கும், 'எப்' மாடல் வண்டியை ஆயிரம் டாலருக்கும் விற்ருர். இங்ஙனம் மோட்டார்களை விற்றுப்பெரும் பொருளீட்டிய அவர், புதிதாக ஓரிடத்தை விலைக்கு வாங்கி, அதில் கட்டடத்தைக் கட்டி, அங்குத் தம் தொழிற்சாலையை நிறுவினுர்.

எல்லா மக்களும் பயன்படுத்தும் வகையில் மோட்டார் வண்டிகளைச் செய்யவேண்டும் என்று நினைத்த அவர், தம் தொழிற்சாலை தொடங்கிய நான்காம் ஆண்டில் எட்டாயிரத்து நானூற்று இருபத்து மூன்று வண்டிகளைச் செய்தார்; அடுத்த ஆண்டில் ஆயிரத்து நானூறு வண்டிகளைச் செய்து முடித்தார். இந்த ஐந்து ஆண்டுகளிலும் போர்டு மோட்டார் வண்டிகள் உலகெங்கும் நல்ல விற்பனையாயின. மோட்டார் வாணிகம் பெருகப் பெருகப் பணமும் மிகுதியாகக் குவிந்தது.

போர்டின் தொழில் முயற்சியிலும், நல்வாழ்க்கையிலும் பொருமை கொண்ட பலர் அவர்மீது அநியாயமாக வழக்கொன்றைத் தொடர்ந்தனர். ஆனுல், உண்மையும், நேர்மையுமே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட போர்டே அந்த வழக்கில் வெற்றி பெற்ருர்.

பொருள் பெறுவது ஒன்றையே நோக்கமாகக் கொள்ளாமல் மக்கட்குத் தொண்டு செய்வதையே கருத்தாகக் கொண்ட போர்டு, நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் நல்ல பொருள்களைக்கொண்டு மோட்டார்களைச் செய்யலானார்; மிகவும் இலேசாக இருக்கக் கூடியனவாகவும், விரைந்து செல்லக் கூடியனவாகவும் அவர் செய்த வண்டிகள் நன்கு விற்பனையாயின. வண்டிகள் இலேசாக இருப்பதால் எண்ணெய் மிகக் குறைவாகவே செலவாகியது. இச்சிறப்பியல்புகளுடன் அமைந்த வண்டிகள் 'டி'('T') மாதிரி வண்டிகள் எனப்பட்டன. அதன் விலை எண்ணூற்றைம்பது டாலர்களாகும். அவ் வண்டிகள் உலகெங்கும் மிகுந்த அளவில் விற்பனை யாயின. நடுத்தர மக்களும் வாங்கிப் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே அவ் வண்டிகள் செய்யப்பட்டன என்பதைப் போர்டு தெளிவாகக் கூறினார். "இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ வேண்டுமாயின், விரைந்து செல்லும் தகுதி கொண்ட எங்கள் மோட்டார் வண்டிகளில் பயணத்தை மேற்கொள்ளுங்கள்", என்று போர்டு தம் வண்டிகட்கு விளம்பரம் செய்தார். 'டி' மாதிரி வண்டிகள் செய்யப்பட்ட முதலாண்டிலேயே பதினாயிரத்து அறுநூறு வண்டிகள் விற்பனையாயின. ஐரோப்பியரும் பிற நாட்டினரும் போர்டு கார்களை மிகுந்த அளவில் வாங்கி மகிழ்ந்தனர்.

## தொழிலின் பெருக்கம்

மக்களிடையே ஆதரவு பெருகப் பெருகத் தொழிற்சாலையை விரிவுப்படுத்தவேண்டிய நிலைமை போர்டுக்கு ஏற்பட்டது. 1909-ஆம் ஆண்டில்

அவர் அறுபது ஏக்கர் நிலம் வாங்கி அங்குப் பெரிய தொரு தொழிற்சாலையைக் கட்டினர். அங்கேயே தம் வாழ்விடத்தையும் அமைத்துக்கொண்டார். அந்த ஆண்டில் அவர் பதினெட்டாயிரத்து அறு நூற்று நாற்பத்து நான்கு வண்டிகள் விற்பனை செய்தார். அடுத்த ஆண்டில் முப்பத்து நாலாயிரத்து ஐந்நூற்று இருபத்தெட்டு வண்டிகள் விற்பனையாயின. போர்டு, படிப்படியாக வண்டி யின் விலையைக் குறைத்துக்கொண்டே வந்தார். அதனால் வண்டிகள் மிகுதியாகச் செலவாயின; தொழிற்சாலையில் தொழிலாளர் தொகை பெருகியது. 1911-ஆம் ஆண்டில் முப்பத்தைந்தாயிரம் வண்டிகள் செலவாயின.

மிகப் பெரிய தொழிற்சாலையை அமைத்து, ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான வண்டிகளைச் செய்யும் நிலையத்தைப் போர்டு மிகத் திறமையாக நடத்தினர்; தொழிலாளர்கள் தனித் தனியாகச் செய்யப்படும் மோட்டாரின் பாகங்களை, இணைத்து உருவாக்கும் தொழிலாளர்கள் இருக்கும் இடத்திற்கு இயந்திரங்கள் கொண்டு சேர்க்க வசதி செய்தார்.

எல்லாம் எமக்குத் தெரியும் என்னும் இறுமார்ந்த உள்ளம் கொண்டவர்களை போர்டு தொடர்ந்து வேலை 'செய்ய விடுவதில்லை. செருக் குள்ளவன் தன்னுடைய கடமைகளைச் செம்மை யாகச் செய்ய முடியாது என்பது அவரது கருத்து.

மோட்டார்த் தொழிற்சாலையில் பல பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவுக்கு ஒரு தலைவர் இருக்கின்றார். அவருக்குக்கீழிருந்து பணி புரிபவன்

மேஸ்திரி எனப்படுவான். இவர்கள் எல்லோர்க்கும் மேலாக ஒருவர் இருப்பார். அவருக்கு மேற்பார்வை யாளர் என்பது பெயர். அவர் ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கடமைகளைத் தவருது செய்கின்றனரா என்று கவனிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்.

தொழிலாளர்க்கு அங்கு எல்லா உரிமைகளும் தரப்பட்டிருந்தன. ஊதியம் அவர்கட்குக் குறைவில்லாமல் கொடுக்கப்பட்டது. அதனுல் தொழிலாளர்கள் மன நிறைவுடன் பணி புரிந்தனர். எப்போதும் இன் முகத்துடன் தங்கள் கடமைகளைச் செய்தனர். அதனுல் அவர்களிடையே ஒற்றுமை வளர்ந்தது. அன்பால் அவர்கள் பிணைப்புண்டனர். தொழிலாளர்களது இந்த மனப்பான்மை போர்டிற்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது. அவர் அவர்களுக்கு எந்தவிதக் குறைகளும் இல்லாமல் காத்தார். ‘தொழிலாளர்களது உண்மையான உழைப்புத்தான் எந்த ஒரு நிலையத்துக்கும் இன்றி யமையாது வேண்டுவதாகும். அவர்கள்தான் மிகுந்த மூலதனமிட்டு நடத்தப்படும் அமைப்புக் களின் முதுகெலும்பு போன்றவர்கள்’ என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார்.

போர்டு, தம்முடைய தொழிற்சாலையில் பணிபுரிய வருவோரைக் காணும்போது, அவர் களுடைய பழைய வரலாறுகளைக் கேட்டறிய முனைவதில்லை. வாழ்க்கையில் எத்துணை முறை ஒருவன் தவறியவனுக இருந்தாலும், திருந்திவிட முடியும். என்று அவன் தன் தவறுகளை உணர்ந்து எண்ணத் தொடங்குவானே, அன்றே அவன்

திருந்திவிடுவான். எனவே, நாம் அவனைப்பற்றிக் கேட்டு, அவன் பழைய வரலாற்றை அறிய முனைவது வீண். அதனால் அவனோ நாமோ பெறப்போகும் பயன் ஒன்றுமில்லை. பொறுப்புடைய பணியை அவனுக்குத் தந்து விட்டால், அந்தப் பணியோடு இரண்டறக் கலக்கும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படும். அப்போது அவன் தன் பழைய இயல்புகளை மறந்து அல்லது புறக்கணித்து வாழும் வாழ்க்கையைப் பெறுவான்'', என்று போர்டு தம்முடைய துணை அதிகாரிகளிடம் கூறுவது வழக்கம்.

அவர் தொழிலாளர்களை அடுத்துச் சென்று அவர்களுக்கு நல்லுரைகள் கூறுவார். அவர் கூறும் உரைகளைக் கேட்டுத் தொழிலாளர் மனம் மாறுவர்; அவரையே தங்கள் வழிபடும் வான்பொருளாகக் கொள்வர். ''தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டவனே நல்ல சிறப்பைப் பெறமுடியும். தன்னம்பிக்கை ஒருவனுக்கு இருந்துவிடுமாயின், அவன் தன்னால் முடியாத செயலாக எதனையும் கொள்ளமாட்டான். விடாமுயற்சிப் பண்பு ஒருவனுக்கு இருக்குமாயின், செய்ய முனைந்த செயலில் அவன் வெற்றி பெறுவான். ஆகவே, எங்கள் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களே, நீங்கள் அனைவரும் முயற்சியுடையவர்களாக, தன்னம்பிக்கை கொண்டவர்களாக விளங்க வேண்டும். அவ்விரு இயல்புகளும் உங்களிடம் அமைந்துவிடுமாயின், பல நற்பண்புகள் உங்களை அணைத்துக்கொள்ளும், நீங்கள் வாழ்க்கையில் சிறந்து வாழலாம்'', என்று

போர்டு தம் தொழிலாளர்களுக்கு அவ்வப்போது அறிவுரை கூறுவார்.

இங்ஙனம், அப்பெரியார் உயர் அலுவலர்க்கும், தொழிலாளிகளுக்கும், அறிவுரையும் அன்புரையும் கூறித்தம் தொழிற்சாலையைத் திறம்பட நடத்தினார்.

## நல்ல தொண்டுகள்

தொழிலாளர்கள் நலன் கருதி நற்றொண்டு புரிந்த போர்டு, 1916-ஆம் ஆண்டில் *"தொழில் கல்விச் சாலை"* ஒன்றை நிறுவினார். அதில் பன்னிரண்டு வயது முதல் பதினெட்டு வயது முடிய உள்ள பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். அவர்கட்கு மோட்டார்க்குரிய துணைப் பொருள்கள் செய்யும் முறைகள் கற்பிக்கப்பட்டன. தொழிற்கல்வி மட்டுமல்லாமல், அறிவியற் கல்வியும் கலைக் கல்வியும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. ஒவ்வொரு மாணவரும் ஆண்டுதோறும் நானூறு டாலர் உதவிச் சம்பளம் பெறுகின்றனர். அத்துறையில் வல்ல சிலர் அறுநூறு டாலர்களையும் உதவிச் சம்பளமாகப் பெற்றனர். இவ்விரண்டு நிலைகளும் இல்லாமல் மாணவர்கள் பெயரால் மாதந்தோறும் வங்கியில் குறிப்பிட்ட சிறுதொகை போடப்பட்டது.

போர்டு, *"மருத்துவக்கூடம்"* ஒன்றை அமைத்தார். அங்கு நோயாளிகள் அன்புடன் கவனிக்கப்பட்டனர். பல மருத்துவ நிபுணர்கள் தங்கள் தொழிலைக் குறைவறச்செய்தனர். அதனால் பிணியாளர்கள் நலம் பெற்றனர்; மருத்துவ நிபுணர்களையும், போர்டையும் வாயார வாழ்த்தினர்.

போர்டு காலமாகிச் சில ஆண்டுகளாகி விட்டன. இன்றும் அவருடைய திருமகனுர் எட்சல் போர்டும் அவர் தம் குடும்பத்தாரும் கம்பெனியை நடத்தி வருகின்றனர். போர்டு எளியவராகப் பிறந்தார்; தம் அறிவினலும். ஆராய்ச்சியாலும், உயர் பண்புகளாலும் மோட்டார்ப் பேரரசர் ஆனர். தொழிலாளர் நன்கு மதித்து நலமுற நடந்து, அவர் தம் உள்ளம் கவர்ந்த கள்வரானர்; அவர்கள் ஒத்துழைப்பினல் சிறந்த குபேரரானர். பணத்துடன் பண்புகளும் நிறையப் பெற்ற காரணத்தால் அவர் அறிஞர் மதிப்பிற்கு உரியவரானர். அவரது வாழ்க்கை வரலாறு இளைஞர்க்குச் சிறந்த வழி காட்டியாகும்.

# 7. சிற்பக்கலை

## அறுபத்துநான்கு கலைகள்

மனிதன் உள்ளுணர்விலிருந்து வெளிப்படும் ஆற்றலே *கலை* என்பது. அந்த ஆற்றல் காவிய மாகவும் ஓவியமாகவும் சிற்பமாகவும் இசையாகவும் நடனமாகவும் நாடகமாகவும் பல்வேறு பொருள் களாகவும் வெளிப்படும். நம் முன்னோர் இத் தகைய ஆற்றல்களை அறுபத்து நான்கு வகையாகப் பிரித்தனர்; அவற்றுக்கு அறுபத்து நான்கு கலைகள் என்று பெயரிட்டனர். அவை காவியக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை எனப் பலவாறு பெயர் பெறும்.

## சிற்பக்கலை

சிறிய உளிகொண்டு ஒரு கல்லில் ஒருவன் அழகான உருவத்தை அமைக்கின்றான். மற் றொருவன் செங்கல், சுண்ணாம்பு, மண் இவற்றைக் கொண்டு மிகப்பெரிய முனீசுவரன் உருவத்தை அமைக்கிறான்; அதன்மீது பல வண்ணங்களைத் தீட்டி அழகிய உருவக் காட்சியை நல்குகிறான். வேறொருவன் களிமண்ணைப் பிசைந்து காட்சிக்கு இனிய கண்ணன் உருவத்தை அமைக்கிறான். பிறிதொருவன் ஒரு மரத்துண்டைக் கொண்டு தன் கைத்திறனால் கண்ணைக் கவரும் உருவம் ஒன்றை அமைக்கின்றான். மற்றொரு மனிதன் நெட்டியைக் கொண்டு ஓர் உருவத்தைச் செய்து முடிக்கிறான், இங்ஙனம் மண், மரம், செங்கல், நெட்டி,

சுண்ணும்பு இவற்றைக் கொண்டு அமைக்கப் படும் உருவங்கள் *சிற்பங்கள்* எனப்படும். சிற்பங்களை அமைக்கும் ஆற்றலே *சிற்பக்கலை* என்பது.

சங்க காலத்தில்

கல்லிலோ பிறவற்றிலோ உருவத்தை அமைக்க விரும்பும் ஒருவன், முதலில் தான் அமைக்க விரும்பும் உருவ அமைப்பை ஓவியமாக வரைந்து கொள்வான். அதனைப் பார்த்துப் பார்த்துச் சிற்பத்தை அமைப்பான். நமது பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வீரக்கல் வழிபாடு கூறப்பட்டுள்ளது.

சிறந்த முறையில்போர்செய்து போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர் நினைவாக நடத்தப்பட்ட கல்லை அவன் வீட்டாரும் மற்றவரும் வழிபடுவர். அக் கல்லில் இறந்த வீரனது உருவம் பொறிக்கப் பட்டிருக்கும். அவ்வுருவத்தின் கீழ் அவனது பெயரும் பீடும் குறிக்கப்பட்டிருக்கும். எனவே, தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பே) தமிழர் இக்கலையை அறிந்திருந்தனர் என்பது தெளிவு.

தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் *கோவில்கள்* இருந்தன. எனவே, அக்கோவில் களில் கல்லால் அல்லது மரத்தால் அல்லது மண்ணால் ஆன கடவுளர் திருவுருவங்கள் இருந் திருத்தல் வேண்டும் என்பதும் தெளிவாகிறது. சேரன் செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கல்லைக்

கொண்டு வந்தான்; அதில் கண்ணகியின் உருவத்தை அமைவித்தான். அவ்வுருவத்தைக் கோவிலில் எழுந்தருளச் செய்து விழா அமைத்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. சிலப்பதிகார காலமாகிய கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் தமிழகத்தில் சிற்பக் கலையறிவு சிறந்திருந்தது என்பது இதனால் தெளிவாகிறதன்றோ?

## பல்லவர் காலத்தில்

பல்லவர் காலத்தில் (கி. பி. 300—900) நாயன்மார்கள் ஏறத்தாழ நானூறு சிவன்கோவில்களுக்குச் சென்று பதிகம் பாடியுள்ளனர். இவ்வாறே ஆழ்வார்கள் ஏறத்தாழ நூற்றெட்டுப் பெருமாள் கோவில்களைப்பற்றிப் பாடியுள்ளனர். எனவே, அக் காலத்தில் தமிழகத்தில் பலநூறு கோவில்கள் இருந்தன என்பது தெளிவு. இக் கோவில்களில் முறையே சிவலிங்கமும் பெருமாள் திருவுருவமும் இருந்திருத்தல் இயல்பே. சிவலிங்கம் பெரும்பாலும் கல்லால் அமைந்தது. பெருமாள் திருவுருவமும் கல்லால் அமைந்ததே. கஜலட்சுமி, வாயிற்காவலர் முதலியோர் திருவுருவங்கள் பல கோவில்களில் சுதையால் ஆனவை. எனவே, பல்லவர் காலப் பழங்கோவில்களில் சிற்பங்கள் இருந்தன என்பது தெளிவாகும்.


பல்லவர் முதலில் மலைச்சரிவுகளைக் குடைந்து கோவில்களை அமைத்தனர்; அக்கோவில்களில் வாயிற்காவலர் உருவங்களைப் பொறித்தனர்; வழிப்பாட்டிற்குரிய கடவுளர் திருவுருவங்களைக் கல்லில் சமைத்தனர். முதலாம் மகேந்திரவர்மன் வல்லம்,

தளவானூர், மண்டபப்பட்டு, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் இத்தகைய கோவில்களை அமைத்தான்.

அவன் மகனுன நரசிம்மவர்மன் கற்களைக் குடைந்து கோவில்களாக அமைத்தான். அக் கோவில்களே மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவர் இரதங்கள் என்று இன்று புகழப்படுகின்றன. அவை *குடைவரைக்கோவில்கள்* என்று சொல்லப் படும். அவற்றின் வெளிப்புறச் சுவர்களில் கண்ணைக் கவரும் சிற்பங்கள் பலவற்றை இன்றும் காணலாம். அக்கோவில்களை அடுத்து, யானை, சிங்கம் ஆகியவற்றைக் குறிக்கும் தனி உருவச் சிற்பங்கள் கண்ணைக் கவரத்தக்க முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

பாரதம், பாகவதம் இவற்றில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் சில கற்பாறைகளில் செதுக்கப் பட்டுள்ளன. கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்திப் பசுக்களையும் ஆயர்களையும் பெருமழையிலிருந்து காக்கும் நிகழ்ச்சி அழகிய சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆயர்களின் கவலை தோய்ந்த முகங்கள் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன. உள்ளத்து உணர்ச்சிகளைத் தெள்ளத் தெளிவாகச் சிற்ப உருவங்களில் காட்டும் திறமை கண்டு களிக்கத்தகும்.

பராசக்தி எருமைத்தலை அசுரனேடு போர் செய்யும் காட்சி ஒரு மண்டபச் சுவரில் செதுக்கப் பட்டுள்ளது. இக்காட்சி கண்ணையும் கருத்தையும் ஈர்க்க வல்லது.



மாமல்லபுரத்து உருவச் சிற்பங்கள்

பெரிய ஆற்றின் இருபுறங்களிலும் பலர் நீராடுகின்றனர். ஆற்றங்கரையில் சிறிய கோவில்; அக்கோவிலுக்குப் பக்கத்தில் முனிவர்கள் தவம் செய்கின்றனர்; அன்னங்கள் கரையில் காட்சியளிக்கின்றன; மறையவன் ஒருவன் குடத்தில் தண்ணீர் சுமந்து செல்கிருன்; முனிவர் தவம் செய்வதைக்கண்ட பூனையொன்று தன் பின்கால்களில் நின்று தவம் செய்கிறது; அதனைக்கண்ட எலிகள் அச்சம் நீங்கி அன்பு கொண்டு அதனைப் பணிகின்றன. இத்துணைக் காட்சிகளும் ஓர் மண்டபச் சுவரில் மிகத் தெளிவாகச் செதுக்கப் பட்டுள்ளன.

மாமல்லபுரத்தில் ஆதி வராக கோவில் ஒன்று இருக்கிறது. அதனுள் ***முதலாம் மகேந்திரவர்மன்*** உருவச் சிற்பம் ஒன்றும், அவர் மனைவியர் இருவர் உருவச் சிற்பங்களும் பெரிய அளவில் அமைந்திருக்கின்றன. இவ்வுருவங்களுக்கு நேர் எதிரில் மகேந்திரவர்மன் தந்தையான ***சிம்ம விஷ்ணுவின்*** உருவச் சிலையும், மனைவியர் இருவர் உருவச் சிலைகளும் அமைந்துள்ளன. சிம்ம விஷ்ணு தலையில் ஒருவகை முடி அணிந்திருக்கிருன். ஒருவகை ஆசனத்தில் அமர்ந்திருக்கிருன். அவனுக்கு இருபுறத்திலும் மனைவியர் இருவர் நிற்கின்றனர். அவர்கள் தலைகளிலும் முடிகள் காணப்படுகின்றன. தந்தைக்கு எதிரில் மகேந்திரன் தன் மனைவியரோடு நிற்கின்ருன். அவன் வலக்கை உள் கோவிலைச் சுற்றியபடி உள்ளது. இடக்கை முதல் மனைவியின் வலக்கையைப் பற்றியபடி அமைந்துள்ளது. இவ்வுருவச்

சிற்பங்கள் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டவை; ஆயினும், இன்றும் தெளிவாகக் காணப் படுகின்றன.

மாமல்லபுரத்திற்கு மூன்று கல் தொலைவில் உள்ள சாளுவன்குப்பத்தில் ஒரு கற்பாறை மிகச் சிறிய குகைக் கோவிலாகக் குடையப்பட்டுள்ளது. அதன் வெளிப்புறத்தில் **புலித்தலைகள்** பொறிக்கப் பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மலையில் சிவபெருமான் கங்கையைத் தலையில் தாங்கிய வரலாற்றைக் குறிக்கும் **கங்காதரச்சிற்பம்** மிக உயர்ந்த முறையில் செதுக்கப் பட்டுள்ளது. நேரில் காண்பவரே அவற்றின் அருமைப்பாட்டை உள்ள வாறு உணர்தல் கூடும்.

இராஜசிம்ம பல்லவன் காஞ்சியில் **கயிலாச நாதர் கோவிலைக்** கட்டினான். அக்கோவில் உட்புறச் சுவர்களில் ஏறத்தாழ ஐம்பது சிறு புரைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு புரை யிலும் புராண நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளன. பாற்கடல் கடைந்த வரலாறு, முப்புரம் எரித்த வரலாறு, மார்க்கண்டனுக்காக எமனை உதைத்த வரலாறு, சிவன் - அருச்சுனன் போர், சிவன் நால்வர்க்கும் அறம் உரைத்தல், இராவணன் கயிலையைப் பெயர்த்தல் முதலிய வற்றைக் குறிக்கும் சிற்பங்கள் தெளிவாக அமைந் துள்ளன. பராசக்தியின் எழுவகை உருவங்களும் ஒரு புரையில் காட்டப்பட்டுள்ளன. சிவபெருமான் எட்டுக்கைகளுடன் நடனமாடுவதைக் குறிக்கும் சிற்பங்கள் பல இக்கோவிலில் செதுக்கப்

பட்டுள்ளன. இடக்கால் முன்புறம் மடித்து ஊன்றி, வலக்கால் பின்புறம் மடித்துத் தூக்கி, இடக்கைகளில் ஒன்று தலைமுடிக்குமேல் உயர்த்தியபடி நடித்தல் - அங்ஙனம் நடிக்கும் பொழுதே இடக்கைகள் இரண்டும் பந்தை எறிந்து பிடித்தல் என்பவற்றை உணர்த்தும் நடனம் 'லதாவ்ரிசிக நடனம்' என்று சொல்லப்படும். இந்த நடனத்தைக் குறிக்கும் பல சிற்பங்கள் இங்கு இருக்கின்றன.

கயிலாசநாதர் கோவிலுக்கு நேர் எதிரில் ஊருள் ***வைகுந்தப் பெருமாள் கோவில்*** அமைந்துள்ளது. அக்கோவிலின் உட்புறச் சுவர்களில் பல்லவர் வரலாறு சிற்பங்களாகப் பொறிக்கப் பட்டுள்ளன. பல்லவர் பரம்பரையைத் தோற்றுவித்த அரசன் காலம் முதல் அக்கோவிலைக் கட்டிய இரண்டாம் பரமேசுவரன் காலம் வரையில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தும் சிற்பக் காட்சிகளாகக் காட்டப்பட்டுள்ள அற்புதம் கண்டு மகிழ்தற்குரியது. இக்கோவில் கருவறையில் மிகப்பெரிய பெருமாள் சிலை பேரழகுடன் காணப் படுகிறது.

## சோழர் காலத்தில்

பல்லவர்க்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட சோழப் பேரரசர் அமைத்த பெருங்கோவில்கள் பலவாகும். அவற்றுள் தஞ்சைப் பெரிய கோவில், கங்கைகொண்டசோழேச்சுரம், தாராசுரம் கோவில், திரிபுவன வீரேசுவரம் என்பன குறிக்கத் தக்கவை. ***முதலாம் இராசராச சோழன்*** தஞ்சைப் பெரிய கோவிலை எடுப்பித்தான். அக் கோவில்

வாயில்களில் பதினுன்கடி உயரமுள்ள வாயிற் காவலர் உருவங்கள் வியத்தகு முறையில் அமைந் துள்ளன. கருவறைக்கு மேல் அமைந்துள்ள விமானம் அரிய சிற்ப வேலைப்பாடு கொண்டது.

இதே முறையில் இவன் மகனை *கங்கை கொண்டசோழன்* கங்கைகொண்டசோழபுரத்தில் பெருங்கோவிலை எடுப்பித்தான். அங்குள்ள நந்தி மிகப் பெரியது; சுதையால் ஆனது. கோவில் வெளிப்புறச் சுவர்களில் உள்ள கஜலட்சுமி உருவம், சண்டேசப்பதம் உணர்த்தும் சிற்பம் முதலியன கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பனவாகும். சிவபெருமான் உமையம்மையோடு காட்சியளித்து அமர்ந்த நிலையில் விசாரசருமர் முடியில் தமது கொன்றை மாலையைச் சூட்டிச் சண்டேசப்பதம் அருளும் காட்சியை உணர்த்தும் சிற்பம் பேரெழில் பெற்று விளங்குகிறது. அச்சிற்பம் இற்றைக்கு ஏறத்தாழத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு செய்யப்பட்டது; ஆயினும் நேற்று மாலையில் செய்து அமைக்கப்பட்டது போன்ற காட்சியை இன்று நமக்குக் காட்டுகின்றது.

கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்திலுள்ள கோவில் *இரண்டாம் இராசராசன்* எடுப்பித்தது. அதன் பெயர் இராசராசேசுவரம் என்பது. அப் பெயரே நாளடைவில் திரிந்து தாராசுரம் என வழங்கலாயிற்று. அது மிகப்பெரிய கோவிலாகக் கட்டப்பட்டது. இப்பொழுது சுவாமி கோவில் தனியாகவும், அம்மன்கோவில் தனியாகவும் காணப்படுகின்றது. அங்குள்ள சிற்பங்கள் வியந்து போற்றத்தக்கவை. கருவறையின் புறச்சுவர்களில்

மிகச் சிறிய அளவில் நாயன்மார் வரலாற்றை உணர்த்தும் சிற்பங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு சுவரில் நூற்றெட்டுச் சைவ ஆசாரியர் திருவுருவங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. கோவில் திருச்சுற்று மண்டபத்தில் இரண்டாம் இராசராசன் உருவச்சிலையும், அவன் கோப்பெருந்தேவியின் உருவச்சிலையும் இருக்கின்றன. அக்கால அரசமாதேவியர் உடைச்சிறப்பையும், அணிச்சிறப்பையும், ஒப்பனையையும் கோப்பெருந்தேவியின் சிற்பத்தைக் கொண்டு உணரலாம். சோழவேந்தர் அணிந்திருந்த மணிமுடி பலவகை அணிகலன்கள் முதலியவற்றை வேந்தன் உருவச்சிற்பத்தைக் கொண்டு தெளியலாம்.

### விசயநகர ஆட்சியில்

சோழர்க்குப் பிற்பட்ட விசயநகரவேந்தர் ஆட்சியிலும், நாயக்க மன்னர் ஆட்சியிலும் சிற்பக்கலை சிறந்து விளங்கியது. இவர்கள் காலத்தில் கோபுரங்கள், மிக உயர்த்தப்பட்டன. எழுநிலைக் கோபுரங்கள், ஒன்பது நிலைக் கோபுரங்கள், பதினோருநிலைக் கோபுரங்கள் எனக் கோபுரங்கள் வானளாவக் கட்டப்பட்டன. ஒவ்வொரு நிலையிலும் புராண இதிகாச நிகழ்ச்சிகளை உணர்த்தும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. மதுரை மீனாட்சியம்மன் கோவில் திருவண்ணாமலைக் கோவில், குடந்தை நாகேசுவரம், குடந்தை சாரங்கபாணி கோவில் முதலிய கோவில் கோபுரங்களில் உள்ள சிற்பங்கள் குறிக்கத்தக்கவை. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபம்

புதுமண்டபம், கிருஷ்ணுபுரம் கோவில், தாட்டி கொம்பு பெருமாள் கோவில், பேரூர்ச்சிவன் கோவில் இவற்றில் உள்ள தூண் சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக்கலை வளர்ச்சியை உலகறியச் செய்வன வாகும். இவற்றை நேரிற் சென்று காண்பவரே சிற்பக்கலையின் சீரிய தன்மையை உள்ளவாறு உணர முடியும்.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தூண் ஒன்றில் குறத்தியின் சிற்பம் காணப்படுகிறது. குறத்தியின் கையில் ஒரு கூடை இருக்கின்றது. அக்கூடையின் அமைப்பு கல்லில் மிகத் தெளிவாகவும் அழகாகவும் காட்டப்பட்டுள்ளது. குறத்தி நான்கு குழந்தை களுக்குத் தாய். ஒரு குழந்தை அவள் கையைப் பிடித்துக்கொண்டு நிற்கிறது; மற்ருென்று அவள் முதுகில் இருக்கிறது; இன்ஞென்று அவள் கூடை யில் இருக்கிறது; நான்காம் குழந்தை அவளது மார்பில் துணியால் கட்டப்பட்டுத் தொங்கிக் கொண்டிருக்கிறது. குறத்தியின் தலையலங்காரம், உடையலங்காரம், அவள் அணிந்துள்ள அணிகள் ஆகிய இவையெல்லாம் மிகத் தெளிவாகவும் நுட்ப மாகவும் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தைக் கண்டு வியவாத அறிஞர் இல்லை.

கிருஷ்ணுபுரத்துச் சிற்பங்கள் மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டவை. தூணின் நாற்புறங் களிலும் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குறத்தி ஒருத்தி அரச குமாரனைத் தோளில் தூக்கிக்கொண்டு ஓடுகிருள். தூணின் அடிப்புறத்தில் அன்னப்பறவைமீது அமர்ந்த அரசி ஒரு கிலுகிலுப்பையைக் காட்டிக்

குமரனது கவனத்தை இழுக்கிருள். குறத்தி அப் பிள்ளையுடன் ஓடிவிடுகிருள். அரசி குறி கேட்பது போலவும், குறத்தி, 'உன் தலைவிதி இப்படி - உன் மகன் வாரான்', என்று குறி கூறுதல் போலவும் தூணின் வடபுறத்தில் சிற்பங்கள் அமைந்துள்ளன. மன்னன் தன் மகனைத் தேடிக் குதிரைமீது வருகின்றுன். ஒரு வீரன் வழியில் அம்மன்னனை மறிக்கிருன். மன்னன் ஏறிவந்த குதிரை அவ் வீரனைத் தன் முன்கால்களால் நசுக்குகிறது. அந்த வீரன் தன் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி, மூச்சை அடக்கிக் குதிரையின் அழுக்கலைத் தாங்கு கிருன். இக்காட்சிகள் தூணின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளன. இவ்வாறு ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் பல சிற்பங்கள் ஒவ்வொரு தூணைச் சுற்றிலும் அமைந்திருக்கின்றன.

இந்தச் சிற்பங்கள் சிறந்த வேலைப்பாடு கொண்டவை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் உண்மையை வெளிப்படுத்தும் வகையில் சிற்பிகள் முகங்களை அமைத்திருத்தல் மிகவும் பாராட்டத்தக்கது. அரசன், அரசி, அரச குமாரன், அரசிளங்குமரி ஆகியோர் உருவச் சிற்பங்களில் அவரவர் உடைகளும், அணி வகை களும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. கூந்தல் ஒப்பனையும் நன்கு காட்டப்பட்டுள்ளது. குறத்தி யின் உருவம் அவளுக்கேற்ற உடையையும் அணியையும் கொண்டு விளங்குகின்றது. இவ்வாறே குறவனது உடலமைப்பு, அணிகள், முடி அலங்காரம் முதலியன தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன. விலா எலும்புகளும் தெளிவாகத்

தெரியும்படி சிற்பம் அமைக்கப்பட்டிருக்கிறது எனின், அக்காலச் சிற்பிகளின் கலைத்திறனை என்னென்பது!

## சலவைக்கல் சிற்பம்

தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னரான **சரபோஜி**யின் உருவம், ஒரு சலவைக்கல்லில் மிகவும் வியக்கத்தகும் முறையில் அமைந்துள்ளது. அது தஞ்சை அரண்மனையில் இன்றும் இருக்கின்றது. அரசனது உடைச்சிறப்பும், தோற்றப் பொலிவும் கண்ணைக் கவரத் தக்கவை. அச்சிற்பம் மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டது. சிற்பக் கலையில் மிக்க தேர்ச்சியுடைய சிற்பியே அதனைச் செய்திருத்தல் வேண்டும்.

## முடிவுரை

நமது நாட்டில் இன்றும் பெரியவர்களின் உருவச்சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சென்னை நகரில் அத்தகைய உருவச் சிற்பங்களை ஆங்காங்கே காணலாம். ஒவ்வொரு **கோவில்தேரிலும்** சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இன்றும் புதிய தேர்களில் உருவங்கள் செதுக்கப்படுகின்றன. எனவே, தொல்காப்பியருக்கு முன்னரே தோன்றிய சிற்பக்கலை இன்றளவும் வாழ்ந்து வருகின்றது; படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை நாம் நன்குணரலாம்.

# 8. டாக்டர் சர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்

## ஆர்க்காடு

டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியாரின் முன்னேர்கள் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்க்காடு என்னும் ஊரினராவர். ஆர்க்காடு இன்று-நேற்று தோன்றியதன்று; இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே சங்கநூல்களில் இடம் பெற்றுள்ளது. அழிசி என்னும் சிற்றரசன் ஆர்க்காட்டை ஆண்டு வந்தான் என்று சங்கப்பாடல் ஒன்று கூறுகின்றது. முசுலிம்கள் தென்னாட்டை ஆண்டபோது ஆர்க்காட்டையே தலைநகராகக் கொண்டனர். இங்ஙனம் வரலாற்றுச் சிறப்புடைய மூதூரில் பிறந்தவரே நமது டாக்டரின் தந்தையார். அவர் அரசாங்க அலுவலை முன்னிட்டு ஆந்திர நாட்டைச் சேர்ந்த கர்நூலில் வாழ்ந்து வந்தார்.

## தாயற்ற பிள்ளைகள்

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டில் கர்நூல் நகரில் அக்டோபர்த் திங்கள் பதினன்காம் நாள் டாக்டரவர்கள் பிறந்தார்கள். டாக்டரவர்களின் தாயார் இரண்டு குழந்தைகளை அந்நாளில் ஈன்றெடுத்தார். அந்த இரட்டைப் பிள்ளைகளே இன்று உலகம் புகழும் சர். ஆ. இராமசாமி முதலியார், சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் ஆவர். அவ்விருவரும் ஒரே அமைப்புடையவராய் விளங்கினர்; இரண்டு ஆண்டுகள் பெற்றேர் அரவணைப்பில் வளர்ந்தனர்.

இரண்டாம் ஆண்டின் இறுதியில், தாயார் காலமானார். பெற்ற தாயினும் பிள்ளைகட்கு உற்ற துணை யாருளர்? இரட்டைப் பிள்ளைகள் தாம் பிறந்த இரண்டாம் ஆண்டிலேயே தாயற்ற பிள்ளைகளானார்கள். ஆயினும், தந்தையார் அவர்களை அன்புடன் வளர்த்து வந்தார்.

## பள்ளிப் படிப்பு

ஐந்தாம் வயதில் இரட்டைப் பிள்ளைகள் பள்ளியிற் சேர்க்கப்பட்டனர். பிள்ளைகள் இருவரும் ஆசிரியர்தம் அன்புக்கு உரியவராயினர்; நன்கு கற்றமையால் ஆசிரியர்களின் நினைவை ஈர்த்தனர்; நூல் நிலையங்களில் இருந்த சிறந்த நூல்களைக் கற்றுப் பயன் பெறுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். அதனால் பிற பிள்ளைகள் இவர்களிடம் அன்பு கொண்டனர். மெட்ரிக்குலேஷன் தேர்வில் சிறப்புற வெற்றிபெற வேண்டும் என்பதற்காக இருவரும் கருத்தாய்ப் படித்தனர். தேர்வு மிக நெருக்கமாக இருந்த சமயத்தில் அவர்களுடைய தந்தையார் காலமானார். தாயை மிக்க இளமையில் இழந்து, தக்க தருணத்தில் தந்தையையும் இழந்த அவர்கள், பெரிதும் துன்புற்றனர். இறைவனை நம்புதலும், துன்பத்திலும் இன்பத்திலும் இறைவனை எண்ணுதலும் மன அமைதிக்குரிய நல்வழிகளாகும் என்பதையறிந்த அவர்கள், ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு தேர்வு எழுதினர்; தேர்வில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றனர்.

## கல்லூரியில் இரட்டையர்

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் இரட்டையர் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். அக்கல்லூரி

யில்தான் அவர்களுடைய உறவினரெல்லாம் கற்றுத் தேர்ந்தனர். இரட்டையருள் மூத்தவர் அரசியற் கலைநூல்களை விருப்பத்துடன் கற்ருர்; இளையவர் அறிவியற்கலை நூல்களை விருப்பத்துடன் படித்தார். தாங்கள் மேற்கொண்ட பாடத்தொடர்பாக அவர்கள் எண்ணற்ற துணைநூல்களைக் கற்றனர். டாக்டர் மில்லர், டாக்டர் ஸ்கின்னர், டாக்டர் மெஸ்டன் போன்ற பேராசிரியர்களிடம் பயின்ற காரணத்தால், ஆங்கில நூல்களை மிகுதியாகக் கற்கும் ஆர்வம் கொண்டனர்; ஆங்கிலத்தில் திறம்படப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றனர்.

கல்லூரி இடைநிலை வகுப்புத் தேர்ச்சிக்குப் பின்னர், இளையவர் மருத்துவக் கல்லூரி மாணவர் ஆயினர். அவர் மருத்துவத் துறையில் வல்லவராக விளங்க விரும்பினுர். அதனுல் அவர், அத்துறை பற்றிய நூல்களையெல்லாம் பேருக்கங்கொண்டு கற்ருர்; தமக்கு அவ்வப்போது தோன்றும் ஐயங்களை யெல்லாம் தம் பேராசிரியரை அடுத்துக் கேட்டுத் தெளிவு பெற்ருர்; ஆய்வு முறைகளிலெல்லாம் பிற எல்லா மாணவரைக்காட்டிலும் சிறந்து விளங்கினுர்; அதனுல் 'இலக்குமணசுவாமி எதிர்காலத்தில் மருத்துவத்துறையில் பெருஞ்சிறப்படைவார்' என்று ஆசிரியர்கள் சோதிடம் கூறினர். இங்ஙனம் பேராசிரியர்களாலும், உடன்படித்த மாணவ நண்பர்களாலும் பாராட்டத்தக்க முறையில் படித்துவந்த அவர், மருத்துவத் தேர்வில் சிறப்புறத் தேறினுர்.

மூத்தவர் 1908-ஆம் ஆண்டில் பி. எல். பட்டம் பெற்று வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

## மதுரையில் மருத்துவத் தொண்டு

டாக்டரவர்கள் 1909-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்க மருத்துவத்துறையில் மருத்துவர் வேலை பெற்றார். அப்போது அவருக்கு வயது இருபத்திரண்டு. முதலாண்டில் அவர் மதுரை அரசாங்க மருத்துவ நிலையத்துக்கு அனுப்பப்பட்டார். நோயால் துன்புறுவோர், மருந்துகளை எதிர்பார்ப்பதைவிடத் தங்களை அன்பாக நெருங்கி, மலர்ந்த முகத்துடன் குறைகளைக் கேட்டு உளமார ஆறுதல் கூறுவோரைத்தான் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். நோய்க்குரிய தக்க மருந்தினை உணர்ந்து கொடுப்பதில் அவர் வல்லவராக விளங்கினார்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை அவர் தமது வாழ்வில் பொன்னேபோல் போற்றினார். பிணியாளர்கள் டாக்டரவர்களை அன்புடன் வரவேற்று, அவர் கூறும் கருத்துக்களைக் கேட்டு, தரும் மருந்துகளை உண்டு, நலம் பெற்றனர். மதுரை மாநகரப் பொதுமக்கள் இப்புதிய மருத்துவ இளைஞரை மனமாரப் பாராட்டினர்.

## சென்னையில் மருத்துவத் தொண்டு

மதுரையில் ஓராண்டு பணியாற்றிய அவர், சென்னைப் பொது மருத்துவ நிலையத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் அறுவைச் சிகிச்சை செய்யும் துறையில் பயிற்சி பெற்றார்; இரண்டாண்டுகளுள் சிறந்த அறுவை நிபுணராக

விளங்கும்நிலை பெற்றார்; 1912-ஆம் ஆண்டில் சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள் - குழந்தைகள் மருத்துவ நிலையத்துக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர், பிணியாளர்களின் அன்புக்கு உரியவராயினார்; அங்கு இரண்டாண்டுகள் பணியாற்றினார்; பின்பு இராயபுரத்துப் பிள்ளைப் பேற்று மருத்துவ நிலையத்துக்கு மாற்றப்பட்டார்; பிள்ளைப் பேற்றுக்கு வரும் தாய்மாரிடம் அன்புடன் பேசுதல், அவர்கள் துன்பத்துக்கு ஆறுதல் கூறுதல், ஏற்ற மருந்துகள் வழங்கல் ஆகியவற்றில் சிறிதும் சலிப்படையாது பணிபுரிந்தார். இராயபுரம் பகுதியில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் தொழிலாளிகளாவர். அவர்கள் ஏழைகள். தக்கமுறையில் அவர்கள் குறைகளைக் கவனிக்க மருத்துவர்கள் முனைவதில்லை. செல்வம் கொண்டவர்களாயின் அவர்களை வரவேற்றுக் கருத்தாகக் கவனிக்கும் மருத்துவர்கள் பலர் உண்டு. ஆனால், நம் டாக்டரவர்கள் தம்முடைய மருத்துவ மனையில் ஏழைகளையும் செல்வர்களையும் ஒரு நிலையிலேயே கவனித்து வந்தார். 'நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்றனர். அனைவரும் இந்நாட்டு மக்கள். எனவே, அரசாங்கத்தால் நடத்தப்படும் இந்த மருத்துவ மனையும் எல்லோர்க்கும் உரியது', என்று அவர் எண்ணினார். அந்த எண்ணமே அவரை உண்மையுடைய நல்ல மருத்துவத் தொண்டராக்கியது என்னலாம். வட சென்னை மக்கள் அவரை வாயாரப் போற்றி வாழ்த்தினர். அங்கு அவர் ஆறாண்டுகள் பணி புரிந்தார்.

## எழும்பூர் மருத்துவ மனையில்

1920-ஆம் ஆண்டில் எழும்பூர், தாய்-சேய் மருத்துவ மனைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு அவர் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். பிள்ளைப் பேற்றுத்துறைப் பேராசிரியராகவும், மருத்துவ மனைத் துணைக் கண்காணிப்பாளராகவும் இருந்தார். டாக்டரவர்கள் நாடறிந்தவராகவும் உலகறிந்தவ ராகவும் விளங்க, எழும்பூர் மருத்துவ மனையே காரணமாய் அமைந்தது எனலாம். பிள்ளைப் பேற்று மருத்துவத் துறையில் அவர் தனிச்சிறப்பு உடையவராக விளங்கினார். அத்துறைக்குரிய நூல்கள் அனைத்தும் கற்றார்; பல ஆய்வுகள் நடத்தி வெற்றிகண்டார். எனவே, அவர் அம்மருத்துவ மனையில் பல திருத்தங்களைச் செய்தார். தாய்மார்களை மிக்க அன்புடன் கவனித்துக் கொள்ளுதல், தக்கவேளையில் அவர்கட்கு உண்ண உணவும் மருந்தும் கொடுத்தல், ஓய்வு கொள்ளு மாறு செய்தல் முதலியவற்றைச் சிறந்த முறையில் கையாளச் செய்தமையால், அம்மருத்துவ மனையின் பெயர், குறுகிய காலத்தில் நகரெங்கும் பரவியது. 'எத்தகைய சிக்கலான பிள்ளைப் பேற்றையும் எளிதில் குணமாக்க வல்லவர்' என்னும் சிறப்பினை அவர் பெற்றார்.

பிள்ளைப்பேற்றுத்துறையில் தாம் மேற்கொண்ட பல புதிய மருத்துவ முறைகளையும், அறுவை முறைகளையும், அவைகளில் வெற்றிகண்ட வகையையும் குறித்து டாக்டரவர்கள் பல கட்டுரைகளை எழுதினார். அவை இந்திய நாட்டு மருத்துவத் தாள்களிலும், மேலை நாட்டு மருத்துவத்

தாள்களிலும் வெளியாயின. அதனால் சென்னை மாகாணம் மட்டுமே அறிந்திருந்த 'டாக்டர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்' என்னும் பெயரினை உலக நாடுகள் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. அத்துறையில் பயிற்சி பெற இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், மாணவர் பலர் வந்தனர்.

உலக நாடுகளுக்குச் செல்லல்

1927-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தீவிலுள்ள பல்கலைக் கழகங்களையும், ஐரோப்பாவில் உள்ள பல்கலைக் கழகங்களையும் பார்வையிட்டு வருமாறு சென்னை அரசாங்கம் டாக்டரவர்களை அனுப்பியது. அவர் இங்கிலந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து, பாரிஸ், பெர்லின், வியன்ன, பிரஸல்ஸ், ஆம்ஸ்டர்டாம் முதலிய இடங்களைப் பார்வையிட்டார்; அங்கு இருந்த பிள்ளைப்பேற்று மருத்துவ நிலையங்களையும், பொது மருத்துவ மனைகளையும் கருத்தூன்றிக் கவனித்தார்; பல மருத்துவக் கழகக் கூட்டங்களில் கலந்துகொண்டார்; பிள்ளைப்பேற்று மருத்துவம் பற்றித் தம் கருத்துக்களைத் தெளிவாகக் கூறினர். மேனாட்டு மருத்துவ அறிஞர்கள் டாக்டரவர்களின் கருத்தாழமும் சொல்லாற்றலும் கொண்ட பேருரைகளைக்கேட்டு வியந்தனர்; மகிழ்ந்தனர்.

1930-ஆம் ஆண்டில் பிரிட்டனில் பிள்ளைப் பேற்று மருத்துவர் கல்லூரி ஏற்பட்டது. அப்போது நமது டாக்டர் * அப்பிள்ளைப்பேற்று மருத்துவக்

* F. R. C. O. G. ... (Fellow of the Royal College of Obstetricians and Gynecologists).

கல்லூரி நிபுணருள் ஒருவராக ஏற்றுக்கொள்ளப் பட்டார். பெறுதற்கரிய இத்தகுதியை அக்காலத்தில் பெற்றவர் இருவரேயாவர். அவருள் ஒருவர் நம் டாக்டரவர்கள். மற்ருெருவர் சர். கேதாரநாததாஸ் என்பவர்.

உலக நாடுகளிடையே சுற்றுப் பயணம் செய்த டாக்டரவர்கள் அங்குத் தாம் கண்ட நல்லன வற்றையெல்லாம் எழும்பூர் மருத்துவ நிலையத்தில் காண விரும்பினுர்; எனவே, அம்மருத்துவமனையில் இருந்த பல முறைகளை மாற்றியமைத்தார். மருத்துவத்துறை மாணவர்க்குப் பாடம் நடத்தலிலும் புதியமுறைகளை நுழைத்தார். அதனுல் மாணவர் தொகை மிகுதியாயிற்று. பிள்ளைப்பேற்றுத்துறையில் சிறப்புப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார் தேர்வு வைத்துத் தகுதி இதழ் தருதல் வேண்டுமென்று டாக்டரவர்கள் பல்கலைக் கழகத்தாரிடம் வற்புறுத்தினுர். அதன் பயனுகத் தேர்வு ஏற்படுத்தப் பட்டது. இத்துறையில் தேர்வு வைத்துத் தகுதி இதழ் வழங்குவதென்பதை இந்தியாவிலேயே முதன்முதலில் நடைமுறையில் கொணர்ந்த பெருமை நமது டாக்டரவர்களுக்கே உரியதாகும்.

## சிறந்த புலமையாளர்

மருத்துவத்துறைப்பற்றி டாக்டரவர்கள் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டு வந்தார் என்பதை முன்னர் அறிந்தோமல்லவா? 1928-ம் ஆண்டில் அவர் தம் துறைப்பற்றிச் சில சொற்பொழிவுகளைச் செய்தார். அச்சொற்

பொழிவுகள் 'எலிசபெத்மத்தாய் சொற்பொழிவுகள்' எனப் பெயர் பெற்றன. பின்னர் அவர் 'கர்சான்' சொற்பொழிவுகளும் செய்தார்; மருத்துவ மாணவர்க்கும் பேராசிரியர்க்கும் பயன்படும் வகையில் தம் தனித்துறை * பற்றி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூல் மருத்துவ மாணவர்க்குத் தக்கதுணையாக இன்றளவும் இருந்து வருகின்றது; உலக நாடுகள் எல்லாவற்றிலும் பாராட்டப்படுகின்றது. அந்நூலினால் டாக்டர் அவர்களது புகழ் உலக நாடுகளில் நன்கு பரவலாயிற்று. அவர் மருத்துவ உலகில் சிறப்புப் பெற்றதைக் கண்ட அரசாங்கத்தார், 1928-ஆம் ஆண்டில் 'இராவ்பகதூர்' என்னும் பட்டத்தை அவர்க்கு அளித்து மகிழ்ந்தனர். 1939-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் அவரை எழும்பூர் தாய் - சேய் மருத்துவமனைக்கு மேற்பார்வையாளராக நியமித்தனர். அதே ஆண்டில் அவர் மருத்துவக் கல்லூரிக்கும் தலைவராக நியமிக்கப் பட்டார். அப்பதவியை அவர் ஏற்றுக்கொண்ட பின்னர், பல்கலைக் கழகத்தாரைத் தூண்டி, மருந்து செய்வோர்க்குப் புதிய பட்டத்தேர்வை ஏற்படுத்தச் செய்தார். அம்முறை அதற்குமுன் இந்தியப் பல்கலைக் கழகங்களில் இல்லாதது என்பது குறிப்பிடத்தகும்.

## மருத்துவத்துறையில் தொண்டு

டாக்டரவர்கள் 'சென்னை மருத்துவர் கழகம்' என்னும் அமைப்பினை 1912-ஆம் ஆண்டில்

---

* Obstetrics and Gynecology.

தொடங்கினர். முதலில் அவர் அதற்குச் செயலாள ராகவும் பின்னர்த் தலைவராகவும் இருந்தார். அவர் சென்னை மருத்துவ ஆலோசனைக் கழக உறுப்பினராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். 1933-ஆம் ஆண்டில் இந்திய மருத்துவ ஆலோசனைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் டாக்டர் அவர்கள் அதன் உறுப்பினரானார்; பின்னர் அதன் செயற்குழு உறுப்பினராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார்.

சென்னை நகரில் பிள்ளைப்பேற்றால் இறப்பவர் என்னென்ன குறைபாடுகளால் இறக்கின்றனர் என்பது போன்ற பல விவரங்களைக்கொண்ட அறிக்கை ஒன்றனை 1930-ஆம் ஆண்டில் அவர் வெளியிட்டார். இந்தியாவில் அத்தகைய அறிக்கை யொன்று அப்போதுதான் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்டது என்னலாம். பிள்ளைப் பேற்றினைக் கவனித்துத் தொண்டு புரியும் மருத்துவர் மாநாடு இந்தியாவில் கூடியதே இல்லை. 1936-ஆம் ஆண்டில் அதனைச் சென்னையில் முதன் முதலாகக் கூட்டிய பெருமை நம் டாக்டரவர்களையே சாரும். அவர் பிள்ளைப்பேற்றுக் குரிய மருத்துவம் கற்பிக்கும் இலண்டன் இராயல் கல்லூரியுடன்* நெருங்கிய தொடர்பு கொண்டார்; அம்மருத்துவக் கழகத்துடன் தென்னிந்தியப் பகுதிக்குப் பல ஆண்டுகள் தலைவராயிருந்தார். 1946-ஆம் ஆண்டு முதல் இந்திய நடுக்குழுவின் தலைவராக இருந்தார்.

---

* Royal College of Obstetricians and Gynecologists.

இந்திய நாட்டுச் சுகாதார நிலையை மேலும் நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்திய அரசாங்கம் 1943-இல் குழு ஒன்றை அமைத்தது. அதில் நமது டாக்டர் மருத்துவக் கல்லூரிக்குரிய உட்குழுவின் தலைவராக இருந்து பணியாற்றினர்; நாடெங்கும் சென்று சுகாதார நிலைகளைக் கவனித்துச் சீர்செய்ய அமைக்கப்பட்ட குழுவிற்குத் தலைவராகவும் இருந்து தொண்டாற்றினர். உலக சுகாதாரக்கழக மாநாடு 1948-இல் ஜெனீவாவில் கூடியது. இந்திய அரசாங்கம் மருத்துவத்துறையில் வல்லவர்தம் குழு ஒன்றினை அம் மாநாட்டிற்கு அனுப்பியது. அக்குழுவின் துணைத் தலைவராய் நமது டாக்டர் சென்றார் என்பது குறிப்பிடக் தக்கது.


## செனட்' அவையும் 'சிண்டிகேட்' அவையும்

இந்தியப் பல்கலைக் கழகங்களுள் மிகச்சிறந்தது எனப் போற்றப்படுவது சென்னைப் பல்கலைக் கழகமே யாகும். அக்கழகத் தொடக்கத்தில் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களே பெரும்பாலராயிருந்தனர். பின்னர்ப் பல்கலைக் கழகச் சட்டங்கள் திருத்தி அமைக்கப் பட்டன. அதன்படி, பட்டம் பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரே பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் இருக்கும் உரிமை பெற்றனர். 1923-ஆம் ஆண்டில் டாக்டரவர்கள் 'செனட் அவை'த் தேர்தலுக்கு நின்றார்; வெற்றி பெற்றார். அன்று முதல் இன்றுவரையும் அவர் பல்கலைக்கழக உறுப்பினராகவே இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகத்தில் செயலாற்றும் குழு 'சிண்டிகேட்' எனப்படும். செனட் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினருள் சிலர் அதில் இருந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வர். 1925-ஆம் ஆண்டில் டாக்டரவர்கள் சிண்டிகேட்டில் இடம் பெற்றார். அப்பொழுது டாக்டர் மெஸ்டன், டாக்டர் காண்டெத், தந்தையார் பெட்ராம், கார்லி, சத்தியமூர்த்தி என்னும் அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். டாக்டர் பல்கலைக் கழக அவைகளான செனட், அக்கடமிக் கவுன்சில், சிண்டிகேட் என்னும் மூன்றிலும் உறுப்பினராயிருந்து தொண்டாற்றினார்.

## துணைவேந்தர்

டாக்டரவர்களின் பல்கலைக் கழகத் தொடர்பான தொண்டு எல்லோராலும் பாராட்டப்பட்டது. அதனால் *துணைவேந்தர்* பதவி சிறுபொழுது காலி ஏற்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் துணை வேந்தராய் அமர்த்தப்பட்டார். 1936-ஆம் ஆண்டிலும், 1940-ஆம் ஆண்டிலும் அவர்க்கு அந்த வாய்ப்புக்கள் கிடைத்தன. 1942-ஆம் ஆண்டில் அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெற்றார். அதுமுதல் இன்றுவரையிலும் அவரே அப்பதவியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பல ஆண்டுகளாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் துணைவேந்தர் பொறுப்பில் அவர் பணியாற்றிவருகின்றார் என்பது அவரது ஆட்சித் திறமையை நன்கு காட்டுகின்றதன்றோ?



சென்னைப் பல்கலைக் கழகம்:
துணைவேந்தர்
டாக்டர் முதலியாரது உருவச்சிலை.

## கல்வித்துறையில் தொண்டுகள்

டாக்டரவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டுகளைத் தமிழுலகம் மறவாது. வடமொழி அறிந்தவர் மட்டுமே தமிழில் வித்துவான் பட்டம் பெறமுடியும் என்னும் வகையில் பல்கலைக் கழகச் சட்டம் இருந்தது. அதனால் வடமொழி அறியாத தமிழர்கள் பட்டம் பெற முடியாமல் துயருற்றனர். நமது டாக்டர், தக்க தமிழறிஞர்களின் தூண்டுதலால், வடமொழி இன்றியே **தமிழ் வித்துவான்** பட்டம் பெறலாம் என்னும் தீர்மானத்தைப் பலத்த எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றினர். 1930-ஆம் ஆண்டுமுதல் **தனித்தமிழ்த் தேர்வுகள்** நடைபெறலாயின. வித்துவான் பட்டம் பெற்றவர்கள் ஆங்கிலப் பட்டம் பெற்றவர்களைப் போலச் சிறந்து விளங்கவேண்டும் என்னும் எண்ணம் கொண்ட அவர், பி. ஓ. எல்., பி. ஓ. எல். (ஆனர்சு) என்னும் பட்டத் தேர்வுகளை ஏற்படுத்தினர்.

அவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் ஆட்சிக் குழுத் தலைவராக இருந்தபொழுது, அக் கல்லூரியில் பி. ஓ. எல். (ஆனர்சு) வகுப்புக்களை ஏற்படுத்தினர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பெறும் இசைத் தேர்வுகளில் பெரும்பாலும் தெலுங்குப் பாடல்களே மிகுதியாகப் பாடப்பெற்று வந்தன. மாணவர் விரும்பினல் தமிழ்ப் பாடல்களையே பாடலாம் என்று அவர் கூறினர். அத் திட்டம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது. அவர் காலத்தில் ஏற்படுத்தப் பெற்ற தேர்வுகளில் கால்நடை மருத்துவர்க்கென்று புதிய பட்டத் தேர்வும், தாதியர்க்கென்று ஒரு தேர்வும், குடும்ப

ஆட்சிக் கலைக்கென்று ஒரு தேர்வும், மருந்துகள் மட்டும் பற்றிய பட்டத் தேர்வும் § குறிக்கத் தகுந்தன வாகும்; அறுவை மருத்துவத்திலும்,* மருந்துத் துறை மருத்துவத்திலும், † தக்கார்க்குச் சிறப்புப் பட்டங்கள் ‡ வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

வாணிகத் துறையைச் சாத்திரீய முறையில் கற்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு அமைக்கப்பட்டதே 'பி. காம்.' என்னும் பட்டத் தேர்வு. அத்தேர்வில் பலர் பங்குகொண்டு வெற்றி பெறும் முறையில் அப் பட்டப் படிப்புப் பல கல்லூரிகளில் டாக்டரவர்களது முயற்சியால் இடம் பெற்றது.

கல்வித் துறையில் அப்பெருமகனார் பேராற்றல் கொண்டவர் என்பதை உணர்ந்த இந்திய அரசியலார், அவரை இந்தியாவிலும் அயல் நாடு களிலும் அவ்வப்பொழுது நடைபெறும் மாநாடுகளி லெல்லாம் பங்கு கொள்ளுமாறு செய்து வருகின்றனர். 1929, 1932-இல் டெல்ஹி யிலும், 1934-ல் பம்பாயிலும், 1943-இல் ஹைதராபாத்திலும் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழக மாநாடுகளில் சென்னை மாநிலத்தின் பிரதிநிதி யாக அவர் கலந்து கொண்டார். 1948-49-ஆம் ஆண்டுகளில் இந்தியப் பல்கலைக் கழகக் குழுவின் தலைவராய் இருந்தார். இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அறிவியற்கலை, தொழிற்கலை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆட்சிக் குழுவிலும்,

§ Degree in Pharmacy. * Surgery. † Medicine.
‡ M. Sc , Ph. D., D. Sc.

இந்திய அரசாங்கத்திற்குக் கல்வித்துறையில் அறிவுரை கூறும் கழகத்திலும் அவர் உறுப்பினராய் இருந்து வருகின்றார்.

நமது டாக்டர் 1948-ஆம் ஆண்டில் பிரிட்டனுக்குச் சென்று பிரிஸ்டலில் நடைபெற்ற உலகப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டிற் பங்குகொண்டார். பிரிட்டன் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் பல்கலைக் கழகங்களின் மாநாடு ஆக்ஸ்போர்டில் நடைபெற்றது. அதிலும் அவர் கலந்து கொண்டார்.

## எங்கும் புகழ்

டாக்டரவர்களின் பொதுநலத் தொண்டினைப் பாராட்டிப் பல பல்கலைக் கழகங்களும், பொது அமைப்புக்களும் பட்டமளித்துச் சிறப்பித்தன. அரசாங்கத்தினர் அவருக்கு இராவ்பகதூர், திவான்பகதூர், சர் முதலிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தனர். இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்கு ***டாக்டர்** பட்டம் வழங்கியது; ஆந்திரப் பல்கலைக் கழகம் கௌரவ *டி. எஸ். ஸி.* பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது; ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகம் *டி. ஸி. எல்.* பட்டத்தை வழங்கியது. அவர் 1941-ஆம் ஆண்டில் ‡அமெரிக்க அறுவை மருத்துவக் கல்லூரிச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* LL. D.

‡ Fellow of the American College of Surgeons.

***ஐக்கிய நாடுகள் சபையில்*** உலக சுகாதாரக் குழு ஒன்று உண்டு. அக்குழுவினருள் நமது டாக்டரும் ஒருவராவர். இதுபொருட்டு அவர் பல முறை மேனாடுகள் சென்று வருகின்றார்; கல்வி மாநாடுகளிலும், மருத்துவ மாநாடுகளிலும், சுகாதார மாநாடுகளிலும் அவர் இந்தியக் குழுவின் தலைவராகவோ, செயலாளராகவோ, சிறப்பு உறுப்பினராகவோ செல்வது வழக்கம்.

அப்பெரியார் நமது சென்னை மாநில ***மேல்சட்டசபையில்*** உறுப்பினராகி, எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்; அரசாங்கம் செய்யும் நற்செயல்களை உளமாரப் பாராட்டுவார். தவறு என்று பட்டவற்றைத் தக்க காரணங்கள் காட்டிக் கண்டிப்பது அவர் இயல்பு. சென்னை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் அவருடைய முதிர்ந்த அநுபவத்திலிருந்து வெளிப்படும் கருத்துக்களுக்கு உரிய மதிப்பை அளித்துவருதல் பாராட்டத் தக்கது.

இங்ஙனம் நல்லியல்புகள் பலவும், கூர்த்த அறிவும், பேச்சுத் திறனும் ஒருங்கே அமையப் பெற்ற டாக்டரவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் நல்ல தொண்டுகள் புரிய வேண்டும் என்பது அறிஞர் விருப்பமாகும்.